189 மாசிலாமணி, திரு. தி. ரா. ..	பூந்தமல்லி
190 மாதப்பன், திரு. கொ. ..	பாலக்கோடு
191 மாரப்பன், திரு. பி. ..	காங்கேயம்
192 மாரிமுத்து, திரு. அ. ..	வானூர் (செ.வ.)
193 முகமது சித்திக், திரு. எம். ..	பூம்புகார்
194 முத்துசாமி, திரு. ப. ..	வேடசந்தூர்
195 முத்தையன், திரு. எம். ..	சங்கராபுரம்
196 முத்தையா, திரு. எம். ..	ஓட்டப்பிடாரம் (செ.வ).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"ம"—தொடர்ச்சி	
197 முருகேசன், திரு. பொ. ..	காஞ்சீபுரம்
198 முல்லைவேந்தன், திரு. வ. ..	மொரப்பூர்
199 முனிரத்தினம், திரு. ஆ. மு. ..	சோளிங்கர்
200 முனிரத்தினம், திரு. எஸ். ஆர்.	திருவள்ளூர்
201 மூக்கன், திரு. ஆர்.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
202 மூக்கையா, திரு. எல். ..	பெரியகுளம்
203 மோகன், திரு. இரா. ..	சிங்காநல்லூர்
204 மோசஸ், திரு. எம். ..	நாகர்கோவில்
"ய"	
205 யசோதா செல்லப்பா, திருமதி	வலங்கைமான் (செ.வ.)
"ர"	
206 ரமணி, திரு. கே.	கோவை (கிழக்கு).
207 ரமணி நல்லதம்பி, திருமதி ..	ராதாபுரம்
208 ரவி அருணன், திரு. ..	அம்பாசமுத்திரம்
209 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.	ஓசூர்
210 ராமச்சந்திரன், திரு. கே. ..	மன்னார்குடி
211 ராமச்சந்திரன், திரு. சி. ..	திருப்பரங்குன்றம்
212 ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப.	அரவக்குறிச்சி.
213 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். ..	ஆலங்குளம்
214 ராஜு, திரு. எச். எம். ..	உதகமண்டலம்
215 ராஜேந்திரன் திரு., எம். எஸ். கே.	இராமநாதபுரம்.
"ல"	
216 லட்சுமி, திருமதி பி. ..	வால்பாறை (செ.வ.)
"வ"	
217 வரதராசன், திரு. ஆர். ..	சங்கரி (செ.வ.)
218 வரதராசன், திரு. உ. ரா. ..	வில்லிவாக்கம்
219 வல்லரசு, திரு. பி. என். ..	உசிலம்பட்டி
220 விஜயராகவன், திரு. பொன்...	கிள்ளியூர்
221 விஜயேந்திரையா, திரு. டி. சி.	தளி
222 வீராசாமி, திரு. ஆற்காடு நா.	புரசைவாக்கம்
223 வீரையன், திரு. கோ. ..	நாகப்பட்டினம்
224 வெங்கடாசலம், திரு. பெ. ..	வீரபாண்டி
225 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.	ஸ்ரீரங்கம்
226 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. ..	தொண்டாமுத்தூர்
227 வேணு, திரு. கி.	கும்மிடிப்பூண்டி
228 வைத்தியலிங்கம், திரு. மீ. அ.	தாம்பரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
" ஸ "	
229 ஸ்டாலின், திரு. மு. க. ..	ஆயிரம் விளக்கு
" ஜ "	
230 ஜெயலலிதா, செல்வி ஜெ.	போடிநாயக்கனூர்
" ஹ "	
231 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு.	கடலாடி
" ஸ்ரீ "	
232 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். ..	சைதாப்பேட்டை
233 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. ..	நியமன உறுப்பினர்.

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகர்சாமி,
தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 20, திங்கட்கிழமை.

மாசி 9, விபவ—திருவள்ளுவர் ஆண்டு-2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்".

எண்ணியவற்றைச் செயற்படுத்துவதில் உறுதியுடையவராக இருந்தால் அதனை எண்ணியவர் எண்ணியவற்றை எண்ணியவாறே எய்துவார்.

[குறிப்பு : ஓர் உரையின் துவக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. உரிமைப் பிரச்சினை—

"நமது எம்.ஜி.ஆர்." நாளிதழ் மீது

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நான் தங்களிடம் சபை உரிமையை மீறி இருக்கக்கூடிய ஒரு பத்திரிக்கை சம்பந்தமாக ஓர் உரிமைப் பிரச்சினையைத் தந்திருக்கிறேன். குறிப்பாக 14 ஆம் தேதியன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் பேசி இருக்கக்கூடிய பேச்சு 'நமது எம்.ஜி.ஆர்.' என்ற பத்திரிக்கையில் திரித்து, புரட்டி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆம் தேதி இதழில் கருணாநிதி ஆட்சியில் குடிசைத் தொழில்போல் கள்ளச் சாராயக் கடைகள் பெருகிவிட்டன என்று நான் குற்றம் சாட்டியதாக அதில் கூறியிருக்கிறார்கள். அந்த வாசகங்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். "கருணாநிதி ஆட்சியில் குடிசைத் தொழில் போல கள்ளச் சாராயம் நடைபெறுவதாக மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் குற்றம் சாட்டினார். தி. மு. க. ஆட்சியில் தெருவுக்குத் தெரு கள்ளச் சாராயம் விற்பனை செய்யப் படுகிறது. குடிசைத் தொழில்போல ஒவ்வொரு வீட்டிலும் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டு வருகிறது. 'நமது எம்.ஜி.ஆர்.' நாளிதழில் செய்திகள் வந்த வண்ணம் இருந்தாலும், திராவிட

முன்னேற்றக் கழக அரசு கண்டு கொள்ளவில்லை" என்று சொல்லி, பிறகு அவர்கள் கூறுகிறார்கள். "இதைப் பற்றி பாப்பா உமாநாத் கூறியதுடன், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்து, வெற்றி பெற்ற மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் சட்டசபையில் இப்போது பேசி, தி.மு.க. வினர் செயல்களையும், போலீசாரின் திறமையின்மையையும் அம்பலப் படுத்தியிருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்கள். நான் பேசிய பேச்சு அவ்வாறல்ல என்பதை அவை அறியும். அதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். எனவே இது சபையினுடைய உரிமையை மீறக்கூடிய பிரச்சினை என்பது மட்டுமல்ல இந்தப் பத்திரிகையினுடைய நிருவனராகவும், பிரசுரகர்த்தாவாகவும் இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் இருக்கிறார் என்ப தால், இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக பேரவைத் தலைவர் விடை சொன்ன பிறகுதான் தாங்கள் எழுப்ப வேண்டும். இது குறித்துப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி, விளக்கம் கேட்டு, பின் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

2. தகவல் கோரல்.

(அ) மின் கட்டண பாக்கிக்காக மின் துண்டிப்பு செய்வதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, விவசாயம் சம்பந்தப்பட்ட முக்கியமானதொரு விஷயம் சம்பந்தமாக மாண்புமிகு மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வந்து, இந்த அவையிலே அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன். கடந்த காலத்தினுடைய மின்சார பாக்கி சம்பந்த மாகச் சொல்ல விரும்புகிறேன். 5 குதிரை சக்தியுள்ள மோட்டார் களை வைக்காமலேயே அக்ரிமெண்ட் எழுதிக் கொடுதவர்களிட மிருந்து 3 குதிரைச் சக்தி மோட்டாருக்குரிய பணம்தான் வசூலிக் கப்பட்டு வந்தது. இப்போது 5 குதிரைச் சக்திக்குரிய பணம் கட்ட வேண்டுமென்று காரணம் சொல்லி, பல இடங்களில் மின் இணைப்புத் துண்டிப்பு நடந்து கொண்டு வருகிறது. மிகவும்

முன்னேற்றக் கழக அரசு கண்டு கொள்ளவில்லை" என்று சொல்லி, பிறகு அவர்கள் கூறுகிறார்கள். "இதைப் பற்றி பாப்பா உமாநாத் கூறியதுடன், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்து, வெற்றி பெற்ற மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் சட்டசபையில் இப்போது பேசி, தி.மு.க. வினர் செயல்களையும், போலீசாரின் நிறமையின்மையையும் அம்பலப் படுத்தியிருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்கள். நான் பேசிய பேச்சு அவ்வாறல்ல என்பதை அவை அறியும். அதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். எனவே இது சபையினுடைய உரிமையை மீறக்கூடிய பிரச்சினை என்பது மட்டுமல்ல இந்தப் பத்திரிகையினுடைய நிறுவனராகவும், பிரசுரகர்த்தாவாகவும் இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் இருக்கிறார் என்பதால், இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக பேரவைத் தலைவர் விடை சொன்ன பிறகுதான் தாங்கள் எழுப்ப வேண்டும். இது குறித்துப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி, விளக்கம் கேட்டு, பின் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

2. தகவல் கோரல்.

(அ) மின் கட்டண பாக்கிக்காக மின் துண்டிப்பு செய்வதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயம் சம்பந்தப்பட்ட முக்கியமானதொரு விஷயம் சம்பந்தமாக மாண்புமிகு மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வந்து, இந்த அவையிலே அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன். கடந்த காலத்தினுடைய மின்சார பாக்கி சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். 5 குதிரை சக்தியுள்ள மோட்டார்களை வைக்காமலேயே, அக்ரிமெண்ட் எழுதிக் கொடுதவர்களிடமிருந்து 3 குதிரைச் சக்தி மோட்டாருக்குரிய பணம்தான் வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது 5 குதிரைச் சக்திக்குரிய பணம் கட்ட வேண்டுமென்று காரணம் சொல்லி, பல இடங்களில் மின் இணைப்புத் துண்டிப்பு நடந்து கொண்டு வருகிறது. மிகவும்

[1989 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

கஷ்டமான நிலையிலே இருக்கிற விவசாயிகள் அரைகுறைத் தண்ணீரைக்கூட, வரக்கூடிய மின்சாரத்தைக் கொண்டு உபயோகிக்க முடியாமல் ஒரு நெருக்கடி இருக்கிறது. எனவே மின் துண்டிப்பை உடன் நிறுத்தி, அது குறித்துப் பரிசீலனை செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை இப்போதுதான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தக்க அவகாசம் எடுத்துக்கொண்டு அதற்குரிய தொடர்புடைய அமைச்சரவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள், இங்கே கூறிய அந்தக் குறைபாடு குறித்து விளக்கமாக அரசுக்கு எழுதி அனுப்புவார்களேயானால், ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதை விளக்கமாக எழுதி அனுப்புமாறு முதலமைச்சரவர்கள் சொன்னதால், அதை விளக்கமாக எழுதி அனுப்பினால் தக்கவாறு அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது துண்டிக்கப்படுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அது குறித்து எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி முறையாக இதுவரை யாரும் தெரிவிக்கவில்லை. அண்ணன் அவர்கள் முறையாகத் தெரிவிப்பார்களானால் அதிகாரிகளிடம் தக்க பதிலை வாங்கி, சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து 'மாண்புமிகு உறுப்பினர் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1989 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

கஷ்டமான நிலையிலே இருக்கிற விவசாயிகள் அரைகுறைத் தண்ணீரைக்கூட, வரக்கூடிய மின்சாரத்தைக் கொண்டு உபயோகிக்க முடியாமல் ஒரு நெருக்கடி இருக்கிறது. எனவே மின் துண்டிப்பை உடன் நிறுத்தி, அது குறித்துப் பரிசிலனை செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை இப்போதுதான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தக்க அவகாசம் எடுத்துக்கொண்டு அதற்குரிய தொடர்புடைய அமைச்சரவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள், இங்கே கூறிய அந்தக் குறைபாடு குறித்து விளக்கமாக அரசுக்கு எழுதி அனுப்புவார்களேயானால், ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதை விளக்கமாக எழுதி அனுப்புமாறு முதலமைச்சரவர்கள் சொன்னதால், அதை விளக்கமாக எழுதி அனுப்பினால் தக்கவாறு அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது துண்டிக்கப்படுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அது குறித்து எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவரவர்களே, இதைப் பற்றி முறையாக இதுவரை யாரும் தெரிவிக்கவில்லை. அண்ணன் அவர்கள் முறையாகத் தெரிவிப்பார்களானால் அதிகாரிகளிடம் தக்க பதிலை வாங்கி, சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து 'மாண்புமிகு உறுப்பினர் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

* திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கிப் பகுதியில் கடும் குடிநீர்ப் பஞ்சத்தின் காரணமாகவும் வறட்சியாலும் 'காலரா' நோய் பரவி, பலபேர் இறந்திருக்கிறார்கள். பலர் பல்வேறு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை அரசுக்குத் தெரிவித்து அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்டேன். அதையொட்டித் தாங்களும் அரசின் சார்பில் அறிக்கை ஒன்றை வைக்கச் சொன்னீர்கள். அந்த அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ 6 லட்சம் குத்தகை விவசாயிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு செய்தியைக் குறித்து வினா எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான விடையை அறிந்த பிறகு, அடுத்த செய்திக்குப் போவதுதானே முறையாக இருக்கும். அருள் கூர்ந்து உட்காருங்கள்.

* மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய சந்தேகத்தின்பேரில், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மருத்துவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் கொடுத்துள்ள தகவலை இந்த அவையின் முன் வைக்கிறேன்.

"புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மருத்துவ மனையில் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள் முதல் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாள் வரையான காலத்தில் 44 பேர்கள் 'காலராவாக' இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியம் செய்யப்பட்டார்கள். அதில், பதினைந்து பேர்கள் மட்டும் இன்னும் மருத்துவ மனையிலேயே இருக்கிறார்கள். அது 'காலராவா' என்பதை முடிவு செய்வதற்காக அதற்

சூரிய சோதனைக்காக கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது திரும்ப வருவதற்கு 5 நாட்கள் ஆகும் என்ற அடிப்படையில் அது காலரா தானா என்று முடிவெடுப்பதற்கு முடியவில்லை.".

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலை காரணமாக எத்தனை பேர் மருத்துவ மனைகளிலும், கிராமங்களிலும் இறந்திருக்கிறார்கள் என்கிற தகவல் பெறப்பட்டிருக்கிறதா ? இன்னும் 5 நாட்கள் கழித்து முடிவு தெரிந்த பிறகு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், ஏற்கெனவே அந்தப் பகுதியில் அது காலராதான் என்ற பயமும், பீதியும் மக்களிடத்தில் இருக்கிற காரணத்தால்—ஏனென்றால் இரண்டொரு கிராமத்தில் இருந்தோ அல்லது அறந்தாங்கியில் ஒரு தெருவிலிருந்தோ இந்த 45 பேரும் அனுமதிக்கப்படவில்லை, பல கிராமங்களிலிருந்து வயிற்றுப் போக்கால் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது காலராதான் என்று அந்தப் பீதி பெரிய அளவில் அந்தப் பகுதியிலும் இன்னும் மற்ற பகுதிகளிலும் பரவி இருக்கிறது, எனவே—அரசின் சார்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் மருத்துவர் குழு ஒன்று அங்கே மருந்துகளோடு அனுப்பி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி குறித்து நானும் நேற்று சம்பந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரியோடு பேசினேன். அதனடிப்படையில் நான் குறிப்பிட்ட செய்தி, "காலராதானா என்று உறுதி செய்யத்தான் 5 நாட்களாகும்" என்றேனே தவிர நடவடிக்கை எடுக்க 5 நாட்களாகும் என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்து, ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கிற மருத்துவர்கள் அனைவரும் அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்குக் காரணமான நீர் போன்றவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இப்போதே தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் இப்போவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இதனால் எத்தனைபேர் இறந் திருக்கிறார்கள் என்ற செய்தி பெறப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்படி விவரம் கேட்டால், 'தனிக் கேள்வி போடுங்கள்' என்றுதான் சொல்ல வேண்டி வரும். இப்படி நேருக்கு நேர் கேள்வி கேட்டு, உடனுக்குடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்வது என்பது சாத்தியமில்லை. தாங்கள் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறீர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இறந்ததாகத் தகவல் ஏதும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) குத்தகை பாக்கிக்காக விவசாயிகள் நிலத்திலிருந்து வெளி யேற்றப்படும் நிலை.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தங்கள் மூலமாக அரசாங்கத்திடமிருந்து ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசு, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் பிரச் சினைக்குத் தீர்வு காணாமல் ஒத்திப்போட்டு, ஒத்திபோட்டு வந்த தன் காரணமாக, தற்போது 50,000-க்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் மீதான வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டில் இருந்து வருகின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது திடீ ரென்று குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து எவிக்ஷன் என் கின்ற முறையில் வெளியேற்றுகிறார்கள். அப்படி வெளியேற்று வதன் மூலமாக ஒரு தவறான எண்ணத்தை இந்த அரசின்மீது உண்டாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விவசாயி களின் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். குத்தகை பாக்கியை எப்படித் தீர்ப்பது என் பதைப் பின்னால் பார்த்துக் கொண்டாலும், நிலத்திலிருந்து அவர்களைத் தற்போது வெளியேற்றுவதை உடனடியாகத் தடை செய்து அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

1939 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விரையன் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை மீது அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நல்லதொரு முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. குத்தகை கட்டுவதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றாலும் கூட இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் அவைகளை மேற்கொண்டு தொடராமல் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக விரைவில் உத்தரவு பிறப் பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது சிலபேர் அங்கே இறந்து போயிருக்கிறார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன். (குறுக்கீடு) முதல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஒத்துழைத்தால் மற்ற உறுப்பினர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு பிரச்சினை கிளப்பப் பட்டு, அது முடிவுற்று அதற்கு பிறகு வேறு ஒரு பிரச்சினைக்குப் போய் அதற்கு மாண்புமிகு முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, 'ரெட்டி ஓச்சி, முதல் ஓச்சி' என்பது மாதிரி மறுபடியும் முதல் சப்ஜெக்டிற்கே போவது நியாயமல்ல, முறையல்ல. அதைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை முடிந்தவுடனே நான் எழுந்தேன். எதிர்க்கட்சியின் இன்னொரு முக்கிய தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்புகிறார், நீங்கள் உட்காருங்கள் என்று தாங்கள் சொன்னதால்தான் உட்

கார்ந்தேன். எனவே இதிலே சட்டப் பிரச்சினை எதுவுமில்லை. உயிர்ப் பிரச்சினை என்பதால் திரும்பவும் சொல்கிறேன். பலபேர் இறந்ததாகத் தகவல் என்று நான் சொன்னேன். அதுபோன்ற தகவல் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகவல் இல்லையென்றால் யாரும் இறக்கவில்லையென்று சொல்லப் பட்டிருக்கிறதா ? அதுபற்றி நீங்கள் கேட்டீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நான் மேலும் விவாதங்களை அனுமதிக்கப்போவதில்லை. ஏனென்று கேட்டால் நீங்கள் நேருக்கு நேர் கேட்டு ஓர் அமைச்சர் முழுமையாகப் பதில் சொல்வதென்பது சாத்தியமாகாது. உங்களுடைய முழு எண்ணமும் புரிகிறது. அவையின் கவனத்திற்குக்கொண்டு வந்த பிறகு இதில் தக்க நடவடிக்கையெடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் அமர வேண்டுகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, அறந்தாங்கி பகுதியில் இருக்கும் காலரா பற்றிப் பேசினார்கள். அறந்தாங்கிக்குப் பக்கத்தில்தான் பேராவூரணி இருக்கிறது. எனவே அறந்தாங்கியிலிருந்த காலரா பேராவூரணிக்கு வராமல் தயவுசெய்து முன் கூட்டியே திட்டமிட்டு நடவடிக்கையெடுத்து, பேராவூரணி பகுதி பகுதி மக்களைக் காப்பாற்ற முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களின் மிகப் பெரிய ஆர்வத்தைப் பாராட்டி, இது பேராவூரணி வரைக்கும் வராமல் தடுக்கக் கண்டிப்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவல் அவைக்கு வரக்கூடாது என்பதற்காக நான் திரும்பவும் சொல்கிறேன். பலபேர் இறந்து போயிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மக்கள் பீதியாக இருக்கிறார்கள். எனவே யாரும் சாகவில்லையென்ற தகவல் இங்கேயிருந்து போகுமானால், பத்திரிகைகளில் வருமானால், அது அரசுக்குத்தான் கெட்ட பெயரை உருவாக்கும். காரணம் அங்கே மக்கள் இறந்திருக்கிறார்கள். அது பற்றிக்கேட்டீர்களா, இல்லையா ?

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது யாரும் இறந்துபோக வில்லையென்று சொல்லவில்லை. அதுகுறித்து தகவல் எதுவும் வரவில்லையென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறிய அந்த தகவலின் அடிப் படையில் யாராவது இறந்திருக்கிறார்களா என்ற தகவல் அறிய வும் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் சனிக்கிழமையன்று இறந்த தகவலைச் சொன்னேன். செத்துப் போன பிரச்சினையிலேகூட அதைக் கேட்டுத் தெரிந்து சொல் வதற்கு மூன்று நாட்கள் அவகாசம் தேவையா ? கேட்கிறபோதே இறந்தார்களா இல்லையா என்று கேட்டு, எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்பதை உடனடியாகத் தெரிந்து சொல்ல முடி யாதா ? இதிலே அரசு இவ்வளவு காலந்தாழ்த்துகிறதே என்று என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து அரசு தெரிந்து சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நேற்று இரவுகூட நான் அங்கேயிருந்த மருத் துவரோடு பேசியிருக்கிறேன். இன்று காலையில்கூட டி.எம்.எஸ். அவர்களை வரவழைத்து இது குறித்து சொல்லிவிட்டு வந்திருக் கிறேன். எனவே அரசு கவனம் செலுத்தவில்லையென்பது தவ றான கூற்றாகும். மேலும் இதை நான் விசாரித்தபோது, யாரும் இறந்திருக்கிறார்களா என்று கேட்டபோது இதுவரையில் தகவல் இல்லையென்று பதில் கிடைத்து இருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லிய கருத்து உண்மையாக இருக்கு மானால் மேலும் இதுபற்றி விசாரிப்பதற்காக முயற்சியெடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறேனே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினருக்கு வந்த செய்திகள் மட்டும் உண்மையாக இருக்கு மென்று சொல்லிவிட முடியாது. அங்கே பலபேர் இறந்திருக்க லாம். இறந்தவர்கள் காலராவால் இறந்தார்களா என்பதை அரசு தரப்பிலிருந்து நாங்கள்தான் கேட்டுப் பெறவேண்டுமென்ற காரணத்தால் அந்தச் செய்தியைப் பற்றி மேலும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, காலரா பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற நேரத்தில் மன்னார்குடியில் ஒரு சுகாதார அதிகாரி ஞாயிற்றுக்கிழமை, தான் பணிக்கு வர முடியாது என்று சொன்னதாகச் செய்திகள் கேள்விப்படு கிறோம். அப்படிப்பட்ட மக்கள் நலனைப் புறக்கணிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, யார் தங்களுடைய பணியிலிருந்து தவறினாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) வெள்ளக்கிணறில் உள்ள கொங்கு நாடு கலை, அறிவியல், கல்லூரி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி மற்றும் யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை வட்டம், வெள்ளக்கிணறு பேரூராட்சிக்கு உட்பட்ட கொங்கு நாடு கலை, அறிவியல் கல்லூரியை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாள் முதல் நிர்வாகம் மூடிவிட்டதால், மாணவர் கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை.

கல்லூரிகளில் ஏற்படும் மாணவர் பிரச்சினைகளுக்கு முடிவு காண உதவி புரிய ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு மாணவர் நலக் குழு நிறுவ 1979-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட் டுள்ளது. இக்குழுவிற்கு கல்லூரி முதல்வர் தலைவராவார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இதனால் எத்தனைபேர் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி பெறப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்படி விவரம் கேட்டால், 'தனிக் கேள்வி போடுங்கள்' என்றுதான் சொல்ல வேண்டி வரும். இப்படி நேருக்கு நேர் கேள்வி கேட்டு, உடனுக்குடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்வது என்பது சாத்தியமில்லை. தாங்கள் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இறந்ததாகத் தகவல் ஏதும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) குத்தகை பாக்கிக்காக விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசாங்கத்திடமிருந்து ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசு, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் ஒத்திப்போட்டு, ஒத்திபோட்டு வந்ததன் காரணமாக, தற்போது 50,000-க்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் மீதான வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டில் இருந்து வருகின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது திடீரென்று குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து எவிக்ஷன் என்கின்ற முறையில் வெளியேற்றுகிறார்கள். அப்படி வெளியேற்றுவதன் மூலமாக ஒரு தவறான எண்ணத்தை இந்த அரசின்மீது உண்டாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விவசாயிகளின் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். குத்தகை பாக்கியை எப்படித் தீர்ப்பது என்பதைப் பின்னால் பார்த்துக் கொண்டாலும், நிலத்திலிருந்து அவர்களைத் தற்போது வெளியேற்றுவதை உடனடியாகத் தடை செய்து அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1939 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விரையன் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை மீது அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நல்லதொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. குத்தகை கட்டுவதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றாலும் கூட இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் அவைகளை மேற்கொண்டு தொடராமல் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது சிலபேர் அங்கே இறந்து போயிருக்கிறார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன். (குறுக்கீடு) முதல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஒத்துழைத்தால் மற்ற உறுப்பினர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டு, அது முடிவுற்று அதற்கு பிறகு வேறு ஒரு பிரச்சினைக்குப் போய் அதற்கு மாண்புமிகு முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, 'ரெட்டி ஒச்சி, முதல் ஒச்சி' என்பது மாதிரி மறுபடியும் முதல் சப்ஜெட்டிற்கே போவது நியாயமல்ல, முறையல்ல. அதைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை முடிந்தவுடனே நான் எழுந்தேன். எதிர்க்கட்சியின் இன்னொரு முக்கிய தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்புகிறார், நீங்கள் உட்காருங்கள் என்று தாங்கள் சொன்னதால்தான் உட்

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, காலரா பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற நேரத்தில் மன்னார்குடியில் ஒரு சுகாதார அதிகாரி ஞாயிற்றுக்கிழமை, தான் பணிக்கு வர முடியாது என்று சொன்னதாகச் செய்திகள் கேள்விப்படு கிறோம். அப்படிப்பட்ட மக்கள் நலனைப் புறக்கணிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, யார் தங்களுடைய பணியிலிருந்து தவறினாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) வெள்ளக்கிணறில் உள்ள கொங்கு நாடு கலை, அறிவியல், கல்லூரி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி மற்றும் யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை வட்டம், வெள்ளக்கிணறு பேரூராட்சிக்கு உட்பட்ட கொங்கு நாடு கலை, அறிவியல் கல்லூரியை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாள் முதல் நிர்வாகம் மூடிவிட்டதால், மாணவர் கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

கல்லூரிகளில் ஏற்படும் மாணவர் பிரச்சினைகளுக்கு முடிவு காண உதவி புரிய ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு மாணவர் நலக் குழு நிறுவ 1979-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட் டுள்ளது. இக்குழுவிற்கு கல்லூரி முதல்வர் தலைவராவார்.

தொடர்புள்ள மண்டலத் துணை இயக்குநர் ஓர் உறுப்பினர் ஆவார். இம்முறைப்படி 1988-89-க்கான நலக்குழு ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் அந்தந்தத் துறைத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாணவர்களுடன் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் அன்று அமைக்கப்பட்டது என கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் தெரிவித்துள்ளார். ஆனால் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அன்று மாணவர் பேரவைக்குத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மாணவர் நலக்குழு பிரதிநிதிகள் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அன்று கூடி மாணவர் பேரவைக்குத் தேர்தல்கள் நடத்த வேண்டாமென்று முதல்வரைக் கேட்டுக் கொண்டனர். 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் மற்றும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் நாள் அன்று நடந்த பெற்றோர் சங்கக் கூட்டங்களில் தேர்தல்கள் வேண்டாமெனவும் கல்லூரியில் அமுலில் உள்ள பிரதிநிதிமுறையையே தொடர்ந்து அமுல்படுத்துமாறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கல்லூரி நிர்வாகக் குழுவும் (College Committee 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று கூடி மாணவர் தேர்தல்கள் வேண்டாமெனத் தீர்மானம் செய்தது. ஆனால் தேர்தல்கள் வேண்டுமென மாணவர்கள் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் முதல் உண்ணாவிரதமிருந்து ஊர்வலம் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரை இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு வேண்டினர். மாணவர்களைச் சமாதானப்படுத்தவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உதவி ஆட்சியாளர் இப்பிரச்சினையில் தலையிட்டு தனது தலைமையில் நான்கு மாணவர்கள் கொண்ட ஒரு குழுவை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று அமைத்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கோரிக்கைகளைக் கல்லூரி நிர்வாகம் ஏற்றது. மாணவர்களும் தங்களது வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றனர். ஆனால் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் அன்று கல்லூரி முதல்வர் மாணவர் நலக்குழு அமைக்கப்பட்டிருப்பதாக அறிக்கை வெளியிட்டார். மேலும் பெற்றோர் சங்கமும் இம்மாணவர் நலக்குழுவும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் அன்று கூடி பிரச்சினைகளைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்கும் என

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 பிப்ரவரி 20

வும் முதல்வர் அறிவித்தார். மேலும் வகுப்புகள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் முதல் படிப்படியாகத் தொடங்குமெனவும் அறிவித்தார். வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்ற 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாள் அன்று கல்லூரிக்கு வந்த மாணவர்களிடையே முதல்வர் அறிவிப்பைப் பார்த்த உடனே பதட்டநிலை உருவாகியது. இதனைத் தொடர்ந்து கல்லூரி நிர்வாகம் கல்லூரியைக் காலவரையின்றி மூடி விடுதியில் உள்ள மாணவர்களையும் அறைகளைக் காலி செய்யச் சொல்லியது. இந்நிலையில் மாணவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை இப்பிரச்சினையில் குறுக்கிட்டு கல்லூரியைத் திறக்க ஆவன செய்யுமாறு வேண்டியுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிற்குத் தெரிவித்துள்ளார். மேற்கூறிய குழுவில் கோவை மண்டலக் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் கல்லூரியை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று கல்லூரி முதல்வருக்கு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் லிருந்து வகுப்புகள் படிப்படியாக 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாளுக்குள் திறக்கப்படும் என முதல்வர் அறிவித்தார். கல்லூரிக் கல்வி இயக்குநர் பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆகியோரும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை எடுத்தனர். இப்பேச்சுவார்த்தைகளிடையே கல்லூரி முதல்வர் சுவாமி விவேகானந்தர் மற்றும் காந்தியடிகளின் கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இக்கல்லூரியை அவர்களின் கொள்கைப்படி நடத்த முடியாத சூழ்நிலையில் நிர்வாகம் கல்லூரியை அரசுக்கு சரண் செய்யக் கூடத் தயாராக உள்ளது எனக் கூறினார் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14 ஆம் நாள் அன்று துணை இயக்குநர் கல்லூரிக்குச் சென்று ஆய்வு நடத்தியதில் 1068 மாணவர்களில் 85 மாணவர்களே கல்லூரிக்கு வந்திருப்பதாகத் தெரிவித்து உள்ளார். துணை இயக்குநர் உடனடியாகக் கல்லூரிக்குச் சென்று நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்து கல்லூரியை முழு அளவில் திறக்கவும் சமூகச் சூழ்நிலையில் செயல்படவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளார். கோவை மண்டலத் துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் மாணவர்கள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் போராட்டத்தை நிறுத்திவிட்டு படிப்படியாகக் கல்லூரிக்குத் வரத் துவங்கிவிட்டனர் என்று தற்பொழுது தெரிவித்துள்ளார்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக இரண்டு வினாக்களை எழுப்பலாம்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே கல்லூரி முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான விவரங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் உண்மைக்கு நேர்மாறானவை என்பதை நான் வருத்தத்தோடு எடுத்துச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. மாணவர்கள் கேட்டது, மாணவர் நலக்குழு அங்கே ஏற்படுத்தப்படவேண்டும் என்பது. அந்தக் கல்லூரியிலே பெருவாரியாக கழிப்பறைகளுக்குக் கட்டிடமே கிடையாது. அதற்குமாறாக மட்டையினாலே கூரை வேய்ந்திருக்கும்படியான இடங்களாக இருக்கின்றன. ஆணும், பெண்ணும், இருபாலாரும் படிக்கின்ற இடம். அங்கே ஒழுங்கான கழிப்பிட வசதி கிடையாது. அதற்காகவே அங்கே போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆசிரியர்களுடைய பெரிய போராட்டம் முன்பே நடந்திருக்கிறது அவர்களுக்கு அங்கே நியாயம் வழங்கவில்லை, மதிப்பு அளிக்கவில்லை என்று. ஏராளமான பணம் வாங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் அவர்களே, இது வினாவா, விடையா ? நான் தங்களை அனுமதித்தது வினா கேட்க மட்டுமே.

திரு. கே. ரமணி : வினா சொன்னால், வினா எழுகின்ற ஒரு அடிப்படையை பாராளுமன்றத்தில்கூட சொல்வது வழக்கம். அதனால் தாங்கள் எனக்கு நேரத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டாம். நான் எந்தப் பேச்சும் பேசவில்லை. எந்தத் தன்மையிலிருந்து இந்த வினா எழுகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். அது இல்லை என்று சொன்னால், வினா என்று சொல்லி, இரண்டே செய்தியில் முடித்துவிடலாம், அவர்களும் பதில் சொல்ல முடியாமல் போகும்.

அந்தக் கொடுமை அங்கே ஏற்பட்டதினாலேதான் மாணவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பிரதிநிதிகள் வேண்டும் என்று கேட்டார்கள். மற்றது, கல்லூரியில் முதல்வர் அவர்கள் தலைவராக இருப்பார். அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்டார்கள். இதை

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 20

மறுத்ததினால்தான் அந்த நிலைமை ஏற்பட்டது. ஆகவே அது தனியார் சொத்தாக இருந்தாலும், தனிச் சட்டங்களை அமலாக்க கூடிய முறையில் அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஏதாவது வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் தனியார் கல்லூரியில் அவ்வப்போது தோன்றுவது என்பது நடைமுறையிலே நாம் பார்த்து வருகின்ற ஒன்று. மாணவர்கள் நலக் குழு அமைக்கவேண்டும் என்று விரும்பி, அதற்காக வலியுறுத்திய போது, நலக்குழுவைக் கல்லூரியினுடைய முதல்வர் அவர்கள், தேர்ந்தெடுக்கின்ற நலக்குழுவாக இல்லாமல் நியமனம் செய்யப் படுகின்ற நலக்குழுவாக உருவாக்கினார்கள். அதிலே மாறுபாடு ஏற்பட்டது. காந்தீயக் கொள்கை, அதனுடைய அடிப்படையிலே இந்தக் கல்லூரி நடைபெறும் என்று சொல்கிற முதல்வர் அவர்கள், அந்த அடிப்படையிலே இந்தக் கல்லூரியை நடத்துவதற்கு மாணவர்கள் ஒத்துழைக்காததன் காரணமாக, இந்தக் கல்லூரியை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று கூடத் தெரிவித்ததாகக் காணப்படுகிறது. உடனடியாக எடுப்பது என்பது அரசாங்கத் தினுடைய நிர்வாகத்திலே இயலாத ஒரு காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்த நிலையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர் தலையிட்டு சமா தானம் செய்திருக்கிறார். அதற்கு மேலும் துணை இயக்குநர் உடனடியாகக் கல்லூரிக்குச் சென்று, நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்து, கல்லூரியை முழு அளவில் திறக்கவும், சுமூக சூழ்நிலையில் செயல்படவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு மேலதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளார். கோவை மண்டலத் துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநர், மாணவர் கள் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் முதல் போராட்டத்தை நிறுத்திவிட்டு, படிப்படியாகக் கல்லூரிக்கு வரத் துவங்கிவிட்டனர் என்று அண்மையிலே தெரிவித்திருக்கிறார்கள். எனவே கல்லூரி தொடர்ந்து நடைபெறுகிறபோது மேலும் குறை பாடுகள் ஏற்படாமல் கல்லூரி செயற்பட துணை இயக்குநர் மூல மாக ஆவன செய்வதற்கு அரசு முயற்சிக்கும்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக இரண்டாவது வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி அவர்கள் எழுப்புவார்கள்.

(முற்பகல் 9-20)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொங்கு நாடு கலைக் கல்லூரி சம்பந்தமாக அறிக்கை வைத்திருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் திரு. ரமணி அவர்கள் சுருக்கமாகச் சொன்னார்கள். அந்தக் கல்லூரியில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஆசிரியர்களும், மாணவர்களும் கொடுமைப்படுத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து நடத்த முடியாத ஒரு நிலை இருந்து வருகிறது. அரசே இந்தக் கல்லூரியை ஏற்று நடத்தவேண்டும் என்று மாணவர்களும் விரும்புகிறார்கள். அந்த முறையில் இதை உடனடியாக எடுக்க முடியாது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னாலும் கூட, எவ்வளவு விரைவாக இதை அரசாங்கமே எடுத்து நடத்தமுடியுமோ, அவ்வளவு விரைவாக எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல நன்கொடை என்ற பெயரால் . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விடுப்பது வேண்டுகோளா அல்லது தொடுப்பது வினாவா?

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: தலைவர் அவர்களே, நடக்கிற விவரங்களைத்தான் இந்த அவையில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மரபுகளைப் பின்பற்றத் தவறினால் நான் வாய்ப்புக்களை மறுக்க நேரிடும். வினாவை மட்டும் தொடுங்கள்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: ஆகவே இந்தக் கல்லூரியை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அந்த முறையிலே அதை எடுத்து நடத்த வேண்டும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவரவர்களே, கடந்த காலத்தில் இப்படிப் பல கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டது. அவற்றிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூல

[பேராசிரியர் க. அன்பழகன்] 1989 பிப்ரவரி 20]

மாகததான் தற்போதுள்ள அரசாங்கத்தினுடைய நிதிநிலையில் வரவு-செலவுத் திட்ட அளவில் பல கடமைகளை நிறைவேற்ற முடியுமே தவிர, கல்லூரியை, அதுவும் மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல, ஓலைக் கொட்டகைகளாகப் போட்டு, இட வசதி இல்லாமல் இப்படி ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டு, உடனடியாக அவை களுக்குத் தேவையான நிதிவசதிகளை வழங்கக்கூடிய நிலை அரசுக்கு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். எனவே, நடைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கு என் னென்ன செய்ய முடியுமோ, அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பெ. சு. திரு வேங்கடம், எஸ். பி. கண்ணன், கே. பிச்சாண்டி, வி. எம். தேவராஜ், அ. இராசேந்திரன், டி. பொன்முடி, கே. ஏ. செங்கோட்டையன், எஸ். டி. உக்கம்சந்த், துரை ராமசாமி, வே. நா. சுப்பிரமணியன். பி. மாரப்பன், வே. பெரியசாமி, வி. கே. சின்னசாமி, என். பழனி வேல், எஸ். ஏ. தங்கராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் குறிப்பாக வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் சென்ற ஒரு வார காலமாக மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விரிவான அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது :

[பேராசிரியர் க. அன்பழகன்] 1989 பிப்ரவரி 20]

மாகத்தான் தற்போதுள்ள அரசாங்கத்தினுடைய நிதிநிலையில் வரவு-செலவுத் திட்ட அளவில் பல கடமைகளை நிறைவேற்ற முடியுமே தவிர, கல்லூரியை, அதுவும் மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல, ஓலைக் கொட்டகைகளாகப் போட்டு, இட வசதி இல்லாமல் இப்படி ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டு, உடனடியாக அவை களுக்குத் தேவையான நிதிவசதிகளை வழங்கக்கூடிய நிலை அரசுக்கு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். எனவே, நடைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கு என் னென்ன செய்ய முடியுமோ, அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பெ. சு. திரு வேங்கடம், எஸ். பி. கண்ணன், கே. பிச்சாண்டி, வி. எம். தேவராஜ், அ. இராசேந்திரன், டி. பொன்முடி, கே. ஏ. செங்கோட்டையன், எஸ். டி. உகம்சந்த், துரை ராமசாமி, வே. நா. சுப்பிரமணியன். பி. மாரப்பன், வே. பெரியசாமி, வி. கே. சின்னசாமி, என். பழனி வேல், எஸ். ஏ. தங்கராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் குறிப்பாக வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் சென்ற ஒரு வார காலமாக மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விரிவான அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது :

[1989 பிப்ரவரி 20 [திரு. கே. என். நேரு]

அறிக்கை.

1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 9 ஆம் நாள் முதல் கல்பாக்கம் அணு மின்நிலையத்தின் பிரிவுகள் ஒன்று மற்றும் இரண்டில் சில கோளாறுகளினால் இயந்திரங்கள் இயங்கவில்லை. நெய்வேலி அனல் மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழக்கமாக 900 மெகாவாட் மின்சக்தி வழங்கப்படும். 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் இதில் 150 மெகாவாட் அளவு குறைவேற்பட்டுள்ளது ?

இராமகுண்டம் மற்றும் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு பெரிய அளவில் மின் சக்தியைப் பெற்று உதவுகிற திருப்பெரும்புதூர் 400 கிலோவாட் 315 எம்.வி.ஏ. மின் மாற்றிதான் தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய ஒன்றாகும். இது 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளன்று பழுதடைந்ததனால் வேறு குறைந்த அழுத்தமுள்ள நீண்ட மின்பாதைகள் வழியாக மின் சக்தியை மின்வாரியம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. கடந்த 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் தேதியன்று எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்தில் 110 மெகா வாட் திறன் கொண்ட பிரிவு மூன்று மற்றும் பிரிவு நான்கிலுள்ள பல நுணுக்கமான பொறிகளும் கேபிள்களும் எரிந்து போயின. மேலும் 25 எம்.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின் மாற்றியும் சேதமடைந்தது. அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவிலும் தீவிரமாக பழுது ஏற்பட்டது. இதனால் சென்னைப் பெருநகரம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலுள்ள நகர்வோருக்கு கடந்த சில வாரங்களாக மின் அழுத்தக் குறைவு காரணமாக சரியான அளவில் மின்சக்தி வழங்க இயலவில்லை. சில நேரங்களில் மின்சக்தி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படியாயிற்று. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படும் மின் சக்தியைச் சேர்க்கும் பொருட்டு 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் எல்லா விவசாய பம்பு செட்டுகளுக்கும் பகலில் நான்கு மணி நேரத்திற்கும் இரவில் ஆறு மணி நேரத்திற்கும் மின் விசை வழங்கிட கீழ்க்கண்ட வகையில் மாற்றியமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படியே கீழ்க்கண்டவாறு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

பிரிவு அ.—காலை 6 மணி முதல் 10 மணி வரை.
நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை.

பிரிவு ஆ.—காலை 10 மணி முதல் நண்பகல் 2 மணி வரை.
இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை.

பிரிவு இ.—மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை.
இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரை.

எந்தெந்தப் பகுதியில் எப்போது மின்சாரம் வழங்கப்படும் என்பது அந்தந்தப் பகுதியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளரால் மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் காத்துக் கிடக்கும் தேவை இல்லை.

(2 போர்க்கால அடிப்படையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்பாக்கத்தில் முதல் பிரிவு இயக்கப்பட்டுள்ளதால் நிலைமை சற்று சீரடைந்துள்ளது. கூடிய விரைவில் மின் உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவுகளை மறுபடியும் துரிதமாக இயக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக இங்கு எழுப்பிய பலருள், ஆளுங்கட்சி சார்பில் ஆளுக்கு ஒரேயொரு வினாவை மட்டும் தொடுக்க வேண்டும். எவரேனும் இருவர்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கான வாய்ப்பு மற்றவர்களுக்குப் போகும்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய போளூர் தொகுதியில் மின்சாரம் பகலிலே 4 மணி நேரமும், இரவிலே 6 மணி நேரமும் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளின் நலனைக் கருதி, அதைப் பகலிலே 6 மணி நேரமும், இரவிலே 4 மணி நேரமாகவும் மாற்றிக் கொடுப்பதற்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு அளிப்பாரா என வினவுகிறேன்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முயற்சிகள் வெற்றி பெற்றவுடன் நிச்சயமாகப் பகலிலே 6 மணி நேரமும், இரவிலே 4 மணி அல்லாமல், இரவிலும் 6 மணி நேரம் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

***திரு. கே. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று திடீரென பல்வேறு இடங்களில் கோளாறுகள் ஏற்படுவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் சரிவர நடவடிக்கை எடுக்காததுதான் காரணம். ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று மின்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் எந்த அதிகாரி தவறு செய்தாலும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அ.இ.அ.தி.மு.க. (ஜெ) கட்சி சார்பில் இருவர்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்தில், பணி துரிதமாக முடிவுற்றவுடனே தருவதாகச் சொல்லுகிறார்கள். தற்காலிகமாகவாவது வேறு மாநிலத்திலிருந்து மின்சாரத்தை வாங்கி இந்தக் குறையைத் தீர்த்தால், விவசாயிகளுக்கு அவர்களுடைய பயிரைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, வெளி மாவட்டத்திலிருந்து மின்சாரம் வருவதற்கான அந்த லைனில் தான் பழுது ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்த அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த டிரான்ஸ்மீட்டர்களைப் பழுது பார்ப்பதற்கான செயல்கள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. பழுது பார்த்தவுடன் வெகு விரைவிலே மின்சாரத்தைச் சரியான முறையில் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கோளாறுகளினால் பல விவசாயப் பெருமக்களுடைய பம்பு செட்டுகள் பழுதடைந்திருக்கின்றன. அதனால் அவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசின் சார்பாக ஏதாவது நிவாரணம் வழங்கப்படுமா, உதவிகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. உறுப்பினர் அவர்கள் மேலும் விரிவான விளக்கத்தைக் கேட்கிறார்கள். வேண்டுமானால், தனிக் கேள்வியாகப் போட்டு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) சார்பில் ஒருவர்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வாரங்களாக அண்ணா மாவட்டத்தில் மின்சார விநியோகத்தில் தெளிவான நிலை இல்லை என்று நாங்கள் பல முறை சொல்லியிருக்கிறோம். இந்தக் குறிப்பிலே கூட என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த மாறுதல் அறிவிப்பு சம்பந்தமாகப் பொறியாளர் மூலமாக மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் கேட்டுக் கொள்வது அந்த மின் உபயோகிப்பாளர்களுக்கு, இத்தனை மணி நேரம் இன்னின்ன நேரத்தில் மின்சாரம் வரும் என்று தெளிவாக உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா இல்லையா? பொதுவான முறையில் மக்களுக்கு அறிவித்தால் அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டு அதை உபயோகப்படுத்த முடியும் என்பது ஒன்று, இரண்டாவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதித்தது ஒன்று (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மின்சாரம் விவசாயிகளுக்கு எந்த நேரங்களில் வழங்கப்படும் என்பதை ஏற்கெனவே அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் பத்திரிகைகள் வாயிலாகவும், தனிப்பட்ட சுற்றறிக்கை மூலமாகவும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர்

1989 பிப்ரவரி 20] [திரு. கே. என். நேரு]

சொன்ன பகுதியிலே தெரிவிக்கப்படவில்லையா என்பதை விசாரித்து விவசாயிகள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இன்னொரு கேள்வி அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்க இயலாது. அருள்கூர்ந்து அமருங்கள் (குறுக்கீடு). அவை மரபை மீறாமல் அருள்கூர்ந்து அமருங்கள்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வந்ததற்கு ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால் "பிரேக் டவுன்" என்பது அவர்களுக்கே தெரியாமல் ஏற்படுவது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் முன் கூட்டியே எந்த விவசாயிக்கும் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் கூட 'பிரேக் டவுன்' ஏற்பட்ட உடனேயே அந்தப் பகுதிக்கு அறிவிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்கும்.

4. அறிவிப்பு.

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

1989 பிப்ரவரி 20] [திரு. கே. என். நேரு]

சொன்ன பகுதியிலே தெரிவிக்கப்படவில்லையா என்பதை விசாரித்து விவசாயிகள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இன்னொரு கேள்வி அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்க இயலாது. அருள்கூர்ந்து அமருங்கள் (குறுக்கீடு). அவை மரபை மீறாமல் அருள்கூர்ந்து அமருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வந்ததற்கு ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால் "பிரேக் டவுன்" என்பது அவர்களுக்கே தெரியாமல் ஏற்படுவது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் முன் கூட்டியே எந்த விவசாயிக்கும் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் கூட 'பிரேக் டவுன்' ஏற்பட்ட உடனேயே அந்தப் பகுதிக்கு அறிவிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்கும்.

4. அறிவிப்பு.

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

சொன்ன பகுதியிலே தெரிவிக்கப்படவில்லையா என்பதை விசாரித்து விவசாயிகள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இன்னொரு கேள்வி அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்க இயலாது. அருள்கூர்ந்து அமருங்கள் (குறுக்கீடு). அவை மரபை மீறாமல் அருள்கூர்ந்து அமருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வந்ததற்கு ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால் "பிரேக் டவுன்" என்பது அவர்களுக்கே தெரியாமல் ஏற்படுவது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் முன் கூட்டியே எந்த விவசாயிக்கும் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் கூட 'பிரேக் டவுன்' ஏற்பட்ட உடனேயே அந்தப் பகுதிக்கு அறிவிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்கும்.

4. அறிவிப்பு.

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. எல். கணேசன்] [1989 பிப்ரவரி 20

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

(முற்பகல் 9-30)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எல். கணேசன்] [1989 பிப்ரவரி 20

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

(முற்பகல் 9-30)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எல். கணேசன்] [1989 பிப்ரவரி 20

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

(முற்பகல் 9-30)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

1989 பிப்ரவரி 20] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் வருகின்ற நேரத்தில் ஏற்கனவே நகராட்சிகள் குறித்த சட்டத் திருத்தம் விவாதிக்கப்பட்டு நீண்ட நேரம் அதற்காக இந்த அவை செலவிட்டு நாம் விவாதித்து எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் கேட்டபடி வாக்கெடுப்புகூட நடத்தி இருக்கிறோம். அதிலே பல கருத்துக்கள். இந்த ஊராட்சி சட்டத் திருத்தத்தைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். இது ஏறக்குறைய ஒரே மாதிரியானதுதான். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவை குறித்த ஒரு தீர்மானம் கொண்டு வருகின்ற காரணத்தாலே விவாதிக்காமலேயே இந்தச் சட்டத் திருத்தத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, சட்ட முன் வடிவு ஒரே மாதிரியாக இருக்கலாம். ஆனால் இரண்டும் வேறு வேறு சட்டங்கள். எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிலே விவாதிக்கின்ற உரிமை வேண்டும். அந்த உரிமையைத் தாங்கள் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த உரிமை உங்களுக்குத் தாராளமாக வழங்கப்படும். அந்த உரிமையை மிகவும் பொறுப் போடு மிகக் குறைந்த நேரத்தில் எடுத்துக்கொண்டால் 'அவை'யும் சிறப்பாக இருக்கும், 'சுவை'யும் சிறப்பாக இருக்கும் (சிரிப்பு) என்று கூறி முதலில் திரு. கே. ஆர். சுந்தரம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, உள் ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்படுகின்ற இந்தத் திருத்த மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். பொதுவாக உள்ளாட்சி

*1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மன்றங்களுக்கான திருத்தங்கள் வருகின்ற நேரத்தில், மக்கள் கருத்தை அறியாமல், ஏற்கனவே மூன்று ஆண்டுகளுக்கு மக்கள் வாக்களித்து அதை நிறைவேற்றியதற்குப் பின்னால் 2 ஆண்டுகள் நீடிப்பது என்பது ஜனநாயகச் செயலுக்குப் புறம்பானது என்று ஏற்கனவே ஆட்சி நடத்தியவர்கள் சொன்னார்கள். நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். ஏற்கனவே 5 ஆண்டுகளாக இருந்த அந்தச் சட்டத்தை, நீண்ட ஆண்டுகளாக நடத்தாமல் இருந்த காலத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்று போராடி வெற்றி பெற்ற நேரத்தில், முதன் முதலிலே கொண்டு வருகின்ற நேரத்திலே, 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே 4 ஆண்டுகள் என்று குறைத்தீர்களே அப்போது எந்த மக்கள் தீர்ப்பைக் கேட்டு நீங்கள் 4 ஆண்டுகள் என்று நிச்சயித்தீர்கள்? அதற்குப் பிறகு நடத்த முடியாமல் போனதற்குப் பின்னால் 1986 ஆம் ஆண்டிலே கொண்டு வந்தீர்களே ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு, அப்போது 3 ஆண்டுகள் என்று சொன்னீர்களே, எந்த மக்கள் கருத்தை அறிந்து நீங்கள் 3 ஆண்டுகள் என்று நிச்சயித்தீர்கள்? சொல்லப்போனால் வேதனையான விஷயம். நாங்கள் நேரடியாக அவமானப்படுத்தப்பட்டோம். இந்தத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்னால், நான் சம்பந்தப்பட்ட காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெருவாரியாக இருந்த நேரத்தில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி சிறுபான்மை பெற்றிருந்தது. அந்த நேரத்திலே, அந்த ஒன்றியப் பேரவைக்கு துணைத்தலைவர் தேர்தல் நடந்தபொழுது, தாங்கள் ஜெயிக்க முடியாது என்று கருதினார்கள். ஆகவே ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நியமன உறுப்பினர்கள் 4 பேரை நியமித்து, அப்படி மெஜாரிட்டி பெற்றார்கள். இவ்வாறு செய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தாங்கள் பெற்ற அந்த மெஜாரிட்டியை பயன்படுத்த முடியாமல், தவறான வழியிலே ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நியமன உறுப்பினர்களின் மூலமாக அங்கு உதவித் தலைவர் தேர்தல் நடத்தப்பட்டது. அதே நியமன உறுப்பினர்களைக் கொண்டு மேலும் மாதர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லி எட்டு பேரை நியமனம் செய்தார்கள். மக்களால்

1989 பிப்ரவரி 20] [திரு. கே. ஆர். சுந்தரம்]

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 13 பேர். நியமன உறுப்பினர்களை யெல்லாம் கொண்டு பெருவாரியாக இருந்தவர்கள் 23 பேர். அவர்கள் பேசுகிறார்கள், ஜனநாயகத்தைப்பற்றி. இது வேடிக்கை யாக இருக்கிறது.

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை-ஏற்கனவே இருந்ததை— வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே நான் என் பேச்சை சுருக்கிக்கொள்கிறேன். இந்த உள்ளாட்சி மன்றங்களால் இன்றைய நிலையில் மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. நிதி ஆதாரங்கள் இல்லை. இத் தகைய நிதி ஆதாரங்களைக் கொடுத்து, உள்ளாட்சி மன்றங்கள் மூலமாக, மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி, விளக்கு வசதி, பாதை வசதி போன்ற பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சட்டத் திருத்த மசோதாவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் அதிகமாக நிதி வசதி இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது இரண்டு ஆணையாளர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆணை யாளருக்கே வேலையில்லாமல் இருக்கும் நிலையில் இரண்டு ஆணையாளர்கள் தேவையா என்பதை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக அதிகாரங்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான நிதிகளைத் திரட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங் களின் பணியாளர்களை நியமிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றி யத்திற்கே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வேலைத் திட்டங்களை வகுக்கக்கூடிய அதிகாரத்தை—ஊராட்சி ஒன்றியங்களே வகுத் தால்தான் எந்தெந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு எந்தெந்த வகை யான தேவைகள் இருக்கின்றன என்பதை முடிவு செய்ய முடியும் என்று எண்ணுகிறேன்.

[திரு கே. ஆர். இராமசாமி] [1989 பிப்ரவரி 20

ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் சொந்தமான இடங்களில் இருக்கின்ற மரங்களை ஏலம் விடும் அதிகாரம் தற்போது ரெவின்யூ துறையிடம் இருக்கின்றது. அதை மீண்டும் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வீடு நிச்சயமாகத் தரமாக இல்லை என்று தமிழ்நாடு முழுவதிலிருந்தும் தகவல்கள் வருகின்றன. அந்த வீடுகளின் தரத்தை உயர்த்துவதற்குத் தற்போது ஒதுக்கக் கூடிய நிதியிலிருந்து இன்னும் கூடுதலாக இரண்டாயிரம் ரூபாயை ஒதுக்கினால் நிச்சயமாகத் தரமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும் என்று எண்ணுகிறேன். ஒரு ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடிய வீடுகளில் எண்ணிக்கையை இன்னும் அதிகமாக ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பராமரிப்பிற்காக அரசிடமிருந்து பெறப்படக் கூடிய நிதி, மிகக் குறைவாக இருக்கின்றது. ஏறத்தாழ 32.000 ரூபாய் அளவிற்குச் சாலைப் பராமரிப்பிற்காகக் கொடுக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். அந்தச் சாலைப் பராமரிப்பிற்காக, அங்கே 'கேங்க் கூலிகளாக' நியமிக்கப்பட்டிருக்கிறவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கே போதாத நிலையிலே இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் அவர்களின் பொதுவான முக்கியமான கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும். அவர்களுக்கு, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையாக ஊதியத்தை இந்த அரசு வழங்க வேண்டும். ஆசிரியர்களுடைய பிரச்சினையிலே தெளிவான அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களை அரசாங்கமே ஏற்றுக் கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஆசிரியர்கள் மட்டத்திலே, பள்ளிகளின் மட்டத்திலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து

1989 பிப்ரவரி 20] [திரு. கே. ஆர். இராமசாமி]

கொள்ள முடியவில்லை. நிச்சயமாக இந்த ஆசிரியர்கள் பிரச்சினையில் தெளிவான ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மின் துறையைப் பொறுத்தவரையில் ஊராட்சிகளுக்கு, பஞ்சாயத்துகளுக்குத் தெரு விளக்குகள் போடுவதற்கு இப்போது அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் அதைச் சிறப்பாக பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாத நிலைமையில் நலிவுற்று இருக்கின்றன. எனவே, தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்தை அரசாங்கமே ஏற்று நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

நான் தற்போது கண்ணன்குடி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருக்கிறேன். இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றியங்களுக்குச் செல்லும்போது தகுந்த மரியாதை அவசியமாக வேண்டும். இதை நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய தலைவர்கள் யாரும் கொடுக்க மறுக்கவில்லை. முந்தைய அரசு செய்த அத்தனை காரியங்களையும் மறுக்கும் எண்ணத்திலேயே இதையும் எண்ணுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் வறட்சிக்கு இலக்காகும்போது வரும் திட்டங்களான D.P.A.P., R L.E.G.P போன்ற திட்டங்கள் முழுமையாக மத்திய அரசினுடைய நிதியிலேயே இயங்குகின்றன. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களினுடைய நிலைமையில், மத்திய அரசின் முழு மானியத்திலேயே இயங்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இதை மாற்றி தாங்கள், இந்த அரசின் திட்டங்களாகப் போதிய நிதி ஆதாரங்களைத் தந்து சிறப்பிக்குமாறு நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

6. ஒழுங்குப் பிரச்சினை.

சட்டமுன் வடிவுகளின் நகல்கள் அவையில் வைக்கப்படுதல்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உறுப்பினர்களின் உரிமையைப் பாதிக்கிற ஒரு பிரச்சினையை இங்கே ஒழுங்குப் பிரச்சினையின் மூலமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 20

இன்றைக்கு மது விலக்கு ஆயத் தீர்வை பற்றிய 2 சட்டமுன் வடிவுகள் அவையில் வருவதாக மூன்மொழியப்பட்டுள்ளன. அதிலே சட்ட அமைச்சர் அவர்கள் மூன் மொழிந்த சட்டமுன்வடி வின் விவரங்கள் அடங்கிய அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக் கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் அவரு டைய பாராளுமன்றச் செயலாளர் அறிவித்த சட்டமுன்வடிவு என்ன என்பது பற்றி அவையில் மேஜையில் வைக்கப்படவில்லை யே; அது வைக்கப்பட வேண்டாமா? அது அவை உறுப்பினர் களின் உரிமையைப் பாதிக்கிறது. அதற்குத் தங்களுடைய தீர்ப் பினை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து அறிக்கை நேற்றே அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் வீட்டுக்கு அனுப்புவது என்பது வேறு. சட்ட அமைச்சர் அவர்கள் இங்கேயும் கொடுத் திருக்கிறார்கள். அதையும் தான் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானம் போன்ற அனைத்தையும் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் அதை மட்டும் இங்கே டேபிளில் வைக்கிறீர்கள். அதைப்போல வீட்டுக்கு அனுப்பி யிருந்தாலும் இங்கே சட்டமன்றத்திலே வைத்தால்தான் அது சட்டசபையினுடைய பொருளாக "Property of the House" ஆகும். நீங்கள் டேபிளில் இங்கே பிளேஸ் செய்தால் தான் வருமே தவிர, வீட்டுக்கு அனுப்புவது மட்டும் போதாது, இனி மேல் இங்கே வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தொடர்பாக என் னுடைய குறிப்புரை:

"Provided that in case of a **Government Bill, along with the** notice sufficient number of copies of the **Bill shall be sent to the** Secretary for Circulation to the Members".

திரு. எஸ். திருநாவுக்கரசு: Circulation to the Members means circulation to the Assembly. எல்லாவற்றையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போதுமா? இங்கே மேஜையில் ஒன்றுமே வைக்க வேண்டியதில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு வருவதற்கு முன்னாலேயே வீட்டுக்கு முன்கூட்டியே தருவது தவறு என்கிறீர் களா?

1989 பிப்ரவரி 20]

திரு. எஸ். திருநாவுக்கரசு : முன் கூட்டித் தருவது தவறு என்று சொல்லவில்லை ; அது உறுப்பினர்களுக்கு வசதியாகத் தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையை நான் சொன்னேன். இது பெரிய பிரச்சினை இல்லையே, இங்கே 'பிளேஸ்' செய்து விட்டால் சரியாகப் போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கோரிக்கையைத் தக்கவாறு கவனித்து ஆவன செய்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியது அவர்களுக்கு ஒருவேளை தெரியாமல் இருக்கலாம். எனவே, அது போன்ற தவறு ஏற்படாது என்று தாங்கள் கூறி விட்டீர்கள். என்றாலும் உறுப்பினர்களுக்கு உங்கள் செகரட்டேரியட் மூலமாக அனுப்புவதை அவர்கள் நோட்டீஸ் ஆகக் கருத வேண்டும் என்பதுதான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு என் இந்த மசோதாக்களை அனுப்புகிறீர்கள் என்றால் "Bill to be introduced Confidential" என்று அதில் போட்டு அனுப்புகிறீர்கள். இங்கே காலை 8 மணிக்கு வைத்து விட்டால் வெளியே ஒரு வேளை தெரிந்து விடலாம் என்ற காரணத்திற்காக அந்த முறை பின்பற்றப்படவில்லையோ என்று நான் எண்ணுகிறேன்.

*மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இப்போதுதான் எதிர்க்கட்சியாகப் போயிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியில் இருந்தவன். வழக்கமாக பில் காப்பிகள் வீட்டுக்குத்தான் வரும். ஆனால் எல்லா பில்களும் டேபிள் மீது வைக்கப்படுவது கிடையாது. அதை மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அப்போது அமைச்சராக இருந்ததால் கவனித்து இருக்கமாட்டார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் புதிதாக அமைச்சராக இருப்பதால் இந்த விதிமுறைகள் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் நான் ஏற்கனவே அமைச்சராக இருந்திருக்கிறேன்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 20

இப்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் இரண்டு அனுபவமும் எனக்கு இருக்கிறது. அவருக்கு ஒரு அனுபவம் இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது, வீட்டிற்கு அனுப்புவது என்பது ஒன்று. வீட்டிற்கு அனுப்பியிருக்கிறீர்கள், எனக்கும் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தெரியவில்லையென்று; தெரிகிறது. ஆனால் இங்கே வைக்காமல், எங்களுக்கு வீட்டிற்கு அனுப்புவதால் பத்திரிகைகளிலே பிரசுரிக்க முடியாது. பத்திரிகைக்காரர்க ளெல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்களால் என்ன சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்று எப்படி எழுத முடியும்? எனவே இங்கே வைத்தால்தான வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து உங்களுடைய குறை என்ன என்று சொல்லுங்கள். பத்திரிகையாளர்களுடைய குறைகளைப் பற்றி அருள்கூர்ந்து பேச வேண்டாம். சட்ட முன் வடிவு அறிமுகமானதும் பத்திரிகையாளர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் கூறுகிறேன். பத்திரிகைக்காரர்களெல் லாம் அவைக்கு வெளியிலே இல்லை; அவைக்கு உள்ளேதான் இருக்கிறார்கள். அவைக்குள்ளே அந்த உரிமையைப் பத்திரிகைக் காரர்களுக்குக் கொடுக்கிறபோது அதே உரிமையை உறுப்பினர் களுக்குக் கொடுத்து, உறுப்பினர்களின் மேஜையின்மேல் வைக்க வேண்டும். அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? தவறு நடந் திருக்கிறது என்று சொன்னால், அதைத் திருத்திக் கொள்வதில் என்ன கஷ்டம்? ஏன் அவ்வளவு டிஃபன்ஸ்? பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு மாறுதல் அல்லது மறந்திருக்கலாம். சிறிய தவறாக இருக்கலாம், சரி, வைக்கிறோம் என்று சொன்னால், முடிந்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றிக் கவனித்து ஆவன செய்யப்படும.

1989 பிப்ரவரி 20]

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான விளக்கம் அவைக் குறிப்பில் இடம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக நானும் என்னுடைய சார்பாகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சர்க்குலேஷன்' என்றால் அவையிலே வைப்பதுதான் பொருள் என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. 'சர்க்குலேசன்' என்று சொன்னால் 'சுற்றறிக்கை'.

It should be circulated as among the Members so that they may have sufficient time to go into the details of the various provisions.

ஒரு நாளைக்கு முந்தியே அவர்களுக்கு 'சர்க்குலேட்' செய்தால் தான் அவர்கள் வீட்டிலேயிருந்து படித்து, அதைப்பற்றி அறிந்து கொண்டு வந்து பேச வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் அது சர்க்குலேட் செய்யப்படுகிறது.

Circulation does not mean placing on the Table of the House. It is different

(குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஏன் ரொம்ப அவசரப் படுகிறீர்கள்? ஆகையினாலே அந்த அர்த்தத்தில் வரவில்லை. வீட்டிற்கும் அனுப்பப்படவேண்டும்; அவையிலும் வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோருகிறார்கள் என்று சொன்னால் அது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மற்றும் அவைத் தலைவர் அவர்கள் ஆகியோரால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். இரண்டு இடத்திலும் வைக்கப்படவேண்டுமென்பதை நான் எதிர்க்கவில்லை. இந்தப் பொருளைத்தான் அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று சொல்லுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுகுறித்து நான் கவனித்து ஆவன செய்வதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே. (குறுக்கீடு) இருக்கட்டுமே ஒரு சிறிய விளக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Not to be published" என்றுதான் இதிலே போட்டிருக்கிறது. "Not to be published—Confidential"

என்று கான்பிடன்ஷியலாகத்தான் அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் இங்கே வைத்தால்தான் அதை பிரஸ்காரர்களெல்லாம் எடுத்துப் பார்த்து அவர்கள் போட முடியும். என்ன சட்டமுன் வடிவு வருகிறது என்று அப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து பத்திரிகையாளர்களைப் பற்றிப்பேச வேண்டாம். பத்திரிகையாளர்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பில்லுக்கு மேலே ஒரு சீலே குத்தியிருக்கிறார்கள், "Bill to be introduced—Confidential". என்று,

5. சட்டமுன்வடிவுகள் — தொடர்ச்சி.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1989—தொடர்ச்சி.

* திரு. சாதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஊராட்சிகள் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ததை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் இந்த அவையிலே பேசுவதற்கு முன்னால், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூர்ந்து என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னை ஆளாக்கிய தலைவர், என்னுடைய குடும்பத் தலைவர், பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் கூறி, இந்த அவையிலே பேசுவதற்கு நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய என்னுடைய இதய வேந்தன், தமிழினத் தலைவன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1958 ஆம் ஆண்டு, இந்தச் சட்டத்தை உருவாக்கிய காலத்தில் பல நிபுணர்களால், பல பொருளாதார நிபுணர்களால், வல்லுனர்களால், இதற்கென பல ஆண்டுகள் பெரிய திட்டங்களையெல்லாம் தீட்டினார்கள், அதற்கு முன்னால் ஊராட்சி வளர்ச்சி தேசிய திட்டமாக இருந்த, Shadow Block ஆக இருந்ததை, மக்க

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]
1989 பிப்ரவரி 20]

ளுடைய பிரதிநிதிகள் கிராமத்திலே உள்ளவர்களின் தேவைக்கு ஏற்ப நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதனால் மக்கள் பலன்பெற வேண்டும் என்று கருதினார்கள். அதற்காக மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடியவர்கள் அந்த ஊராட்சி நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான், காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்குவதற்கு கிராம ராஜ்யம்தான் 'ராம ராஜ்யம்' என்று சொல்கின்ற அளவிற்கு நல்லதொரு திட்டத்தைத் தீட்டினார்கள். 1958 ஆம் ஆண்டு ஏற் படுத்திய சட்டம், ஐந்தாண்டு அதனுடைய ஆயுட்காலமாக அன்றைய தினம் உருவாக்கப்பட்டது.

(முற்பகல் 9-50)

இந்தச் சட்டம் அதே முறையில் ஏறத்தாழ இருபதாண்டுக் காலம் சிறப்புற நடந்து கொண்டு வருகிற நேரத்தில், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பையேற்ற காலத்திலே அப்பொழுது முருகேச முதலியார் என்பவரை ஒரு கமிஷனாக நியமித்து, இந்த ஊராட்சி ஆயுட் காலத்தை மூன்றாண்டுகளாகக் குறைக்க வேண்டும், இதில் உள்ள இப்பொழுது இதற்கு முன்னாலே இருந்த அரசு எப்படி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற அத்தனை அதிகார வரம்புகளையெல் லாம் எடுத்துக் கொண்டதோ, அதைப்போல அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்புகளை, அதிகாரங்களையெல்லாம் எடுத்து விட வேண்டுமென்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் முருகேச முதலியாருடைய அறிக்கை அன்றையதினம் பேசப்பட்டது. ஒரு மாநாடு நடத்தப்பட்டது. அப்பொழுது இன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு மதிப்பிற் குரிய வீரபாண்டி அவர்கள் அன்றையதினம் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தார்கள். நானும் இருந்து இருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலேயும் இதை எடுத்துக் கூறி, மூன்றாண்டுகளாகக் குறைப்பது பொருத்தமல்ல ; ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற அதிகார வரம்புகள், பொருளாதார வசதிகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்வதும் பொருத் தம் அல்ல என்று எடுத்துக் கூறியவுடனே மக்களுடைய கோரிக் கைகளை ஏற்று, அங்கே மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி நடத்த வேண்டுமென்பதற்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந்

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

[1989 பிப்ரவரி 20

தன்மையோடு அன்றையதினம் அந்தக் கமிஷனை நிறுத்தி வைத்தார்கள். ஆகவே, அண்ணா அவர்கள் அன்றையதினம் கைவிட்ட அந்தத் திட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் அதை மூன்றாண்டுகளாகக் குறைத்தார்கள். ஆகவே, அண்ணா அவர்களே கைவிட்ட அந்தக் கொள்கையை, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 3 ஆண்டுகளாக இங்கே உருவாக்கினார்கள்; மூன்றாண்டுகளாக உருவாக்கியது மட்டுமல்ல, அதிலே ஒரு இரண்டு ஆண்டுகளைக் குறைத்து விட்டது மட்டுமல்ல, இந்தச் சட்டம் இயற்றப்படுகிற காலகட்டத்திலே இந்தச் சட்டத்தினுடைய நோக்கம், இதனுடைய பீடிகையே இந்த நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். இந்த நாட்டிலே மக்கள் கட்டுப்பாட்டை உருவாக்க வேண்டும்; கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. ஆகவே, அப்படிப்பட்ட சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் இருந்ததற்கு நேர்மாறாக இதற்கு முன்னால் இருந்த அரசு அத்தனை அதிகாரங்களையும் எடுத்து விட்டது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் சொல்லுகிற கருத்துப்படி பார்த்தால் அங்கே ஊராட்சி ஒன்றியத்தினுடைய போர்டுதான் அந்த அலுவலகத்தில் இருக்கிறதே தவிர, அந்த அதிகாரிகள் இருக்கிறார்களே தவிர, எந்த நிதியும் இல்லை. அதிகாரமும் இல்லை. ஆகவே, மக்களுக்கு எந்த வசதியும் செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

அது மட்டுமல்ல, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும், ஒன்றியத்திலும் அந்த ஊராட்சி நடக்கிற கிராமங்களில் மின்சாரக் கட்டணம் அத்தனையையுமே அந்த ஊராட்சி ஒன்றியமே செலுத்தி வந்து, அந்த ஊராட்சிக்கு வருவாய் வருகிற கால கட்டங்களிலே அவர்களிடத்திலே பிடித்தம் செய்து வந்தார்கள். அதற்குப் பின்னால் வந்த அரசு அதை மாற்றிவிட்ட காரணத்தினால் பல கிராமங்கள் இருள் சூழ்ந்து இருக்கின்றன மின்சார விளக்குகள் எரியவில்லை. உதாரணம் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், நான் சார்ந்திருக்கின்ற முதுகுளத்தூர் தொகுதியில், அபிராமம் நகரப் பஞ்சாயத்தாக இருக்கிற பேரூராட்சியில் கடந்த நான்கு ஆண்டு காலமாக மின்சார விளக்குத் தெருவில் எரியவில்லை காரணம், அந்தப் பேரூராட்சிக்கு நிதி

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 20] [திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

நிலைமை இல்லாத காரணத்தினால் அந்த மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதற்காக அங்கேயிருக்கின்ற மின் சாரத் துறை அதிகாரிகள், அங்கே தெரு விளக்கு எரிவதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே, அங்கு இன்றுவரையில் அந்த விளக்குகள் எரியவில்லை. இதற்குக் காரணம் பொருளாதாரப் பற்றாக்குறை.

ஆகவே, நான் பணிவோடு இந்த அரசுக்கும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர வர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதெல்லாம் ஊராட்சிகளுக்கும், வர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதெல்லாம் ஊராட்சிகளுக்கும் வேண்டும்; ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை இப் பொழுது அறிவித்திருக்கிறார்கள்—மாண்புமிகு முதலமைச்சரவர் கள் இரண்டு தினங்களுக்கு முன்பு நல்லதொரு அறிக்கையை அறி வித்திருக்கிறார்கள். எடுக்கப்பட்ட அந்த விவசாயத் துறை. அந்த சுகாதாரத் துறை, அதிலேயிருக்கிற கல்வியைக்கூட கட்டுப் படுத்தக்கூடிய முறையிலே குறிப்பாகச் சத்துணவுத் திட்டத்தை யும் சேர்த்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்புவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராம சாமி அவர்கள் சொல்லியதைப்போல, கல்வியை எப்படி எப்படி ஊராட்சி ஒன்றியத்தில் நிர்வகிப்பது என்பதை அரசாங்கம் பார்த்து ஆணையாகத் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய சத்துணவுத் திட்டத்திலே பல குறைபாடுகள் ஏற்கனவே இருக்கின்றன. அரசாங்கத்திலே இருக்கிற காலத்தில் வயது வரம்புக்கு மீறப்பட்டவர்களெல்லாம், வயது குறைந்தவர்களெல்லாம், படிப்பு, கல்வித் தகுதி இல்லாதவர் களெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சுருக்க மாகச் சொல்லப் போனால் ஒருசிலர் கடந்த ஆட்சிக்கு ஆதரவாக இருப்பவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை முறைப் படுத்தி, தகுதி அடிப்படையில், கல்வித் தகுதியாக இருந்தாலும், வயது தகுதியாக இருந்தாலும் அதை ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு மறுபரிசீலனை செய்து அதை மீண்டும் நல்ல புனருத்

தாரணம் செய்து, ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்ததைப்போல, ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பதைப்போல ஒரு சத்துள்ள உணவாகப் போடுவதற்குத் தகுந்த ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஊராட்சி ஒன்றியத்திலே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் நிதி இல்லை. அந்த நிதிகளெல்லாம், 1958 ஆம் ஆண்டு இருந்த சட்டத்தில் 'Local Roads grants' என்று சொல்லப்படுகிற மானியம் 40 பைசா ஒரு தலைக்கு என்று விதித்திருக்கிறார்கள். அந்த 40 பைசா என்பது 1958 ஆம் ஆண்டு விதித்தது இன்றைக்கு 1989 ஆம் ஆண்டு வரையிலே அதுவே சட்டமாக இருக்கிறது. ஆகவே, 40 பைசாவுக்கு வருகிற நேரத்தில் 20,000 அல்லது 30,000 ரூபாய் ஒன்றியத்திற்கு ஜனத்தொகை அடிப்படையிலே வருகிறது. அதை வைத்து, அங்கே இருக்கிற கேங்க் கூலிக்குக்கூட சம்பளம் போடுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, இதையெல்லாம் மறுபரிசீலனை செய்து, இதிலே பல திருத்தங்களையெல்லாம் செய்து, மக்களுக்குத் தேவையான வகையில் மக்களுக்கு வசதி ஏற்படக்கூடிய அளவிற்கு உருவாக்கி, அதை நல்லதொரு முழு வடிவமான சட்டமாக ஆக்க வேண்டும். ஏற்கனவே எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி, ஏற்கனவே இருக்கக்கூடிய அத்தனை வசதிகளையும் உருவாக்கித் தர வேண்டுமாறு இந்த அரசை நான் பணிவோடு கேட்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து விடை பெறுகிறேன்.

திரு. வே. நா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுடைய உறுப்பினர்கள், தலைவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது ஜனநாயகத்திற்கு முரணானது. It is against the will of the people என்ற முறையில் கண்டித்துப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி மன்றங்களிலே பொறுப்பிலே இருப்பவர்களுடைய பதவிக் காலம் 3 ஆண்டு என்பதை 5 ஆண்டு என்ற முறையிலே நீட்டித்திருப்பதற்கு 'To enable them to serve the people more effectively' என்ற காரணத்தைக் கூறியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் மாநகராட்சியினுடைய மேயர், துணை மேயர்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 20] [திரு. வே. நா. சுப்பிரமணியன்]

களுடைய பதவிக் காலத்தை இரண்டு ஆண்டிலிருந்து ஓராண்டாகக் குறைத்திருக்கிறார்கள். இப்படிக் குறைக்கின்ற போது, இங்கே இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு முன்னவர் அவர்களும் கூறும்போது பலருக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மேயர், துணை மேயர்களுடைய பதவிக் காலத்தை இரண்டாண்டிலிருந்து ஓராண்டாகக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்களின் பொறுப்பிலே உள்ளவர்கள் பதவியை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டாக நீட்டித்திருக்கிறார்கள். இந்த இரண்டுக்கும் சொல்லியிருக்கிற காரணம் முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களுடைய தேர்தல்கள் 1986 ஆம் ஆண்டு நடைபெற்றபோது, அப்போது வாக்களித்த வாக்காளர் பெரு மக்கள் எல்லாம் 3 ஆண்டுகள்தான் இந்தப் பதவி என்பதை உணர்ந்து வாக்களித்திருக்கிறார்கள். தேர்தலிலே நின்றவர்களும் 3 ஆண்டுகள் தான் இந்தப் பதவி என்ற அடிப்படையில் தான் நின்றார்கள். அப்படி இருக்கும்போது அவர்கள் 3 ஆண்டுக் காலத்தில் என்னென்ன கோரிக்கைகளை, திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று வாக்குறுதி அளித்து வெற்றி பெற்றார்கள். மீண்டும் இரண்டு ஆண்டு பதவி நீட்டிப்புச் செய்தால், தாங்கள் 3 ஆண்டு காலத்திலே கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று கருதிக்கொண்டு, இன்னும் இரண்டு ஆண்டு மக்களுக்குத் தேவையான முன்னேற்றத்துறைக்கான காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களைப் பொறுத்தவரையில், மாநகராட்சித் தேர்தல் பற்றி இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கருத்தைக்கூட கேட்காமல், 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவசரம் அவசரமாகத் தேர்தலை நடத்த முன்வருகிறீர்கள். அதே நேரத்தில் ஊராட்சி மன்றங்களுடைய தேர்தலை நடத்துகின்ற கட்டாயம் இருந்தாலும்கூட அவர்களுடைய பதவிக்காலம் இந்த மாதத்தோடு முடிவடைவதாக இருந்தாலும் தேர்தல் நடத்தாமல் மேலும் இரண்டு ஆண்டு பதவி நீட்டிப்பு செய்கிறார்கள். உங்களுடைய மாறுபட்ட கருத்துக்கள், முரணான கருத்துக்கள் இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதிலிருந்து தெரிகிறது.

[திரு. வே. நா. சுப்பிரமணியன்] [1983 பிப்ரவரி 30

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது மிக அழகாகச் சொன்னார்கள். கோடுகளையும் புள்ளிகளையும் இணைத்து கோலம் போடும்போதுதான் அழகான கோலங்களாக அமையும்; அப்படித்தான் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பார்த்தால் அவர்கள் வரையில் எந்தக் கோலமாக இருந்தாலும் அவசரக் கோலம் தெரிகிறது. அதைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவசிய கோலம் என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்த வரையில் எந்தக் கோலமாக இருந்தாலும் அவசரக் கோலம் அலங்கோலமாக மாறிவிடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கிற ஊராட்சி ஒன்றிய அமைப்புகளைப் பார்த்தால், ஒரு ஊராட்சி ஒன்றியம் 20 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது; இன்னொன்று ஊராட்சி ஒன்றியம் 60 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய உதவிகள், ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் கீழ் அளிக்கின்ற உதவிகள், ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை பஞ்சாயத்துக்கள் இருந்தாலும், 20 பஞ்சாயத்துக்கள் இருந்தாலும், 60 பஞ்சாயத்துக்கள் இருந்தாலும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமமான அளவில்தான் கிடைக்கின்றன.

(முற்பகல் 10-00)

ஆகவே இந்த நிலையை மாற்றுகின்ற வகையில் நீங்கள் எல்லாம், இருக்கின்ற பெரிய ஊராட்சி ஒன்றியங்களை எல்லாம் பிரித்துவிட்டு உடனடியாக அவற்றுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்ற எங்களுடைய கருத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையிலே 1975 ஆம் ஆண்டு இதேபோல் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் பதவிக் காலத்தை நீட்டிப்பு செய்யும் மசோதா வந்தபோது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. சீனிவாசன் அவர்கள் அந்த நேரத்தில் இங்கே கூறிய கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருந்திருக்கிறார்.

1989 பிப்ரவரி 20] [திரு. வே. நா. சுப்பிரமணியன்]

அப்படி இருந்தபோது அவர்கள் சொன்னார்கள், "இந்த மசோதாவின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் எனக்கு இலாபம் இருந்தாலும்கூட என்னைப் பொறுத்த அளவில் நான் 5 ஆண்டுகளுக்குத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறேன். எனவே இந்த மசோதா ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரணானது" என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளும் கட்சியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை இங்கே நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். இலங்கைப் பாராளுமன்றத்தினுடைய ஆயுட்காலத்தை 5 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகளாக உயர்த்தியபோது தமிழர் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் "என்னைப் பொறுத்தவரையில் மக்களுடைய நம்பிக்கையை நான் பெற்றாக வேண்டும். எனக்கு என்னுடைய மக்கள் ஐந்தாண்டுகள்தான் இந்தப் பதவியை வகிக்க வேண்டும், ஐந்தாண்டுகளுக்குத்தான் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே இதனை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பதை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன் என்னுடைய பதவியை நான் ராஜினாமா செய்து விட்டு என்னுடைய மக்களின் நம்பிக்கையைப் பெற மீண்டும் தேர்தலில் போட்டியிடுகிறேன்" என்று சொல்லி அதேபோல பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதை இங்கே நான் குறிப்பிடுவதற்கான காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன்.

இங்கே இருக்கின்ற ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மக்களை, ஊராட்சி ஒன்றியங்களுடைய மக்களைச் சந்திக்கப் பயந்து 3 ஆண்டுகளாக இருந்த அந்தப் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளாக உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் மாநகராட்சியிலே தேர்தல் நடத்துவதற்கு அவசரம் காட்டுகிறார்கள். அது எனக்குப் புரிகிறது. அதற்கு அடிப்படைக் காரணமே அந்த 3 மாநகராட்சிகளின் சட்டமன்றத் தொகுதிகள் அனைத்திலும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அங்கே தேர்தல் நடத்தினால் மிகவும் சுலபமாக வெற்றியடைந்து விடுவோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மாநகராட்சிக்கு

விரைவாகத் தேர்தலை நடத்த முன் வருகிறீர்கள். ஆனால் 'மஃப்சில்' என்று சொல்லப்படுகிற பகுதிகளில் அதாவது ஊராட்சி ஒன்றியங்களில் தேர்தலை வைத்தால் எங்கே தோற்று விடுவோமோ என்ற பயத்தின் அடிப்படையில்தான் இந்த ஜனநாயக விரோதமான மசோதாவை நீங்கள் அறிமுகம் செய்திருக்கிறீர்கள் என்று கூறி, இதைக் கண்டித்து, வாய்ப் பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மதிப்புமிகு உறுப் பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசும் போது 6 ஆண்டுகள் என்று நீட்டிப்பதை பற்றி ஓர் உறுப்பினர் ராஜினாமா செய்து விட்டதாகச் சொன்னார்கள். இப்போது தமிழகத்திலே இருக்கக்கூடிய அ.தி.மு.க. நகராட்சி மன்றங்களின் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் அந்த மூன் றாண்டுக் கால பதவி போதும் என்று ஏற்றுக்கொண்டு இப்போது ராஜினாமா செய்வார்களா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சி யைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சவாலை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் ராஜினாமா செய்யத் தயார். தேர்தலை நீங்கள் உடனடியாக நடத்தத் தயாரா? அதாவது நீட்டிப்புச் செய்யாமல் நடத்தத் தயாரா? அப்படி நடத்துவதாக இருந்தால் நாங்கள் ராஜினாமா செய்கிறோம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ராஜினாமா செய்கிற இடங்களில் நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் பொதுவானதுதானே தவிர தனிப்பட்ட முறையில் ஆளும் கட்சிக்காகச் சட்டம் இல்லை. எனவே சட்டம் வந்தால் அது எல்லோருக்கும்தான் பொருந்தும். நீங்கள் முன் வந்தால், நாங்களும் முன்வருகிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தோழமைக் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை என்னவென்றால்—இதை ஏற்றுக் கொள்ளாமல் ராஜினாமா செய்த உதாரணத்தை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள் —இதைக் கோடிட்டுக் காட்டி "அதேபோல் நீங்களும் ராஜினமா செய்யத் தயாரா" என்று கேட்டார்கள். அந்த அறைகூவலை நீங்கள் ஏற்றுக்கொண்டு "ராஜினாமா செய்யத் தயார். நீங்கள் தேர்தலை நடத்தத் தயாரா" என்று கேட்டீர்கள், நாங்கள் தருகிற விளக்கம் ராஜினாமா செய்யப்படுகிற இடங்களில் தேர்தல் நிச்சய மாக நடைபெற்றுத்தான் தீரவேண்டும்; நடத்துவோம். (குறுக் கீடு).

திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, என் னுடைய பெயர் இழுக்கப்பட்டிருக்கிறது. எனவே on a point of explanation என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். என்னுடைய பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இழுத்தார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை யில் அன்றைக்கு வனவாசத்தில் இருந்த நோக்கில் நான் சொன்ன கருத்தாகும். அந்த நோக்கில்தான் நான் அந்தக் கருத்தைச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து அருமையான கருத்து. இதை ஒரு சவாலாக ஏற்று, எதிர்கட்சியிலே இருக்கின்ற நண்பர் கள், அவர்களுடைய ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களையும் நகராட்சித் தலைவர்களையும் ராஜிநாமா செய்யச் சொன்னால்— முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவே சொல்லி விட்டார்கள், உடனடியாகத் தேர்தல் நடத்துவோம் என்று. அது ஒரு நல்ல ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு நல்ல வழியாகும். அதற்கு வழி காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இப்போது 5 வருடங்களாக நீட்டிக்கப்பட்டிருக் கின்றது எதிர்க்கட்சியிலே இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சிகள் இவைகள் எல்லாம் ராஜிநாமா செய்தால்—

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]
[1989 பிப்ரவரி 20

வாய்ப்பை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்திருக்கிறோம். ஏற்கெனவே மூன்று வருடங்கள் முடிந்து 2 வருடங்கள் நீட்டித்து இருக்கிறோம். அதற்கு தேர்தல் நடந்தால், மறுபடியும் பதவிக் காலம் இரண்டு வருடங்களாக இருக்குமா அல்லது இவர்களுக்கு ஐந்து வருடங்களாக நீட்டிக்கப்படுமா என்ற கேள்வி வருகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு லோக்தள் உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற மாதிரியான சிக்கல்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேயே

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய கட்சியின் பெயர் வேறு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன இந்த சிக்கல்கள் எல்லாம் வரும், இரண்டு வருடங்கள் நடத்துவார்களா, ஐந்து வருடங்கள் நடத்துவார்களா என்று, நாங்கள் மட்டும் ராஜினாமா பண்ணினால், அவர் கேட்டது ரொம்ப நியாயமான கேள்வி. ஆகவேதான், தேர்தலை மொத்தமாகவே நடத்த வேண்டும் என்று கேட்கிறோம்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைத்தேர்தல் என்றால் எப்போதும் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள்தான் என்பது ஏற்கெனவே எல்லோருக்கும் தெரியும்.

* திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1958 ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தில் மேலும் சில திருத்தங்களை இப்போது நாம் கொண்டு வந்து இருக்கிறோம். மூன்று ஆண்டுகள் என்பதை ஐந்து ஆண்டுகள் என்று பதவிக் காலத்தை மாற்றி இருப்பது முற்றிலும் பொருத்தமான ஒன்றாகும்.

1989 பிப்ரவரி 20] [திரு. செ. இராமலிங்கம்]

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி மன்றங்களில் பொறுப்பேற்றவர்கள், தங்களுடைய ஊராட்சிகளுக்கு ஒன்றியத்தின் மூலமாகவோ அரசின் மூலமாகவோ செய்யப்பட வேண்டிய காரியங்களை, மூன்று ஆண்டு காலத்திற்குள் செய்ய இயலவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நானே ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கின்ற திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், பொது நிதியிலிருந்து, சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு 12 இலட்சம் ரூபாயை ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஒரு பால வேலைக்கு அரசுக்குச் செலுத்தியிருந்தோம். எதிர்க்கட்சி அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பெருந்தலைவர் என்ற காரணத்தினாலோ என்னவோ கடந்த காலத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் அதற்குப் பிறகு ஆளுநர் அரசும் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டுகூட அந்த 128—159 டி-2 பி.ஓ. 12 86 எம் என் மோகன் குமார் வேலையைத் தொடங்க முன்வரவில்லை.

மூன்று ஆண்டுக் காலத்திற்குள் ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட பணி முடிக்கப்படவில்லை என்பதை உதாரணத்திற்குக் கூற விரும்புகிறேன். இன்றுவரை அதற்கான திட்ட வேலைகள் துவங்கப்படவில்லை. எனவே 5 ஆண்டுக் காலமாக இதை நீட்டியிருப்பது முற்றிலும் பொருத்தமான ஒன்றாகும் என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். அதே நேரத்தில் உள்ளாட்சிச் சட்டத் திருத்தத்தின்போது, ஏற்கெனவே இந்திய அரசாங்கம், அசோக் மேத்தா கமிட்டி மூலமாகவும், ஜி.வி.ஆர். ராவ் கமிட்டி மூலமாகவும் ஒரு சிறந்த அறிக்கையைக் கொடுத்து இருக்கின்றார்கள். அந்த அறிக்கையை அமல்படுத்துவது உள்ளபடியே ஜனநாயக அடித்தளமாக இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை மேலும் சீர்திருத்துவதற்கு உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் தன்னிறைவுத் திட்டம் என்கின்ற பெயரால் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து ஊராட்சி ஒன்றியத்திலே இருந்து பொது நிதி முழுவதையும் தவறான வழியில் செலவழித்து இன்றைய தினம் ஒன்றியங்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் கடனாக இருக்கின்ற அவல நிலைமைகளைப் பார்க்கிறோம். தன்னிறைவுத் திட்டம் என்கின்ற பெயரால் யார்

யாருக்கோ அந்த காலத்தில் தன்னிறைவு ஏற்பட்டதே தவிர, ஊராட்சிகளுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுக்கோ, பொது மக்களுக்கோ எத்தவிதமான வேலையிலும் தன்னிறைவு ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் அமர்வது சரிதானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்ற உறுப்பினர்களாகவே தேர்ந்தெடுக்கப்பட முடியாதவர்கள், தோற்றுப்போனவர்கள். இன்னும் சொல்லப் போனால் டெபாசிட்டே இழந்தவர்கள்கூட சென்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

(முற்பகல் 10-10)

அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற தகுதியின் அடிப் படையில் ஊராட்சி மன்றத் தலைவர்களோடு உட்காருவது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களை ஊராட்சி ஒன்றியத்தில் சிறப்பிக்கும் வகையில் உயர்ந்த தகுதி யளித்து உட்காரச் செய்தால் ஒன்றியங்களிலே இரட்டை ஆட்சி முறை ஏற்பட வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப் பினர் நினைத்தால், நினைத்த உடனே ஆணையாளரை, நினைத்த உடனே பொறியாளரை மாற்றலாம் என்கின்ற அனுபவம் இருந்தது. ஆனால் இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த ஒன்றியங்களில் ஒரு குழு உறுப்பினராக, ஆலோசனை வழங்கக் கூடியவர்களாக அமரலாம், அதற்கு வாய்ப்பளிக்கலாம் என்கிற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தற்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசின் மூல மாக வர வேண்டிய வருவாய்கள் முறையாக வழங்கப்படுவதில்லை. கடந்த காலங்களில் Local cess, Surcharge, Surcharge on Matching grantபோன்ற அரசு கொடுக்க வேண்டிய தொகைகள் எல்லாம் ஒவ்வோர் ஆண்டும் காலம் கடந்து வழங்கப்படுகிறது. 1394, 1395 ஆகிய இரு பசலிகளுக்கு இதுவரை ஈட்டுமானியம் வழங்கப்படவில்லை. அதுபோன்று Local Roads Grant வழங்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் சட்ட விதி 131 பிரிவின்படி மக்கள் தொகை அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 40

1989 பிப்ரவரி 20] [திரு. செ. இராமலிங்கம்]

பைசா வழங்கப்படுவதை ஒரு ரூபாயாக உயர்த்த வேண்டும். அது போல ஸ்தல சாலை மானியம் கிலோ மீட்டருக்கு 535 ரூபாய் வழங்கப்படுவதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசிடமிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப் பட வேண்டிய Railway Cess grant மானியத் தொகை வழங்கப்படவில்லை. அதைப்போல Sugarcane Cess வழங்கப் படவில்லை. இவற்றை எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குவதற்குத் தேவைப்படுகிற வேலைகளை உடனடியாக அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களில் திட்ட வேலைகளை எடுத்துச் செய்ய இயலவில்லை. பொது நல வேலைகளுக்கு எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள ஒப்புதல் அளிக்க வேண்டு மென்று சொல்கிறார்கள். இதனால் ஊராட்சி ஒன்றியங்களில் வேலைகளை உடனடியாகச் செய்ய முடியவில்லை ஆகவே இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் தேவையில்லை, ஊராட்சி ஒன்றியத் தலைவரே முடிவு செய்து வேலைகளைச் செய்யலாம் என்கிற வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று இன்றைய தினம் ஊராட்சிகளில் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய வேலைகளை எடுத்துக் கொள்ள முடியவில்லை. உதாரணமாக வறுமை ஒழிப்பு வேலை போன்ற வேலைகளை ஊராட்சி ஒன்றியங்களில் உடனடியாகச் செய்ய முடியவில்லை. ஆகவே, இந்த வேலைகளை எல்லாம் ஊராட்சி ஒன்றியத் தலைவரின் ஒப்புதலின் அடிப்படையிலேயே செய்யலாம் என்கிற வகையில் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவருக்குத் தெரியாமலே பகுதி நேர எழுத்தர்களுக்கு ஊராட்சி ஒன்றியங் களின் மூலமாக ஊதியம் வழங்கப்படுகிறது. முந்தைய அரசு, ஜனநாயகத்திற்கு முரணாக இப்படி வழங்கலாம் என்று ஆணை யிட்டிருக்கிறது. அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க லாம். ஆனால் பஞ்சாயத்துத் தலைவருக்குத் தெரியாமல் பஞ் சாயத்து யூனியனிலிருந்து சம்பளம் வழங்குவது சரியல்ல என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தற்போது பேருந்துகள் ஓடுகின்ற ஒன்றியச் சாலைகளை அரசே எடுத்துப் பராமரிக்கப் போவதாக உத்தர விடப்பட்டிருக்கிறது. ஆனால் பல சாலைகள் அவ்வாறு எடுத்து பராமரிக்கப்படவில்லை. இதுவரை எடுத்து பராமரிக்கப்படாத சாலைகளை எல்லாம் அரசின் நெடுஞ்சாலைத் துறை உடனடியாக எடுத்து பராமரிப்புப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. அ. மு. ஹமீது இப்ராகிம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பதவிக் காலத்தை 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக உயர்த்துவதை நான் வரவேற்கிறேன். ஆனால் சில பஞ்சாயத்துக்களில் நடைமுறைகள் மிகவும் மோசமாக உள்ளன. கீழக்கரை நகரில், பஞ்சாயத்தில் விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரியைப் பொறுத்தவரையில் 100 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக ஆண்டு ஒன்றுக்கு வசூலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்குள்ள ஏழை எளிய மக்கள் அந்த அளவுக்குக் கட்ட முடியாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன் அதை முறைப்படுத்தி வசூல் செய்வதற்குரிய வழி வகையினை இந்த அரசு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எனது தொகுதியான கடலாடி தொகுதி ஒரு வறட்சிப் பகுதியாகும். அந்தத் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை, சாலை வசதிகள், மின் வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவதிக்குள்ளாகி இருக்கும் மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசிடம் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொண்டு, இந்தச் சபையில் பேச அனுமதித்தற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழக ஜனதாவின் சார்பாக சபைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பு கிறேன். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்களின் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக அதிகரித்திருப் பதை ஓரளவிலே நான் வரவேற்கிறேன். காரணம் என்னவென்றால், கிராமங்களிலே இருக்கக்கூடிய கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் அந்தப்

1989 பிப்ரவரி 20] [திரு. ஜி. ஜி. குருமூர்த்தி

பகுதியில் பல அபிவிருத்திப் பணிகளைப் பார்த்து, ஆராய்ந்து செய்வதற்கு அவர்களுக்கு காலம் அதிகமாக இருப்பது அதிகமான கெடுதலைக் கொடுக்காது. அது வரவேற்கக்கூடிய முக்கியமான காரியம். இன்னொரு முறையிலே பார்த்தாலும்கூட, இது நல்லதுதான். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், நகராட்சிகள் தேர்தல்கள் எல்லாம நடைபெற்றுவரும் விவரங்களைப் பார்க்கும்போது, தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கும் விவரங்கள் இருக்கின்றன. அதைப் பார்க்கும்போது இதை பெரிய பொதுத் தேர்தல்கள்போல் நடத்த வேண்டிய பெரிய கடமை அரசுக்கு ஏற்பட்டு விடுகிறது. இடைக்காலத்தில் பார்த்தால் எவ்வளவு தேர்தல்களை நாம் நடத்தவேண்டியிருக்கிறது என்பதை ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று அசெம்பிளி தேர்தல். அது முடிந்தவுடன் பார்லிமெண்ட் தேர்தல், அது முடிந்தவுடன் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல்கள், அதற்குப் பிறகு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல். இப்போது மறுபடியும் அரசாங்கம் கொண்டுவர இருக்கின்ற மேல்சபைத் தேர்தல். இப்படி தேர்தல்களை நடத்துவதிலேயே அரசாங்கத்தின் காலம் பூராவும் வீணாகிவிடுவதால், 5 ஆண்டுகள் என்று அதிகப்படுத்துவதில் எந்தவிதக் குறைபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு பிரச்சினையை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இப்போது பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளித்திருக்கக்கூடிய 2 ஆண்டுக் காலத்தை, மேற்கொண்டு அரசு நீடிக்காது என்ற உறுதியை அரசு கொடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், யாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய கட்சிகள், யார் பொறுப்பை ஏற்றிருக்கிறார்களோ அவர்களுடைய இஷ்டத்திற்கு தகுந்தாற்போல பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து வருகின்றன. அவர்களுக்கு எப்போது சவுகரியமாக இருக்கிறதோ, அவர்களுடைய கட்சிக்கு எப்போது சவுகரியமாக இருக்கிறதோ அப்போதுதான் அந்தத் தேர்தல்களை நடத்தும் பழக்கம் தொடர்ந்து வந்திருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் கூட இந்த நிலைமைதான் இதுவரையில் நடந்து வந்து கொண்டிருக்கிறது. சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகளாக இப்படித்

தான் நடந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலும் அதிகப்படுத்தாமல் இருக்க வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்து, குறிப்பாக பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல்களை நடத்துவது பற்றி அரசியல் சட்டத்திலே காலத்தையும், அடிப்படையாக வழி வகைகளையும் நிச்சயம் செய்துவிட வேண்டும். அப்படி அரசியல் சட்டத்திலே வழிவகை செய்துவிட்டால், இந்த விவகாரம் இருக்காது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடைய இஷ்டப்படி ஸ்தல ஸ்தாபனங்கள் தேர்தல்களை நடத்த வகையில்லாமல், ஒழுங்காக குறிப்பிட்ட காலங்களில் நடத்த வாய்ப்பு கிடைக்கும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி பல அறிஞர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பைத் தேர்தல் கமிஷன் ஏற்றுக்கொண்டால் பரவாயில்லை, அப்படி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடித்துக் கொள்கிறேன்

(முற்பகல் 10-20)

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order எங்கள் தொகுதியில் இருக்கிற மணப்பாறை நகராட்சியின் தலைவர் நான்கு மாதங்களுக்கு முன்பாக. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசியது தொடர்பாக உங்களுக்கு என்ன point of order? இப்படிக் குறுக்கிட்டுப் பேசக் கூடாது. அதற்கு அனுமதி கிடையாது.

*** திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்தினுடைய உறுப்பினராகத் துவங்கிய என்னுடைய பொது வாழ்க்கையை, ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகவும், தலைவராகவும், ஒன்றியத்தினுடைய துணைப் பெருந் தலைவராகவும், ஒன்றியத் தலைவராகவும் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராகவும் ஏற்றம்

1989 பிப்ரவரி 20] [திரு. மீ. அ. வைத்தியலிங்கம்]

பெறச் செய்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், எனது நெஞ் சார்ந்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்பதாவது சட்டமன்றத்தில் ஜனநாயகத்தின் உயிர் மூச்சான உள்ளாட்சிகளின் ஆயுட்காலத்தைக் குறித்த சட்டத் திருத்தத்தின் மீது உரையாற்றுகிற வாய்ப்பினை, கிட்டத்தட்ட 46,000 வாக்குகள் வித்தியாசத்தில் உருவாக்கித் தந்த தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தம், ஒரு ஜனநாயக நாட்டினுடைய ஆணி வேராக, உயிர் மூச்சாகச் செயல் படுகிற உள்ளாட்சி மன்றங்களுக்கு மூன்றாண்டிலிருந்து ஐந்தாண்டுகளாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்கிற மக்கள் முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் அல்லது நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களையும் என் ஒன்றியப் பெருந்தலைவர்களையும், ஊராட்சிமன்றத் தலைவர்களையும் பேரூராட்சித் தலைவர்களை யும்கூட தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்காகச் சந்திக்க முடியாது என்ற காரணத்தினால்தான் ஊராட்சிகளிலேகூட அந்தந்தத் தெருக்களிலேயே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தாலேதான் ஜனநாயக நாட்டிலே உள்ளாட்சி மன்றங்கள் அதன் ஆணி வேராக உயிர் மூச்சாகத் திகழ்கின்றன என்றால் மிகையாகாது. அப்படிப்பட்ட உயிர் மூச்சுள்ள ஜனநாயகத்தினுடைய ஆணி வேராகத் திகழ்கிற உள்ளாட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை 5 ஆண்டு களாக நீட்டிக்கிற இந்த மிகச் சிறந்த சட்ட முன்வடிவைப் பற்றி நம் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கக் கூடிய திரு. உக்கம்சந்த் அவர்கள் பேசும்போது "மக்கள் உங்களுக்கு மூன்றாண்டுக் காலம்தானே பதவியிலிருக்க வேண்டுமென்று வாக்களித்தார்கள். 5 ஆண்டுகளாக நீட்டிப்பதற்கு மக்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறீர்களா"? என்று கேட்டார்கள். மிகப் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஒரு அமைச்சரவை எடுத்த முடிவு இது என்பது மட்டுமல்லாமல், தி.மு.க.

தனது தேர்தல் அறிக்கையிலேயே மிகத் தெளிவாக, "தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமானால், உள்ளாட்சி மன்றங்களின் பதவி காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக நீட்டிப்போம்" என்பதைத் தெளிவாகத் தெரிவித்தது. அந்தத் தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலேயே, அதை விரும்பிய மக்கள் வாக்களித்த காரணத்தினாலே, நாங்கள் ஏற்கெனவே பொதுமக்கள் மத்தியிலே அனுமதியைப் பெற்றுவிட்டோம் என்பதற்கு வேறு சான்று தேவையில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிளாக் டெவலப்மென்ட் ஆபீஸ் என்று குறிப்பிடுவது வட்டார வளர்ச்சி அலுவலகம் என்று சொன்னால், அந்த ஒன்றியத்திற்குள் உட்பட்ட பல்வேறு கிராமங்களின் சுகாதார வளர்ச்சி, கால்நடை பராமரிப்பு வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, மின்சாரத் துறையில் ஏற்பட வேண்டிய வளர்ச்சி என்று இப்படிப்பட்ட வளர்ச்சிகளை உருவாக்குவதுதான். அதனால்தான் வட்டார வளர்ச்சி அலுவலகம் என்று பெயர் சூட்டியிருக்கிறோம். ஆனால், கடந்த காலத்தில் இருந்த அரசு அப்படிப்பட்ட வளர்ச்சியை உருவாக்குவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அனுமதிக்காததன் விளைவாகத்தான், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியாததன் விளைவாகத்தான் மேலும் 2 ஆண்டுகள் நீட்டித்து அந்தக் காரியங்களைச் செய்கிறோம், அந்த வளர்ச்சிப் பணிகளைச் செய்கிறோம் என்று மக்களிடம் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லி, அந்த அறிக்கையின் மூலம் வெற்றி பெற்று, இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார்கள். "பெருந் தலைவர்" என்ற பெயரை எடுத்ததற்குக் காரணம் "பெருந் தலைவர்" என்று குறிப்பிட்டால், அது காமராஜர் அவர்களைத்தான் குறிக்கும் என்ற காரணத்தால்தான் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கிற வாக்காளர்கள் ஒரு தொகுதியிலே 90 பேர் போட்டியிட்டாலும் ஒருவரை மட்டுமே தேர்ந்தெடுக்கிற ஆற்றல் பெற்ற மக்கள். அப்படிப்பட்ட தமிழ்நாட்டு மக்கள் "பெருந் தலைவர்"

என்று அழைக்கப்படுகிறவர்களையெல்லாம் காமராஜர் என்று எண்ணிக் கொள்பவர்களாக இருப்பார்களானால், தமிழ்நாட்டில் ஜனநாயகம் தழைத்திருக்க முடியாது என்பதே என் அபிப்பிராயம் எனவே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரைப் பெருந் தலைவர் என்று அழைப்பதைக் கூட சகித்துக் கொள்ள முடியாத அளவிற்கு ஒன்றியத் தலைவர்களின், ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரங்களைப் பறித்தவர்கள்தான் இன்றைக்கு ஐந்தாண்டு களுக்குப் பதவி காலத்தை நீட்டிக்கிறபோது, நீடிப்பு செய்கிற அரசைப் பார்த்து கேட்கிறார்கள், நீங்கள் மக்களைச் சந்திக்க பயப்படுகிறீர்கள் என்று. . .

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். பெருந்தலைவர் என்று அழைப்பதை நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. இருந்தாலும், பேரறிஞர் அண்ணா என்றால் அவர் ஒருவருக்குத்தான் பொருந் தும். கலைஞர் என்றால் நமது முதல்வர் அவர்களுக்குத்தான் பொருந்தும். அதைப்போன்று பெருந்தலைவர் என்றால் காம ராஜர் அவர்களுக்குத்தான் பொருந்துமே தவிர வேறல்ல. அதனால்தான் நாங்கள் சொன்னோம். ஒன்றியத் தலைவர் என்று அழையுங்கள் என்று சொல்வதில் தவறில்லை. அது வேண்டா மென்றால், நீங்கள் சொன்னபடி எப்படி வேண்டுமானாலும் அழை யுங்கள்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்தின் தலைவர்கள், பேரூராட்சி மன்றத்தின் தலைவர்கள் அங்கம் வகிக்கிற சபைக்குத் தலைமை தாங்குகிற காரணத்தால் ஒன்றியத்தினுடைய தலைவரைப் பெருந்தலைவர் என்று அழைக்க வேண்டுமென கொண்டு வந்ததே காமராஜர் அவர்கள்தான் என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தன்னைப் போல அனை வரும் பெருந்தலைவராக இருக்கவேண்டுமென்ற பெருந்தன்மை யோடு அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: தலைவர் அவர்களுடைய கருத்து கூட சரியாக இருக்குமென்றே நான் கருதுகிறேன். எனவே, பெருந்தலைவர் என்று அழைக்கிற காரணத்தால் எல்லோரும் காமராஜராகி விடவும் முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கலைஞர் என்று அழைக்கிற காரணத்தால் அத்தனை பேரும் தமிழகத்தின் முதலமைச்சராகவும் ஆகிவிட முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் மக்களைச் சந்திப்பதற்கு, உள்ளாட்சி மன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கு பயப்படுகிறீர்கள் என்று இந்தச் சட்டமன்றத் தேர்தலின் ஓட்டுக்களை எண்ணிப் பார்த்து விட்டுதான் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒன்றியத் தேர்தலில் பெருந்தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது 16,500 வாக்குகளில் வெற்றி பெற்றேன். இன்றைக்கு அதே ஒன்றியத்திலிருக்கிற கிராமங்களில் மட்டும் 33,000 வாக்குகளை நான் அதிகமாகப் பெற்றிருக்கிறேன் என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இச்சட்ட முன்வடிவில் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்துவது, ஏற்கெனவே தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப, மக்களுக்கு ஆற்ற வேண்டிய, குறிப்பாக கிராமப் பகுதிகளின் முன்னேற்றத்திற்காக ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றுவதற்குப் பயன்படும் என்பதை எடுத்துச் சொல்லி, என்னுடைய நல்லாதரவை, மகிழ்ச்சியை, பாராட்டுகளை, வாழ்த்துக்களை, நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். இதனை இந்திய பொதுவுடமை கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். நான் ஒன்றியப் பெருந்தலைவர் என்ற முறையில் இதனை வரவேற்கவில்லை. பல்வேறு படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே ஒன்றும் சாதிக்க முடியவில்லை. மாறாக, அரசாங்க அதிகாரிகள்தான் கோலோச்சினார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புக்களைத் தன்னாட்சி அமைப்புகளாக, சுயாட்சி அதிகாரம் கொண்ட அமைப்புகளாக மாற்ற வேண்டுமென்று கூறப்பட்டிருக்

1989 பிப்ரவரி 20] [திரு. ந. நஞ்சப்பன்]

கிறது. ஆனால் ஏற்கனவே இருக்கிற அதிகாரத்தைப் பறிப்பது எந்த வகையிலும் சரியானதாக, உகந்ததாக இருக்காது. இருக்கிற அதிகாரத்தைப் பறித்ததே அரசியல் சட்டத்தில வலியுறுத்தியிருப்பதற்கு முரணாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டித் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இருந்த அதிகாரத்தைப் பறித்தது எந்த ஆட்சிக் காலத்தில் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ந. நஞ்சப்பன்: தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்த ஆட்சி அதைச் செய்தது என்றுதான் குறிப்பிட்டேன். இப்போதிருக்கிற சட்ட முன்வடிவை நான் இந்திய பொதுவுடைமைக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டுதான் தொடங்கி இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றியத்தின் தொடர்பாக இருக்கிற வேளாண்மைத் துறை, கல்வித் துறை, பொதுச் சுகாதாரம் அத்தனையும் உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. சாதாரண ஊராட்சி மன்றத் தலைவர்கள், அந்தஸ்துள்ளவர்களாக, கௌரவமுள்ளவர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. கீழ்த்தரமாக, கேவலமாக அவர்கள் இழித்துரைக்கப்பட்டார்கள் என்பதை வேதனையோடு நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் ஒரு பல்பை எரிய வைப்பதிலிருந்து தங்களுடைய ஊராட்சிகளின் நிதியைப் பயன் படுத்துவது வரைக்கும் அவர்களுக்கு உரிய அதிகாரம் தரப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற நிதியைப் பயன் படுத்துவதற்குக்கூட அரசாங்க அதிகாரிகளுடைய தயவு இருந்தால்தான் பயன்படுத்த முடியும் என்ற அளவிற்கு நிலைமை சென்றுவிட்டது.

(முற்பகல் 10-30)

இப்போதுமகூட இன்றைக்கு வரை, கனிம நிறுவனங்களில் இருந்து ஊராட்சிக்கு வரவேண்டிய பணம் ஒட்டுமொத்தமாக எங்களுடைய மாவட்டத்திற்கு வரவில்லை. கடந்த ஆண்டுகளில் பல முறை முயற்சித்தோம். எங்கள் ஊராட்சிகளுக்கு மட்டும் 1 கோடி ரூபாய்க்கு மேல் வரவேண்டிய பங்குத் தொகை இருக்கிறது. அது வந்திருந்தாலும்கூட எங்களுடைய ஊராட்சி மன்றங்கள் நன்றாகச் செயல்பட ஏதுவாக இருந்திருக்கும்.

]திரு. ந. நஞ்சப்பன்[[1983 பிப்ரவரி 20

அதைப்போலவே 8 ஆண்டு காலமாக பெண்ணாகரம் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவந்த பரிசல் துறைகள் தனியாருக்கு விடப்பட்டு இருக்கின்றன. அதன் மூலமாக 1½ லட்சம் ரூபாய்க்கு மேலாக இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை நான் சுட்டிக்காட்ட காரணமே, சாதாரணமாக ஊராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத அளவிற்குக் கடந்த காலத்திலே சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதற்காகத்தான். தவறு செய்த அதிகாரிகள் மீது, இன்னின்ன துறைகளிலே தவறு செய்தார்கள் என்று ஊராட்சி அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்தவைகூட அந்த ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றினாலும்கூட, நடவடிக்கை எடுக்கின்ற அளவிற்குக் கடந்த காலத்தில் ஏற்பாடுகள் இல்லை. எனவே வருகின்ற காலத்திலாவது, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்க வேண்டும். அதன் மூலமாகத்தான் உள்ளாட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றியங்களும், செயல் ஊக்கம் உள்ள அமைப்புகளாக, ஜனநாயகபூர்வமாகச் செயல்படுகிற அமைப்புகளாக ஆக முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, வளர்ச்சி அடைந்த பகுதிகளுக்கும், வளர்ச்சி அடையாத பகுதிகளுக்கும், ஒரே அளவாகத் தரப்படுகிறது. பரப்பளவு, மக்கள் தொகை, வளர்ச்சியின் தன்மை, அங்கேயிருக்கிற சூழ்நிலை இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து நிதி ஒதுக்கீடு செய்வது தான் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சிய ஒன்றியக் கட்டுப்பாட்டில் இருக்கிற அதிகாரிகள் ஊராட்சி ஒன்றியம் வேண்டாம் என்றாலும்கூட, அதிகாரிகளே நிர்ப்பந்தப்படுத்துகிற, வேறு இடத்திற்கு மாற்றுகின்ற போக்கும்கூட இருந்தது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானங்கள் கூட உதாசீனப்படுத்தப்பட்டன என்பதைநான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அந்த அதிகாரங்களை மீண்டும் வழங்குவது என்பதும், நன்றும் நிதி வசதியோடு கூடிய அதிகாரங்களைத் தரவேண்டும் என்பதும், சத்துணவுப் பணியாளர்கள் உட்பட அனைத்துப் பணிகளும், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற நியமனக் குழுவின் மூலமே அந்தப் பணியை வழங்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த

1989 பிப்ரவரி 20] [திரு. ந. நஞ்சப்பன்]

அமைப்புகள் என்பது, அதிக நிதி வசதியுடன் கூடிய அமைப் பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுமொழி சொல்வதற்கு முன்னாலே, மிக முக்கியமான ஒரு பிரச்சினை ஒன்றை இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். நடைபெற்று முடிந்த யூனியன் தேர்தல்களில், பஞ்சாயத்து யூனியன் தேர்தல் முடிந்தவுடன், நியமன உறுப்பினர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூல மாக எல்லா யூனியன்களுக்கும் நியமன உறுப்பினர்களை நிய மித்தார்கள். துணைத் தலைவர் தேர்தலிலும் அந்த நியமன உறுப்பினர்களுக்கு ஓட்டுரிமை உண்டு என்றும் சொல்லி எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் அந்தத் தேர்தல் நடைபெற்று முடிந்தது. அந்த நியமன உறுப்பினர்களை நாம் தொடர்ந்து நியமன உறுப்பினர்களாக நீடிப்பார்கள் என்று அறிவிக்கப் போகி றோமா, அல்லது அந்த நியமன உறுப்பினர்களை ரத்து செய்யப் போகிறோமா—அந்த நியமன உறுப்பினர்களை கலெக்டர் நிய மித்தது 3 ஆண்டுகளுக்குத்தான், அந்த 3 ஆண்டுக்காலம் முடிந்து விட்டது—அல்லது புதிதாக நியமன உறுப்பினர்களை நாம் நிய மிக்கப் போகிறோமா, என்ற விவரங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அரிய ஆலோசனை பரிசிலிக்கப் படும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து நீங்கள் பேசுவதாக இருந்தால், முன்னாலே எனக்கு எழுதிக் கொடுத்து, அனுமதி பெற்றிருந்தால், நான் அனுமதி கொடுத்திருப்பேன். மேலவைத் தீர்மானம் பற்றிப் பேசுகிற பட்டியலில் உங்களுடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் பேசுவதாக இருந்தால், முன் கூட்டியே என்னிடம் சொல்லியிருக்கலாம்.

[1989 பிப்ரவரி 20

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய அமைச்சர் பதில் சொல்வதற்கு முன்னால், இதையும் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது வசதியாக இருக்கும் என்பதால் இந்தக் கருத்தைக் கூற விரும்புகிறேன். முந்தைய அரசு ஏற்கனவே ஷெட்யூல்டு கேஸ்ட், ஷெட்யூல்டு டிரைப்ஸ் மற்றும் பெண்களுக்காக ரிசர்வேசன் கொண்டு வந்தது. உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டியதாக இருந்ததால், அன்றைக்கு அது கைவிடப்பட்டது. அந்த அடிப்படையிலே உள்ளாட்சிகளிலும் பெண்களும ஆதிதிராவிடர்களும் இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் தரப்பட்டு, 2 பெண்களும், ஆதி திராவிடர்களும் அங்கே வந்து பணியாற்றுகிற அந்த வாய்ப்பு தரப்பட்டது. வேண்டுமானால், அவர்களை அண்ணா தி.மு.க. அரசு நியமித்தது என்று சொல்லி, அவர்களை நீங்கள் வீட்டுக்கு அனுப்புங்கள். ஆனால் யாராவது இரண்டு பெண்களும், 2 ஆதி திராவிடர்களும் தொடருகிற வகையில், மீதி இருக்கிற 2 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு வாய்ப்புத தரவேண்டும் இந்த அரசு. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள பரிசீலனை செய்ய வேண்டும். ஏன் என்றால், பெண்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் அந்த வாய்ப்பு இருந்தது. இப்போது இல்லாமல் போகிறது. இந்தச் சட்டத் திருத்தத்திலே கூட, ஏற்கனவே இருந்த அந்த வாய்ப்பை, ஆந்திராவிலே இருப்பதைப் போல, ஆதி திராவிடர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், மற்றும் பெண்களுக்கும் ரிசர்வேசன் கொண்டு வந்து. தேர்தலை நீங்கள் எப்போது நடத்துகிறீர்களோ, அப்போதாவது கொண்டு வருவதற்கு இந்தச் சட்டத் திருத்தத்திலே வழிவகை செய்யுமா என இந்த அரசை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களை, அதைப்போன்று மகளிரை 'கோ-ஆப்ட்' செய்வதில், இந்த அரசுக்கு எந்தவித மறுப்புக் கருத்தும் கிடையாது. 'கோ-ஆப்ட்' செய்வது என்றாலே குறிப்பிட்ட அவை கூடி, அவர்களுடைய பெரும்பான்மையின் அடிப்படையிலே தான் 'கோ-ஆப்ட்' செய்யவேண்டும். அதை விட்டுவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரே நியமிப்பது என்பது 'கோ-ஆப்ட்' செய்வது ஆகாது. அது 'நாமினேஷன்' ஆகும். எனவே தான் 'நாமினேஷன்' முறை மாற்றப்பட வேண்டும். 'கோ-ஆப்ட்' செய்கின்ற

முறை வரவேண்டும். அந்த முறை வருகின்ற நோக்கில் நிச்சய மாக அதே அளவிற்கு, எந்த அளவிற்குத் தேவையோ, அந்த அளவிற்கு மகளிரும் ஆதி திராவிடர்களும் பிரதிநிதித்துவம் பெறக் கூடிய நிச்சயமான ஒரு நிலை உருவாக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நீங்கள் சட்டத்திலே திருத்தம் செய்வதிலே எனக்குக் கருத்து வேற்றுமை கள் கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிப்பதற்குப் பதிலாக, ஊராட்சிகளிலே இருக்கின்ற பெரும்பான்மை உறுப்பி னர்கள் கூடி, யாரை வேண்டுமானாலும், பெண்களை, ஆதிதிரா விடர்களை நியமிக்கட்டும் ஆக அந்த இரண்டு ஆண்டுகளுக்கு அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. எனவே இப்போது நீட்டிப்புச் செய்யும்போதே பெரும்பான்மையில் இருக்கின்ற உறுப் பினர்களுடைய விருப்பம் போல, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், பெருந்தலைவர், துணைத் தலைவர் இவர்கள் கூடி, ஏன் 2 பெண் களுக்கும், 2 ஆதி திராவிடர்களுக்கும், அந்த வாய்ப்பைத் தரக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்போது இந்த கருத்தும் இணைத்துப் பரிசீலிக்கப் படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே உள்ள நடைமுறையானது இவ் வாறு பொது விவாதங்களிலே பேசுவதற்காகத்தான் தங்களிடத் திலே முன்பே பெயர்களைக் கொடுப்பது என்பது வழக்கமாக இருந்தது. மசோதாக்களின் மீது பேச விரும்பினால் கையைத் தூக்கிவிட்டு, சம்பந்தப்பட்ட உறுப்பினர் உங்களுடைய அனுமதி யைப் பெற்று, பேசுவதுதான் வழக்கமாக இருந்தது. அந்த வழக்கம் இப்போது மாற்றப்பட்டு விட்டதா? அலுவல் ஆய்வுக் குழுவிலே என்னையும் ஓர் உறுப்பினராகத் தாங்கள் நியமித் திருக்கிறீர்கள். இந்த முறையை எப்போது மாற்றினீர்கள்? இது எனக்குத் தெரியாது. ஆகையால்தான் தங்களிடத்திலே எழுதிக்கொடுக்கவில்லை. இதற்கு முன்னாலே தொடர்ந்து இருந்துகொண்டு வந்த வழக்கம், மசோதாக்களிலே சம்பந்தப் பட்ட உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பி னால், கைகளை உயர்த்தி, அனுமதி பெற்றுத்தான் பேசுவது வழக்கமாக இருந்தது. ஆகவே தங்களிடம் பெயரை எழுதிக் கொடுக்கவில்லை. எங்களுடைய இரண்டு கட்சிகளைச் சேர்ந்த வர்கள் பேசுவதற்கு அனுமதி அளிப்பதுதான் நியாயமானது என நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் அவர்களே, இன்றைக்கு நடைமுறையில் இருக்கின்ற வழக்கம் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும், எந்தெந்த மசோதாக்களின் மீது யார் யார் பேசுகிறார்கள் என்பதை ஒவ்வொரு கட்சியினுடைய கொறடாக்களும் எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இங்கே பெயர்களை வாசிக்கிறேனே தவிர, நானாக யாரையும் குறிப்பிடவில்லை. அது அவைத் தலைவருடைய வேலையும் அன்று. அதே நேரத்தில் தாங்கள் பேசுவதாக இருந்தால், அனுமதி பெற்றுப் பேசுவதில் எனக்கு இரண்டாவது கருத்து கிடையாது. நான் சொல்ல வந்தது எல்லாம், அடுத்து வரப் போகிற மேலவைத் தீர்மானத்தில் பேசுவதற்கான வாய்ப்பில் தங்களுடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது. எனவே அதில் பேசிக் கொள்ளலாம் என்பதனையும், இதிலே பேச வேண்டாம் என்பது அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது மரபுக்கு மாறானதும் அன்று. தாங்கள் பேசுவதாக இருந்தால் எனக்கு ஒன்றும் அதில் இரண்டாவது கருத்து கிடையாது. தாங்கள் தாராளமாகப் பேசலாம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். இந்த அவையையே நீங்கள் முடித்து வைக்கக் கூடிய அளவிற்குப் பேசலாம். எனக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடும் கிடையாது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்து இருக்கலாம். ஆனால் கொடுக்கப்படவில்லை. நீங்கள் அதிலே என்னைச் சேர்த்து இருக்கிறேன் என்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் அப்படி ஒரு மதிப்பைத் தங்களுக்கு அளித்திருக்கிறேன். இதிலே பேசி விடுவது என்று சொன்னால், அதிலே நான் எடுத்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவர் அவர்களே, கட்சித் தலைவர் என்ற முறையிலே, இந்த ஊராட்சியிலே நான் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் நகராட்சியிலும் பேசலாம், ஊராட்சியிலும் பேசலாம், மாநகராட்சியிலும் பேசலாம், இப்போதும் பேசலாம்.

1989 பிப்ரவரி 20]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: 'சபாஷ்' (சிரிப்பு)

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மன்றத்தினுடைய மரபு, இத்தகைய சட்டமுன்வடிவின் மீது நடைபெறுகின்ற விவாதங்களில், பேரவைத் தலைவருடைய கவனத்தை ஈர்க்கும் வகையில், கையைத் தூக்கினால் அதுவே போதும் என்ற நிலையில், இந்த மன்றத்தில் பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப்போது கொறடாக்களின் வாயிலாகத் தெரிவிக்க வேண்டும் என்று தாங்கள் தெரிவிப்பதனால், ஏதாவது புதிய விதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதா? அப்படியானால், அதைப்பற்றி எனக்குத் தகவல் ஏதும் இல்லை. எனவே பழைய நிலை நீடிப்பதுதான் முறையாக இருக்கும் என்பது மன்றத்திலுள்ள உறுப்பினர்களுடைய கருத்து என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அருள்கூர்ந்து அதைப்பற்றி தாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் மீண்டும் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 10-40)

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் இதுவரையில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வழக்கத்திற்கு மாறாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எனவே நடைமுறையில் இருக்கிற பழக்கம் மாற்றப்படாத அளவுக்கு பழைய அந்த மரபையே தாங்கள் கடைப்பிடிப்பதுதான் முறை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்களே ஒரு கட்சித் தலைவர் என்ற முறையில் யார் யார் பேச வேண்டுமென்று எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அதை மறந்துவிட்டுப் பேசக்கூடாது. ஆனாலும் நீங்கள் பழைய மரபைப் பற்றி கையை உயர்த்தியிருந்தால் நான் அனுமதித்திருப்பேன். (குறுக்கீடுகள்) உங்கள் இரண்டு பேர்களில் யார் பேசுவது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சபாநாயகர் யாருக்கு அனுமதி கொடுக்கிறார்களோ அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீர்சிதர்] [1989 பிப்ரவரி 20

சபாநாயகர் அவர்களே, இதுமாதிரி ஏற்கெனவே நகராட்சிக்கு ஆயிற்று, மாநகராட்சிக்கு வந்து போய்விட்டது, இப்போது ஊராட்சிக்கு வந்திருக்கிறது. இவைகளையெல்லாம் மசோதாவாகக் கொண்டு வரும்போது பல பேர்களின் கருத்துக்களையும் அறிவதுதான் நல்லது. ஏனென்றால் மசோதா என்னும் பில்லை பாஸ் பண்ணும்போது ஜனங்கள் வரைக்கும் போக வேண்டியதாகிறது. நமக்கு மட்டும் அல்ல, 5 கோடி தமிழர்களுக்கும் அது போய் காதிலே விழப் போகிறது. யார் யார் அதுபற்றி கருத்து சொன்னார்கள், எப்படி எப்படிச் சொன்னார்கள், எப்படி அவசரப்பட்டார்கள் என்பது எல்லாம் ஜனங்களுக்கு தெரியப்போகிறது, அதனால் அவசரக் கோலத்தில் இந்த பில்லை பாஸ் பண்ணிவிட்டார்கள் என்ற அவச்சொல் கூடாது. அதனால்தான் நான் சொல்கிறேன். எங்களுக்கு ஒன்றும் பேச நீங்கள் சலுகை தரவேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. இந்த மசோதாவை எங்கள் கட்சி சார்பிலே வரவேற்பதற்கு, பாராட்டுவதற்குத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். அதனால் பாராட்டுவது என்றால் எல்லாவற்றையும் பாராட்டுவது என்று நினைக்கக்கூடாது. அதிலே சில கருத்துக்களில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைச் சொல்லலாம்.

ஏற்கெனவே நம்முடைய நாட்டில் ஜில்லா போர்டு, தாலுகா போர்டு என்று இருந்தது. அந்தக் காலத்திலே வெள்ளைக்காரன் காலத்திலேயும் சரி, அதற்குப் பிறகு சுதந்திரம் வந்த பிறகும் சரி தமிழ்நாட்டிலே ஜில்லா போர்டு, தாலுகா போர்டு இருந்தது. அப்போதெல்லாம் தமிழ்நாட்டில் பெரிய ஜில்லாக்கள் இருந்தன. இப்போது மாதிரி ஜில்லாக்களைப் பிரித்துக்கொண்டே இருப்பது கிடையாது. இப்போது ஒரு ஜில்லாவை 3 ஆகப் பிரித்து, 4 ஆகப் பிரித்து, யார் யார் பெயரை எல்லாம் வைக்க வேண்டுமோ, அத்தனையும் வைத்து பிரித்தாகிவிட்டது. இனிமேல் பிரிக்க ஜில்லா இல்லை நம்முடைய நாட்டிலே. இன்னும் யார் யார் பெயர்கள் எல்லாம் வைப்பதற்கு இருக்கிறதோ? தாலுக்காவைக் கூட இனிமேல் ஜில்லா என்று பிரித்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ராமராஜ்யம் வேண்டும் என்பது காங்கிரசினுடைய கொள்கையாக முன்பு இருந்தது . . .

1989 பிப்ரவரி 20]

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப் பிரித்தது தவறு என்று சொல்லுகிறார்களா அல்லது அப்படிப் பிரித்து, பெயரை வைத்தது தவறு என்று சொல்லுகிறார்களா என்பதற்கு அவர்களுடைய விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: இன்னும் இது மாதிரி பல ஜில்லாக்களைப் பிரித்துக்கொண்டே போனால் இனிமேல் பிரிப்பதற்கு இடம் இருக்குமா என்ற கவலையோடுதான் கேட்கிறேன். பிரித்தது தவறு என்று சொல்லவில்லை. தவறு என்ற வார்த்தையை நான் சொன்னேனா? தவறு என்று என் வார்த்தையில் ஏதாவது வந்ததா? இதுமாதிரி பிரித்துக்கொண்டே போனால் எத்தனை ரூபாய் ஆகும்? எவ்வளவு கலெக்டர்? எவ்வளவு செலவு? இதுமாதிரி செலவில் எல்லாம் நம்முடைய பணம்தானே விரயம் ஆகிறது? இதற்காக சென்ட்ரலிலேயிருந்து தனியாகப் பணம் கொடுக்கப் போகிறார்களா அல்லது பிரிப்பதற்காக தனியாக வரி போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லப் போகிறார்களா? அவரவர்கள் இஷ்டத்திற்குப் பிரித்துக்கொண்டார்கள் என்றுதான் சொன்னேன். தவறு என்று சொல்லவில்லை. எதைப் பிரித்தாலும் என்ன பெயர் வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்போது எத்தனையோ பெயர்களில் யூனிவர்சிட்டிகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அவரவர்கள் இஷ்டத்திற்கு வைத்திருக்கிறார்கள். இதைத் தவறு என்று சொல்லவில்லை. இப்படியே போய்க்கொண்டிருந்தால் நிலைமை என்ன ஆகும் என்றுதான் வருத்தப்படுகிறேன்.

அடுத்து ராமராஜ்யம் கொண்டுவரவேண்டும், காந்தியின் கனவை நனவாக்க வேண்டும், பஞ்சாயத்து ராஜ்யம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, பஞ்சாயத்து ராஜ்யம் கொண்டு வந்தார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் சிறிய ஒன்றியங்களும் இருக்கின்றன. பெரிய ஒன்றியங்களும் இருக்கின்றன. 17 பஞ்சாயத்து உள்ளதும் இருக்கிறது, 60 க்கு மேலே உள்ளதும் இருக்கின்றது. இருப்பதிலேயே புதுக்கோட்டையில் திருவரங்குளம்தான் பெரிய பஞ்சாயத்து என்று நினைக்கிறேன்—பெரியண்ணன் அவர்கள் வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கிடு) இருக்கிறார்களா, சரி. நம்முடைய பஞ்சாயத்துக்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீர்சிதர்] [1989 பிப்ரவரி 20

களிலேயே திருவாங்குளம் பஞ்சாயத்துதான் பெரியது. அதற்கும் ஒரு தலைவர்தான், சிறிய பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு தலைவர்தான். ஆனால் அதிகாரங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால், பஞ்சாயத்து தலைவராக வந்து விடுகிறார், அவ்வளவுதான். அவர்கள் எவ்வளவு பெரிய வசதி உள்ளவர்களானாலும் சரி, எவ்வளவு செலவழித்து வந்தவர்களாக இருந்தாலும் சரி, பொறுப்பு உள்ள வர்களானாலும் சரி, அவர்களுக்கு அதிகாரம் இல்லை, ஆனால் அந்த ஊராட்சி ஒன்றியத்திலுடைய கமிஷனர் இருக்கிறாரே அவருக்குத்தான் எதுவானாலும் பவர். அவர் எங்கேயிருந்து வந்தார், எப்படிப்பட்டவர் என்பது எல்லாம் தெரியாது. ஆனால் அவர் எத்தனை லட்சம் ரூபாய்க்கு வேண்டுமானாலும் பணத்திற்கு கையெழுத்துப் போடலாம். ஆனால் அந்த ஊராட்சி ஜனங்களால் தேர்ந்தெடுத்து வந்தவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், வசதி உள்ளவர், பல பேருக்குத் தெரிந்தவர். ஆனால் அவருக்கு ஒரு அணா கூட செக் போடுவதற்கு உரிமை கிடையாது. அவர் யாரிடம் போய் நிற்கணும்? கமிஷனரிடம் போய் நிற்க வேண்டும். பஞ்சாயத்து தலைவருக்கு எந்த உரிமையும் கிடையாது. அவரிடம் போய் நிற்கணும்? கமிஷனரிடம் போய் நிற்க வேண்டும். பஞ்சாயத்து தலைவருக்கு எந்த உரிமையும் கிடையாது. அவரிடம் போய் எதுவும் கேட்க முடியாது. செக் போடவில்லை என்றால், ஏன் ஐயா போடவில்லை என்று அவரைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி நிலைமை இருக்கிறது.

அடுத்து ஒரு விவகாரம். அங்கே நாம் போய் உட்காருவது பற்றி. அதை நடுவிலே கொண்டு வந்திருக்க வேண்டியதே இல்லை. அதாவது எங்களைப் போன்றவர்கள் அங்கே போய் உட்கார வேண்டுமென்றால், அதாவது அவர்களுக்கு சமதையாக உட்கார வேண்டுமா, வேண்டாமா என்ற வந்த நேரத்தில் நேற்று ஆளும் கட்சியிலிருந்து ஒரு தகவல் வந்தது. நகராட்சிகளில், ஊராட்சி ஒன்றியங்களிலே அவர்களுக்கு சமதையாக இந்த லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி மெம்பர்கள் போய் உட்கார்ந்தால், அவர்கள் ஆளுங்கட்சியினுடைய மெம்பர்களாக இருந்தால் அதிகாரிகளுடைய சலுகையைப் பெறுகிறார்கள். அதனாலே சில தவறுகள் நடக்கும் என்றுகூட பதில் வந்தது. அந்த மெம்பர்கள் கீழே உட்காருவதால், மெம்பர்களோடு உட்காருவதனால் அந்தத் தவறுதல் ஏற்படுமா, ஏற்படாதா என்பதை உங்கள் பரிசீலனைக்கு வைக்கிறேன். ஆக மேலே உட்கார்ந்தாலும், கீழே உட்கார்ந்தாலும் அதே தவறுதான். மெம்பர் மாறிப் போவது இல்லை. அதே லெஜிஸ்லேட்டிவ் மெம்பர்தான் உட்காரப்

1939 பிப்ரவரி 20] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

போகிறார். அதிகாரி பக்கத்திலே போய், அதிகாரி கொஞ்சம் மேலே மினிஸ்டரிடம் போய் சொல்லி ஏதாவது பண்ணிவிடுவார் என்ற அந்த மாதிரி பயம் எப்பவும் இருக்கும். எனவே, இவர்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும் அந்தச் சூழ்நிலையிலே இடம் இல்லை, இடம் தேவையில்லை, இவர் அங்கே ஏனய்யா போக வேண்டும், அவர் போகவே தேவையில்லை என்று சொல்லிவிட்டால் ஆயிற்று நல்லது நினைத்துத்தானே, அங்கே போய இதுவரைக்கும் உட்கார விடவில்லை. நடுவிலே ஏற்பட்ட 3 வருஷத்து அனுபவமதான் இது. இரண்டு வருஷம் அல்ல 3 வருஷம் ஆகிவிட்டது. இதற்கு முன்னால் இது கிடையாது. வரிசையிலே நான் போய் உட்கார வில்லை, இந்தக் காரியம் சாதிக்கவில்லையே என்று சொல்ல வேண்டியதில்லை.

அடுத்தபடியாக ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் நடுவிலே பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அதைப் பற்றி ஒருவரும் கவனிக்கவில்லை. ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 3-ம இருக்கலாம், 4-ம் இருக்கலாம், 2-ம் இருக்கலாம், ஒன்றுமே இல்லாமல் இருககலாம். இந்த டி.டி.சி. மீட்டிங்குக்கு போகிறோம். முனிசிபல் சேர்மனாகப் போய உட்காருகிறோம பார்லிமெண்டரி மெம்பர் போய் உட்காரலாம். சட்டசபை மெம்பர்கள் போய் உட்காரலாம். ஊராட்சி ஒன்றியத் தலைவர் உட்காரலாம். ஆனால் பேரூராட்சித் தலைவர் என்று டவுன் பஞ்சாயத்திலே ஒன்று இருக்கிறது டவுன் பஞ்சாயத்து என்றால் இவ்வளவு வருமானம, இவ்வளவு ஜனத்தொகை என்று இருக்க வேண்டும். அவர்களுக்கு அங்கு போய் உட்காருவதற்கு அதிகாரம் கிடையாது. தங்களுடைய கஷ்ட நஷ்டங்களை டி.டி.சி. மீட்டிங்கிலே போய்ச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல இந்த டவுன் பஞ்சாயத்திற்கு இன்னொரு கஷ்டம் இருக்கிறது. பல சலுகைகளை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் கொடுக்கிறார்கள். இந்தச் சலுகைகளை ஊராட்சி ஒன்றியங்கள், டவுன் பஞ்சாயத்துக்கள் அனுபவிக்கின்ற நோத்திலே—ஒரு முக்கியமான கருத்தைச் சொல்கிறேன். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். அமைச்சர் எதிரே உட்கார்ந்திருக்கிறார்; ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர்தான் இப்போது அமைச்சராக இருக்கிறார். பல இடங்களில் நான் கேட்டேன். என்னுடைய டவுன் பஞ்சாயத்திலே ஹரிஜனங்களிடத்திலே கேட்டேன். ஏதாவது முன்னேற்ற

ஜாதியாகிவிட்டதா என்று கேட்டேன். அவர்கள் அந்தச் சலுகை எங்களுக்குக் கிடைக்கவில்லை, எங்களுக்கு கிடையாது என்று சொன்னார்கள். மத்திய அரசும், மாநில அரசும் வீடு கட்டுவதற்குச் சலுகை கொடுக்கிறார்கள் பணம் நிறைய ஒதுக்குகிறார்கள். ஒதுக்கும்போது இரண்டு ஹரிஜனங்கள் இருந்தால் ஒரு கிராமத்திற்கு ஒதுக்குகிறார்கள். இன்னொரு கிராமத்திற்கு ஒதுக்குவதில்லை. சட்டம் எப்படியிருக்கிறது என்றால், டவுன் பஞ்சாயத்தில் இருக்கின்ற ஹரிஜனங்களாக இருந்தால் அவர்களுக்குக் கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) அந்த மாதிரி டவுன் பஞ்சாயத்தில் பிறந்த ஹரிஜனங்களை ட்ரீட் பண்ணுகிறார்கள். ஜாதி வித்தியாசமே பார்க்கக்கூடாது என்ற நிலைமை இருந்தாலும் இன்னும் அது போகவில்லை. ஏழையாக எவன் இருந்தாலும் அவனுக்கு ஒதுக்கினால் கவலையில்லை. ஏழைகள் 95 சதவீதம் இருக்கிறார்கள். அப்படி ஒதுக்கும் காலத்தில் வித்தியாசம் இருக்கிறது. எப்படி வித்தியாசம் வருகிறது? டவுனாக இருந்தாலும் சரி, ஊராட்சியாக இருந்தாலும் சரி இரண்டுக்கும் ஒரே மாதிரியாக இல்லை. அந்த ஹரிஜனங்களுக்கு வேறு சட்டம், இந்த ஹரிஜனங்களுக்கு வேறு சட்டம் என்று இருக்கிறது. எனவே வீடு கட்டும் திட்டத்தில் அவர்களுக்கு ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து சுருக்கி முடியுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தண்ணீர் இல்லையென்றால், சென்னையாக இருந்தால் எங்கே பார்த்தாலும் குரல் கொடுக்கிறோம். கிருஷ்ணாவிலிருந்து வருகிறது, கோதாவரியிலிருந்து வரப்போகிறது, வீராணம் ஏரியை அப்படியே மேடாக்கி மண்ணையெல்லாம் போட்டு மூடிவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஊராட்சிகளிலே ஏற்கனவே கட்டியிருப்பவை சரியாக வேலை செய்யவில்லை. அந்த புரொட்டக்டட் வாட்டர் சப்ளை என்ற நாமதேயமே அந்த ஊராட்சிகளிலே 100-க்கு 98 சதவீதம் சப்ளை சரியாகக் கிடைக்கிறதா என்று தெரியவில்லை. போய்ப் பார்த்ததில்லை நான் எல்லா ஊராட்சிகளையும் சொல்லவில்லை. என் தொகுதியைப் பற்றி மட்டும் சொல்கிறேன். நான் ஜில்லா பூராவாக போகக் கூடியவன். எங்கெங்கே கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன என்று எனக்குத்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 20] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

தெரியும். புரொட்டக்டட் வாட்டர் சப்ளை யாருக்குமே சரியான முறையிலே கிடைக்கவில்லை. இதை சரிசெய்வதற்கு நல்ல முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஊராட்சியினுடைய ஆயுட்காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டாக உயர்த்த வேண்டும் என்ற திருத்தத்தை எங்கள் கட்சியின் சார்பில் ஏற்கனவே வரவேற்றிருக்கிறேன். இப்பொழுது முழு மனதோடு வரவேற்கிறேன். இந்தக் காலங்களை அதிகமாக ஆக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதாவில் மற்றவை எல்லாம் வரவில்லை.

(முற்பகல் 10-50)

இப்போது பெரும்பகுதி கிராமங்களில் பல்வேறு அடிப்படையான வசதிகள் அறவே இல்லாமல் மிகவும் அல்லல்படக்கூடிய நிலைமை தமிழகம் பூராவிலும் அநேகமாக இருக்கின்றது என்று உங்களுக்கு எல்லாம் தெரியும். அதிலே குறிப்பாக மின் விளக்கு, குடிநீர், கழிவு நீர் அகற்றக்கூடிய காரியங்களில் எல்லாம் எதுவுமே செய்யப்படாமலே இருக்கின்றது. இது சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்கு கேட்கப் போகக் கூடிய நேரத்திலே அவர்களுக்கு எல்லாம் இருக்கிற ஒரு அனுபவம் ஆகும். இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதைப் பற்றியெல்லாம் ஏற்கனவே எல்லோருக்கும் தெரியும்.

நிதி வசதி மிக மிகப் போதாத ஒரு நிலையும், அதேமாதிரி நீங்களே தெரிவிக்கிறமாதிரி, மாநில மற்றும் மைய அரசின் வளர்ச்சி மற்றும் வறுமைத் தணிப்புக்கான பல்வேறு திட்டங்கள் ஊராட்சிகள் மூலமாக நிறைவேற்றப்படக்கூடிய காலத்தில், அதிகாரங்கள் பூராவும் அங்கங்கு உள்ள, நம்முடைய மாண்புமிகு தீட்சிதர் கூறியது மாதிரி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளுக்கு இல்லாமல், அரசாங்க அதிகாரிகளுக்கு எல்லா மட்டத்திலும் அதிகாரங்கள் அதிகரித்ததன் காரணமாக இவர்கள் வெறும் பொம்மைகளாகத் தான் அங்கே உட்கார்ந்து இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அதை மாற்றக்கூடிய முறையிலே, அதற்கு வேண்டிய சரியான திருத்தங்களைக் கொண்டு வந்து, அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்னொன்று. இதிலே வீக்கர் செக்ஷன் பெண்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே அந்தப் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஒரு ஊராட்சியோ அல்லது ஒன்றியமோ இருந்தால், அப்படிப்பட்ட இடங்களில் அந்தப் பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் நியமிப்பதற்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது மாதிரி கோ-ஆப்ட் செய்துகொள்ளலாம். அங்கே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து அவர்கள் யாரைப் பிரேரேபிக்கிறார்களோ—பெரும்பான்மை வாக்குகளின் மூலமாக கோ-ஆப்ட் செய்யக்கூடிய ஒரு முறை இருக்கவேண்டியது அவசியம்தான். அந்த முறையிலே சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இப்போது மின் விளக்கு சம்பந்தப்பட்டமட்டில் மின் இலாகாவா, ஊராட்சியா, ஊராட்சி ஒன்றியமா என்று ஏற்பட்ட தகாறுகள் இருந்துகொண்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஒன்றியங்களிலேயும், ஆதி திராவிடர், பெண்கள் கோ-ஆப்ட் செய்யப்பட்டுள்ளனர். அதைத் தவிர்த்துத்தான் மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு, முந்தைய அரசு நியமனம் செய்து, பெருந்தலைவர்கள் பல பேருக்குத் தொல்லை கொடுத்தது என்பதை உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டபோது, இந்த அவையிலே எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்த்திருக்கிறார்கள், ஐந்தாண்டுதான் இருக்க வேண்டுமென்று. அதேமாதிரி, இன்றைக்கு மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில் லைட் போடுவது மின்சார இலாகாவா, பஞ்சாயத்து ஒன்றியமா என்று சொல்லக்கூடிய முறையிலே தகராறுகள் இருந்துகொண்டு வருகின்றன. பல்வேறு இடங்களில் பல்புகளை வாங்கிப் போடக் கூட பணம் இல்லாமல், லைட் எரியாமல் இருக்கிறது. ஆகவே தான், மின்சார இலாகாவே லைட்டுக்களைப் போட்டு முன்னால் இருந்தபடி ஒரு லைட்டிற்கு இவ்வளவு தொகை என்று சொல்லக்கூடிய முறையிலே வசூல் செய்துகொள்வது சரியாக இருக்குமா என்று பரிசீலனை செய்யவேண்டும்.

1989 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

அதேமாதிரி, வீடு கட்டுகிற திட்டங்களிலே, இப்போதெல்லாம் மண் வைத்துக் கட்டப்படுகின்றன. நீண்ட நாட்கள் அது இருக்க முடியாது. காரணம், பணம் குறைவாக இருப்பதால், 6,000 ரூபாய்க்குள்ளே இன்றைக்கு மதிப்பீடு தயார் செய்ய முடியவில்லை. ஏற்கெனவே நம்முடைய இந்த அரசு புதிதாகச் சொல்லியிருக்கிறது, பழைய மாதிரியான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று. அந்த ஏற்பாடு செய்வதோடு, இன்றைக்கு நிதியாதாரங்களைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் பல்வேறு நிதிப் பற்றாக்குறையினால் செய்யாத அந்தக் குறைகளைப் போக்கக் கூடிய முறையிலே பல திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கூறி, இந்தத் திருத்தத்தை வரவேற்று அமர்கின்றேன், வணக்கம்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வல்லரசு அவர்கள் இதிலே பேசுவதானால், மேலவைத் தீர்மானத்தில் பேசுகிற வாய்ப்பை அவர் இழக்கக்கூடும். எதில் பேசுகிறீர்கள்?

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்ற உறுப்பினர் மக்களுடைய பிரதிநிதி என்ற காரணத்தினால் . . .

திரு. வே. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே இந்த உள்ளாட்சி மன்றங்களுடைய சட்ட முன்வடிவில், ஒன்றியங்களுடைய பெருந்தலைவர்களுடைய பதவி, நகர்மன்றங்களுடைய தலைவர்களுடைய பதவியை நீட்டிக்கிறபோது, மூன்றாண்டு ஐந்தாண்டு ஆகிற இந்தத் தருணத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்கள் பதவி காலியாக இருக்கின்றது. குறிப்பாக, அருப்புக்கோட்டைத் தொகுதியில், ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் இல்லாமலே நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு இடைத் தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது ஆக்கப் பூர்வமான சட்ட முன்வடிவைக் கொண்டுவருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க பாண்டியன் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க, தேர்தல் நடத்தப்படாமல் இருக்கக்கூடிய இடங்களில் இடைத் தேர்தல் நடத்துவதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய அலுவலகத்திலும், இதுவரை சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தப் புதிய சட்ட முன் வடிவின்படி அப்படி சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய அறை ஒதுக்கப்படுமா? இதுபோன்று, இன்றையதினம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் உட்காருகிற இடத்திலேயே, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்காரும் நிலையை மாற்றி அவர்களுக்கும், நமக்கும் வித்தியாசப்படுத்துகின்ற அளவில்—ஏனென்றால் சட்டப்படி நாங்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் அல்ல—பஞ்சாயத்துத் தலைவர்கள் உட்காருகின்ற இடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் உட்காருவது முறையும் அல்ல. எனவே, அதை வித்தியாசப்படுத்தி, வேறு முறையில் முறைப்படுத்தி அங்கே உட்காருகின்ற நிலையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் இவைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுடைய பதவிக் காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தக்கூடிய இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இந்த அ.இ.அ.தி.மு.க. (ஜெ.) அணியைத் தவிர ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதனை வரவேற்றும், ஆதரித்தும் பேசியிருக்கிறார்கள். அதேநேரத்தில் இங்கு நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன்தினம் பல்வேறு சலுகைகளை, அதிகார வரம்புகளை இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவித்து இங்கு வரவேற்றுப் பேசி ஊராட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற அந்த வேண்டுகோளை இங்கு விடுத்திருக்கிறார்கள். அதற்கும் இப்போது நம்

முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கு பதில் சொல்லுகின்ற போது அந்தக் கருத்துக்களை மனதில கொண்டு நடைமுறை நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிவகை காணப்படும் என்றும எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தில் 12,616 ஊராட்சி மன்றங்களும், 645 பேரூராட்சி மன்றங்களும், 382 ஊராட்சி ஒன்றியங்களும் இப்போது இருக்கின்றன. இவைகளுக்கு 1986 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றபோது பதவிக் காலம் 3 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது 1958 ஆம் ஆண்டு ஊராட்சி, பஞ்சாயத்துக்கள் சட்டங்கள் இயற்றப்பட்டபோது 5 ஆண்டுகள் என்றுதான் அந்தச் சட்டத்திலே வழிவகை காணப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் முன்பு இருந்த ஆட்சி 1985 ஆம் ஆண்டு 4 ஆண்டுகளாக அதைக் குறைத்தார்கள். பிறகு 1986 ஆம் ஆண்டு பதவிக் காலத்தை 3 ஆண்டுகளாக குறைத்து அறிவித்தார்கள். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பை ஏற்றதும், அது ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும், பேரூராட்சி மன்றங்களாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களாக இருந்தாலும் சட்ட விளக்கங்களைப் பெற்று அவர்கள் பணி தொடங்குவதற்கு கொஞ்ச காலம் நிச்சயமாகத் தேவைப்படும் அதேநேரத்திலே முன்பிருந்த ஆட்சி அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில், இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல கிராமங்களில் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், மின்சார வசதிகள், இவைகளெல்லாம் மக்கள் தேவைக்கேற்ப இல்லாவிட்டாலும் முடிந்த அளவிற்கு செய்வதற்கான வாய்ப்பு இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு அதனாலே, மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த உள்ளாட்சி அமைப்புகளிலே தலைவர்களாக வந்தவர்கள் இந்த அரசுக்கு கோரிக்கைகள் வைத்தார்கள். அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் நாட்டு மக்களுக்கு தங்களுடைய கொள்கையாக பிரகடனப்படுத்தியது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றால் உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற பதவிக் காலத்தை மூன்று ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தித் தருவோம் என்று திட்டவட்டமாக, தமிழினத் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கருத்தினை நாட்டு

மக்கள் ஏற்றுக்கொண்டுதான் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஆட்சிப் பொறுப்பினைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேயே, தேர்தல் நேரத்திலே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகத்தான் இன்று இந்தப் பதவிக் காலத்தை, மக்கள் விருப்பத்திற்கேற்ப செய்யப்படுகிறதே தவிர, இது ஆட்சியிலே அமர்ந்தவுடன் ஏதோ ஒரு உள்நோக்கத்தை இந்த ஆட்சி வைத்துக்கொண்டு, இந்தப் பதவி நீட்டிப்பு செய்யப் படவில்லை என்பதை நான் இங்கே தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

இங்கு, இந்தச் சட்டத் திருத்தத்திலே இப்பொழுது மூன்று ஆண்டுக் காலம் என்று இருப்பதைத்தான் 5 ஆண்டுகளாக நாம் உயர்த்தியிருக்கின்றோம். 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் ஊராட்சிகள், பேரூராட்சிகள் உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்கள் பதவிக் காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாக, நாம் உயர்த்தியிருக்கின்றோம். 1989 ஆவது ஆண்டு மாசி மாதத்தோடு முடிவதை மேலும் நீடித்து 1991 வரை நீட்டிக்க இந்த அவையினுடைய அனுமதி கோரப்பட்டிருக்கிறது. இங்கே, அ.தி.மு.க.வினுடைய 'ஜெ' அணியைச் சேர்ந்த உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது, இப்போது பதவிக்காலம் முடிந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடந்தால் தி.மு.க. வெற்றி பெற வாய்ப்பு இருக்காது என்று கருதி இப்பொழுது பதவிக் காலத்தையெல்லாம் நீட்டிப்பதாகச் சொன்னார். அவருடைய கருத்துக்களுக்கும் இடையிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய வினாக்களுக்கும் இங்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கமான தக்க பதிலைத் தந்தார்கள்.

ஒன்றை நான் இங்கே தெளிவுபடுத்திச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆவது ஆண்டு 18 வயது உள்ளவர்களுக்கு எல்லாம் ஓட்டுரிமை வழங்கப்படும் என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அந்த அடிப்படையிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப் பெற்றது. ஆனால், சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளுக்கு 18 வயது உரியவர்களுக்கு அப்பொழுதே இந்த வாக்குரிமை அளிப்பதற்கு வாக்காளர் பட்டியல் தயார் செய்து

1989 பிப்ரவரி 20] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

தேர்தல் நடத்த முன்வராததற்கு என்ன காரணம்? நகரங்களிலே இருக்கின்ற மக்கள் நிச்சயமாக அ.தி.மு.க.வை தோற்கடித்து விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணத்தினாலேதான் இந்த மாநகராட்சிகளுடைய தேர்தலை நடத்தாமல் 1930 ஆவது ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலே வாக்காளர் பட்டியல்கூட தயாரிக்காமல் அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதையெல்லாம்கூட நாங்கள் இப்பொழுது குற்றமாகச் சொல்லாமல், தேர்தலை இந்த மாநகராட்சிகளுக்கு நடத்த வேண்டும் என்று விரைவாக நடவடிக்கை எடுப்பதும் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதவி நீட்டிப்பு செய்வதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே நாட்டு மக்களுக்கு நாங்கள் என்ன வாக்குறுதிகளைத் தந்தோமோ அந்த வாக்குறுதிகளைத்தான் இந்த அரசு நிறைவேற்றுகிறது என்பதை மட்டும் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்; அவர் பேசியபிறகும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இடையில் சொல்ல வேண்டுமா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட அதிகாரங்களெல்லாம் திருப்பித் தரப்படும் என்று சொன்னதும் சேர்த்து அமலுக்கு வரும் என்று சொன்னார்கள். அதிலே ஒரு சந்தேகம். அதாவது, ஆரம்பப் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர் பெருமக்கள், ஏற்கனவே அரசுத் துறையால் நியமிக்கப்படவும், மாறுதல் செய்யப்படவும் அரசுத் துறைக்கு அதிகாரம் இருந்தது. இப்பொழுது நீங்கள் உள்ளாட்சி அமைப்புக்குத் தருகிறோம் என்கிறபொழுது, அது கூடாது என்று ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவோம் என்று வெளியே எல்லாப் பிரிவின் சார்பிலேயும் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த டிரான்ஸ்பர் அதிகாரம் ஒன்றியத்தினுடைய பெருந்தலைவருக்கு இருக்குமா அல்லது முன்பிருந்ததைப்போல கல்வித்துறை

அதிகாரிக்கு இருக்குமா? ஏனென்றால் மாண்புமிகு முதலமைச் சரவர்கள் சட்டமன்றத்திலே அறிவிக்கிறபொழுது அந்த அதிகாரம், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றியத்திற்கு விடப்படும என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகையிலே அந்த ஆசிரியர்களுடைய போராட் டங்கள் பற்றி வந்ததற்குப் பின்னால், கேள்வி கேட்டபோது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மிக மிகத் தவறான ஒரு கருத்தை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். அன்றைக்கு அவையில் அறிவிக்கப்படும்பொழுதே ஆசிரியர்களைப் பொறுத்து அவர்கள் அரசு ஊழியர்களாகவே கருதப்படுவார்கள் என்று சொன்னேன். அரசு ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்று சொன்னாலே, அதற்குப் பொருள், அவர்களை இடமாற்றம் செய்கின்ற அந்த அதிகாரங்களெல்லாம் ஒன்றியங்களுக்கு இல்லை என்பதுதான் பொருள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, பிறகு ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளி வரை, ஒன்றியத் திற்கு வருகிறது என்ற பிரச்சினையே அதிலே வரவில்லையே. ஏனென்றால், கட்டிடம் கட்டுகின்ற அதிகாரம், ஏற்கனவே ஆரம்பப் பள்ளிக்கான கட்டிடத்தை, ஊராட்சியிலிருந்து கட்டிக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்தான் அறிவித்தபொழுது அப்படி அறிவித்தார்கள். இப்பொழுது மாற்றிக்கொண்டார். அதிலே மகிழ்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது நான் உரிமைப் பிரச்சினைதான் கொண்டுவர வேண்டும், அவர் மேலே, வேறு என்ன? இப்படி அறிவிக்கவே இல்லை என்று சொல்லும் பொழுது, அப்படித்தான் அறிவித்தார் என்று சொன்னால், என்ன செய்வது? பத்திரிகையிலே ஏதாவது வர வேணடுமென்பதற் காகப் பேசக்கூடாது. நான் அன்றைக்குத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் அதைக் கண்காணிக்கின்ற, மேற்பார்வை இடுகின்ற அந்த அதிகாரங்க ளெல்லாம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு வழங்கப்படும் என்று கூறிவிட்டு, ஆனாலும் ஆசிரியர்களைப் பொறுத்து அவர்கள் அரசு ஊழியர்களாகவே கருதப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மீண்டும் என்னிடத்திலே

1989 பிப்ரவரி 20] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

ஆசிரியர்கள் சார்பாக வந்துள்ள செய்திகளை வைத்து நிருபர்கள் கேட்டபொழுதும் அதற்கு விளக்கம் அளித்திருக்கிறேன். சரியாக விளக்கம் அளித்திருக்கிறேன். அதைத்தான் பத்திரிகைகளிலே அன்று பார்த்திருக்கக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இதுவே போதும் என்று கருதுகிறேன். அருள்கூர்ந்து அடுத்த செய்திக்குப் போகுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதையே திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டிருந்தால் அது வளர்ந்துகொண்டு போய்க்கொண்டிருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே வர வேண்டும் என்பதற்காகப் பேசவில்லை. இங்கே நடக்கிற எல்லா நிகழ்ச்சிகளும் பத்திரிகையிலே வருவதுகூட நல்லதுதான். அதற்காக நான் பேசவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்தபொழுது, ஆரம்பப் பள்ளி வரை உள்ள ஆசிரியர்கள் ஏற்கனவே இருந்ததை மாற்றி, ஆகவே ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்த அதிகாரம் வழங்கப்படும் என்றார்கள். அது தொடர்ச்சியாக அறிவித்ததை, நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களாக இருப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் என்று நான் குறிப்பிடவே இல்லை. வேளாண்மை, கல்வி என்ற அந்தத் துறைகளைப்பற்றித்தான் குறிப்பிட்டேன். அப்படிக் குறிப்பிடும்பொழுது, ஜாக்கிரதையாக, ஆனாலும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்று அன்றைக்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் இப்பொழுது திருத்திக்கொண்டால் அதை வரவேற்கிறேன் என்றார்கள். ஏற்கனவே அது முதலமைச்சர் அளித்த விளக்கம்தான். எனவே, அதை அவைக் குறிப்பிலே யிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டியதில்லை அது. பேரவை முன்னுள்ள கேள்வி:

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 21

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடபெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(முற்பகல் 11-10)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

1989 பிப்ரவரி 20] [திரு. கே. ஆர். இராமசாமி]

கொள்ள முடியவில்லை. நிச்சயமாக இந்த ஆசிரியர்கள் பிரச்சினையில் தெளிவான ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மின் துறையைப் பொறுத்தவரையில் ஊராட்சிகளுக்கு, பஞ்சாயத்துகளுக்குத் தெரு விளக்குகள் போடுவதற்கு இப்போது அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் அதைச் சிறப்பாக பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாத நிலைமையில் நலிவுற்று இருக்கின்றன. எனவே, தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்தை அரசாங்கமே ஏற்று நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

நான் தற்போது கண்ணன்குடி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருக்கிறேன். இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றியங்களுக்குச் செல்லும்போது தகுந்த மரியாதை அவசியமாக வேண்டும். இதை நிச்சயமாக அங்கே இருக்கக்கூடிய தலைவர்கள் யாரும் கொடுக்க மறுக்கவில்லை. முந்தைய அரசு செய்த அத்தனை காரியங்களையும் மறுக்கும் எண்ணத்திலேயே இதையும் எண்ணுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் வறட்சிக்கு இலக்காகும்போது வரும் திட்டங்களான D.P.A.P., R L.E.G.P போன்ற திட்டங்கள் முழுமையாக மத்திய அரசினுடைய நிதியிலேயே இயங்குகின்றன. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களினுடைய நிலைமையில், மத்திய அரசின் முழு மானியத்திலேயே இயங்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. இதை மாற்றி தாங்கள், இந்த அரசின் திட்டங்களாகப் போதிய நிதி ஆதாரங்களைத் தந்து சிறப்பிக்குமாறு நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

6. ஒழுங்குப் பிரச்சினை.

சட்டமுன் வடிவுகளின் நகல்கள் அவையில் வைக்கப்படுதல்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உறுப்பினர்களின் உரிமையைப் பாதிக்கிற ஒரு பிரச்சினையை இங்கே ஒழுங்குப் பிரச்சினையின் மூலமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 20

இன்றைக்கு மது விலக்கு ஆயத் தீர்வை பற்றிய 2 சட்டமுன் வடிவுகள் அவையில் வருவதாக முன்மொழியப்பட்டுள்ளன. அதிலே சட்ட அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த சட்டமுன்வடி வின் விவரங்கள் அடங்கிய அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக் கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் அவரு டைய பாராளுமன்றச் செயலாளர் அறிவித்த சட்டமுன்வடிவு என்ன என்பது பற்றி அவையில் மேஜையில் வைக்கப்படவில்லை யே; அது வைக்கப்பட வேண்டாமா? அது அவை உறுப்பினர் களின் உரிமையைப் பாதிக்கிறது அதற்குத் தங்களுடைய தீர்ப் பினை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து அறிக்கை நேற்றே அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் வீட்டுக்கு அனுப்புவது என்பது வேறு. சட்ட அமைச்சர் அவர்கள் இங்கேயும் கொடுத் திருக்கிறார்கள். அதையும் தான் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானம் போன்ற அனைத்தையும் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் அதை மட்டும் இங்கே டேபிளில் வைக்கிறீர்கள். அதைப்போல வீட்டுக்கு அனுப்பி யிருந்தாலும் இங்கே சட்டமன்றத்திலே வைத்தால்தான் அது சட்டசபையினுடைய பொருளாக "Property of the House" ஆகும். நீங்கள் டேபிளில் இங்கே பிளேஸ் செய்தால் தான் வருமே தவிர, வீட்டுக்கு அனுப்புவது மட்டும் போதாது, இனி மேல் இங்கே வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தொடர்பாக என் னுடைய குறிப்புரை:

"Provided that in case of a Government Bill, along with the notice sufficient number of copies of the Bill shall be sent to the Secretary for Circulation to the Members".

திரு. எஸ். திருநாவுக்கரசு: Circulation to the Members means circulation to the Assembly. எல்லாவற்றையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போதுமா? இங்கே மேஜையில் ஒன்றுமே வைக்க வேண்டியதில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு வருவதற்கு முன்னாலேயே வீட்டுக்கு முன்கூட்டியே தருவது தவறு என்கிறீர் களா?

1959 பிப்ரவரி 20]

திரு. எஸ். திருநாவுக்கரசு : முன் கூட்டித் தருவது தவறு என்று சொல்லவில்லை ; அது உறுப்பினர்களுக்கு வசதியாகத் தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையை நான் சொன்னேன். இது பெரிய பிரச்சினை இல்லையே, இங்கே 'பிளேஸ்' செய்து விட்டால் சரியாகப் போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கோரிக்கையைத் தக்கவாறு கவனித்து ஆவன செய்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியது அவர்களுக்கு ஒருவேளை தெரியாமல் இருக்கலாம். எனவே, அது போன்ற தவறு ஏற்படாது என்று தாங்கள் கூறி விட்டீர்கள். என்றாலும் உறுப்பினர்களுக்கு உங்கள் செகரட்டேரியட் மூலமாக அனுப்புவதை அவர்கள் நோட்டீஸ் ஆகக் கருத வேண்டும் என்பதுதான் முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு ஏன் இந்த மசோதாக்களை அனுப்புகிறீர்கள் என்றால் "Bill to be introduced Confidential" என்று அதில் போட்டு அனுப்புகிறீர்கள். இங்கே காலை 8 மணிக்கு வைத்து விட்டால் வெளியே ஒரு வேளை தெரிந்து விடலாம் என்ற காரணத்திற்காக அந்த முறை பின்பற்றப்படவில்லையோ என்று நான் எண்ணுகிறேன்.

*மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இப்போதுதான் எதிர்க்கட்சியாகப் போயிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியில் இருந்தவன். வழக்கமாக பில் காப்பிகள் வீட்டுக்குத்தான் வரும். ஆனால் எல்லா பில்களும் டேபிள் மீது வைக்கப்படுவது கிடையாது. அதை மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அப்போது அமைச்சராக இருந்ததால் கவனித்து இருக்கமாட்டார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் புதிதாக அமைச்சராக இருப்பதால் இந்த விதிமுறைகள் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் நான் ஏற்கனவே அமைச்சராக இருந்திருக்கிறேன்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 20

இப்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் இரண்டு அனுபவமும் எனக்கு இருக்கிறது. அவருக்கு ஒரு அனுபவம் இப்போதுதான் புதிதாக வந்திருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது, வீட்டிற்கு அனுப்புவது என்பது ஒன்று. வீட்டிற்கு அனுப்பியிருக்கிறீர்கள், எனக்கும் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தெரியவில்லையென்று : தெரிகிறது. ஆனால் இங்கே வைக்காமல், எங்களுக்கு வீட்டிற்கு அனுப்புவதால் பத்திரிகைகளிலே பிரசுரிக்க முடியாது. பத்திரிகைக்காரர்க ளெல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்களால் என்ன சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்று எப்படி எழுத முடியும்? எனவே இங்கே வைத்தால்தான வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து உங்களுடைய குறை என்ன என்று சொல்லுங்கள். பத்திரிகையாளர்களுடைய குறைகளைப் பற்றி அருள்கூர்ந்து பேச வேண்டாம். சட்ட முன் வடிவு அறிமுகமானதும் பத்திரிகையாளர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் கூறுகிறேன். பத்திரிகைக்காரர்களெல் லாம் அவைக்கு வெளியிலே இல்லை: அவைக்கு உள்ளேதான் இருக்கிறார்கள். அவைக்குள்ளே அந்த உரிமையைப் பத்திரிகைக் காரர்களுக்குக் கொடுக்கிறபோது அதே உரிமையை உறுப்பினர் களுக்குக் கொடுத்து, உறுப்பினர்களின் மேஜையின்மேல் வைக்க வேண்டும். அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? தவறு நடந் திருக்கிறது என்று சொன்னால், அதைத் திருத்திக் கொள்வதில் என்ன கஷ்டம்? ஏன் அவ்வளவு டிஃபன்ஸ்? பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு மாறுதல் அல்லது மறந்திருக்கலாம். சிறிய தவறாக இருக்கலாம், சரி, வைக்கிறோம் என்று சொன்னால், முடிந்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றிக் கவனித்து ஆவன செய்யப்படும.

1989 பிப்ரவரி 20]

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான விளக்கம் அவைக் குறிப்பில் இடம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக நானும் என்னுடைய சார் பாகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சர்க்குலேஷன்' என்றால் அவையிலே வைப்பதுதான் பொருள் என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. 'சர்க்குலேசன்' என்று சொன்னால் 'சுற்றறிக்கை'.

It should be circulated as among the Members so that they may have sufficient time to go into the details of the various provisions.

ஒரு நாளைக்கு முந்தியே அவர்களுக்கு 'சர்க்குலேட்' செய்தால் தான் அவர்கள் வீட்டிலேயிருந்து படித்து, அதைப்பற்றி அறிந்து கொண்டு வந்து பேச வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் அது சர்க்குலேட் செய்யப்படுகிறது.

Circulation does not mean placing on the Table of the House. It is different

(குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஏன் ரொம்ப அவசரப் படுகிறீர்கள்? ஆகையினாலே அந்த அர்த்தத்தில் வரவில்லை. வீட்டிற்கும் அனுப்பப்படவேண்டும்; அவையிலும் வைக்கப்பட வேண்டும என்று மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோருகிறார்கள் என்று சொன்னால் அது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மற்றும் அவைத் தலைவர் அவர்கள் ஆகியோரால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். இரண்டு இடத்திலும் வைக்கப்படவேண்டுமென்பதை நான் எதிர்க்கவில்லை. இந்தப் பொருளைத்தான் அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று சொல்லுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டிற்கு அனுப்ப வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுகுறித்து நான் கவனித்து ஆவன செய்வதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே. (குறுக்கீடு) இருக்கட்டுமே ஒரு சிறிய விளக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Not to be published" என்றுதான் இதிலே போட் டிருக்கிறது. "Not to be published—Confidential"

என்று கான்பிடன்ஷியலாகத்தான் அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் இங்கே வைத்தால்தான் அதை பிரஸ்காரர்களெல்லாம் எடுத்துப் பார்த்து அவர்கள் போட முடியும். என்ன சட்டமுன் வடிவு வருகிறது என்று அப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து பத்திரிகை யாளர்களைப் பற்றிப்பேச வேண்டாம். பத்திரிகையாளர்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பில்லுக்கு மேலே ஒரு சீலே குத்தியிருக்கிறார்கள், "Bill to be introduced—Confidential". என்று.

5. சட்டமுன்வடிவுகள் — தொடர்ச்சி.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1989—தொடர்ச்சி.

* திரு. சாதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை யினுடைய அமைச்சர் அவர்கள் ஊராட்சிகள் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ததை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் இந்த அவையிலே பேசுவதற்கு முன்னால், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூர்ந்து என் னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, என்னை ஆளாக்கிய தலைவர், என்னுடைய குடும்பத தலைவர், பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் கூறி, இந்த அவையிலே பேசுவதற்கு நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய என்னுடைய இதய வேந்தன், தமிழினத் தலைவன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1958 ஆம் ஆண்டு, இந்தச் சட்டத்தை உருவாக்கிய காலத்தில் பல நிபுணர்களால், பல பொருளாதார நிபுணர்களால், வல்லுனர் களால், இதற்கென பல ஆண்டுகள் பெரிய திட்டங்களையெல்லாம் தீட்டினார்கள், அதற்கு முன்னால் ஊராட்சி வளர்ச்சி தேசிய திட்டமாக இருந்த, Shadow Block ஆக இருந்ததை, மக்க

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 21

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(முற்பகல் 11-10)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

1989 பிப்ரவரி 20] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகைமுறைகளையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாகும் நிறைவுறு, இடைவுறு மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கியவகையில், இந்திய அரசமைப்பின் 169 ஆம் உறுப்பின் 1 ஆம் கூறின் கீழ் நிறைவேற்றலாம் என்றும் இந்தப் பேரவை தீர்மானிக்கின்றது."

இந்தத் தீர்மானத்தை அவையின் முன் வைத்து, இதுகுறித்த கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதற்குப் பிறகு என்னுடைய விளக்க உரையை அளிக்க விரும்புகிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த 'தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம்' என்ற தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

* திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய தமிழக முதல் அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்டிருக்கிற 'தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம்' என்ற தீர்மானத்தின் கீழ், அந்தத் தீர்மானத்தை வரவேற்று நான் சார்ந்திருக்கின்ற தமிழக ஜனதா கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீண்டகாலமாக நம்முடைய தமிழ்நாட்டிலே பணியாற்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டி, பல்வேறு சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுகின்ற நேரத்தில் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்குகின்ற வாய்ப்பு மேலவையில் இருந்தது. இன்றைக்கு அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும் அதை மீண்டும் தோற்றுவிப்பதற்காக இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பொன். விஜயராகவன்] [1989 பிப்ரவரி 20

நான் இந்தத் தீர்மானத்தை வரவேற்றாலும் இந்தத் தீர்மானத்திற்கு நாடாளுமன்றத்திலே இசைவு அளிக்க வேண்டுமென்ற தீர்மானமாக இருப்பதைப் பார்க்கிறேன். ஆனால் அந்த மாமன்றத்திலே ஏற்கெனவே இருக்கக்கூடிய 63 உறுப்பினர்களின் அளவுக்கு இருக்கின்ற ஒரு மன்றம்தானா அல்லது வேறுவகையிலே இருக்குமா என்கின்ற பல்வேறு கருத்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 63 ஆக இருப்பதை மேலும் உயர்த்தலாம் என்ற கருத்து வந்திருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மேலவையினுடைய சிறப்புபற்றி—ஏற்கெனவே நான் பலமுறை விவாதித்திருந்தாலும் கூட—ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற உறுப்பினர்கள், அவர்களுக்கு என்று ஒரு வயது வரம்பு இருக்கிறது; சில நேரங்களில் என்னைப்போன்ற இளைஞர்கள் பெரும்பான்மை வாக்கு பெற்று வந்துவிடுகிறார்கள். வேகமாகச் செயலாற்ற வேண்டும்; வேகமாகப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ வாக்களிப்பவர்கள் இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் அவர்களும் வேகமாகச் செயலாற்றுகிறார்கள்; இளமைத் துடிப்புடன் பணியாற்றுகிறார்கள். வேகமாகச் செயல்படும் நேரத்தில் சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அரசுத் தரப்பிலிருந்து சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. மேலவைக்கு இந்தக் கருத்துக்கள் செல்லுகின்றபோது அங்கே இருக்கின்றவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, அந்த வகையிலே சில நேரங்களில் சட்ட முன்வடிவுகள் திருத்தப்படும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. மேலவையிலே கொண்டுவரப்பட்ட ஒரு தனி நபர் சட்ட முன்வடிவு கூட அரசின் தரப்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமாக்கப்படுகின்ற அளவுக்கு நல்ல அனுபவம் படைத்தவர்கள் அங்கே இருந்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 20] [திரு. பொன். விஜயராகவன்]

சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களால் கொண்டு வரப் பட்ட ஒரு சட்டத்தை

The Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act

என்று சொல்லக்கூடிய சட்டத்தைச் சட்டமன்ற மேலவையிலே தனி நபர் சட்டமாகக் கொண்டுவந்தபோது அதை அரசும் ஏற்று அந்த வகையில் இன்று சட்டமாக்க முன்வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட மிகப் பெருந்தகையாளர்கள் எல்லாம் அந்த மாமன்றத்திலே இருந்து பணியாற்றி அரசுக்குத் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத் துக்களை அரசும் ஏற்று வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவேதான் இப்போது நாம் இந்த மாமன்றத்தைத் தோற்றுவித்தாலும்கூட இந்த மாமன்றத்தினுடைய பழைய அமைப்பின்படி சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்கள் 21 பேர்கள் என்றும், லோக்கல் அத்தாரிட்டீஸ் என்று சொல்லக்கூடிய பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சி மன்றங்களின் மூலம் வரக்கூடிய உறுப்பினர்கள் 21 பேர் கள் என்றும், பட்டதாரிகளின் தொகுதிகளிலிருந்து வருபவர்கள் 6 பேர் என்றும், ஆசிரியர்கள் தொகுதிகளிலிருந்து வருபவர்கள் 6 பேர் என்றும் நியமனம் செய்யப்படுபவர்கள் 9 பேர்கள் என்றும் நிர்ணயித்து அந்த வகையில் அந்த மன்றம் இருந்தது என்று நான் அறிகிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மட்டு மல்லாது நியமிக்கப்படுகிறவர்களும் வருகிறபோது உள்ளபடியே அந்த நியமனத்திற்குப் பொருத்தமானவர்களை நியமிக்க வேண்டு மென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

நாடாளுமன்றத்தினுடைய மாநிலங்களவையிலே குடியரசுத் தலைவருக்கு உறுப்பினர்களை நியமிக்கின்ற அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்படுகிறபோது நாடாளுமன் றத்தில் மாநிலங்களவையின் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று 'கௌல் அன்ட் ஷக்தர்' புத்தகத் தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[திரு. பொன. விஜயராகவன்] [1939 பிப்ரவரி 20

"The Members nominated by the President consist of persons having special knowledge or practical experience in respect of such matters as literature, science, art and social service."

என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இங்கேயும் முன்னாலே சட்டமன்ற மேலவை இருந்தபோது அதிலே 9 பேர்களை நியமிக்கின்ற அதிகாரம் ஆளுநர் அவர்களுக்கு இருந்தது, இப்போது மீண்டும் அந்த அவையை அமைக்கின்றபோது அந்த அதிகாரமும் மீண்டும இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி நியமிக்கப்படுகிற அதிகாரம் இருந்தாலுங்கூட அந்த நியமனத்திற்குச் சிபாரிசு செய்வது அமைச்சரவையே என்பது மரபு வழியாக வந்த ஒன்று என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அரசாங்கத்தினுடைய சிபாரிசு இல்லாமல் ஆளுநரால்கூட அங்கே நியமிக்க முடியாது என்று நான் கருதுகிறேன். ஆகவே அப்படி நியமிக்கின்றபோது கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு துறையிலேயும் வல்லுநர்களாக உள்ளவர்களை, மிகச் சிறந்த அறிவாளிகளை மட்டுமே நியமிப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும். கட்சி மாச்சரியங்கள் குறுக்கிடக்கூடாது. அப்போதுதான் சுதந்திரமாக, தெளிவாகத் தங்கள் கருத்துக்களைச் சொல்கிற வகையில் உரிய பொருத்தத்தை அது குறிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இந்த மாமன்றத்தில் நாம் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டு விரைவாக சட்டமன்ற மேலவை இங்கே தோற்றுவிக்கப்பட இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படித் தோற்றுவிக்கப்படுகிறபோது இந்த மன்றத்தின் மூலம் 21 உறுப்பினர்கள் அம்மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதல் முறையாக அது மீண்டும் அமைக்கப்படுகிற காரணத்தால் அந்த மன்றத்திற்கு 21 உறுப்பினர்களை இந்த மன்றத்தின் மூலம் தேர்ந்தெடுக்கிறபோது எல்லாக் கட்சியினரும் உட்கார்ந்து பேசி எல்லாக் கட்சிகளுக்கும வாய்ப்பளிக்கின்ற வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு ஏற்பாடு செய்யவேண்டும். நாம் பல்வேறு குழுக்களை அமைக்கின்றோம். அப்படி அமைக்கின்றபோது நாம் தேர்தல் நடத்துவதில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற அளவில் விட்டுக் கொடுக்கிற வகையில் பெருந்தன்மையோடு குழுக்கள் அமைப்பது போல், மீண்டும் அமைய இருக்கின்ற அந்த மாமன்றத்தில் சிறிய

1989 பிப்ரவரி 20] [திரு. பொன். விஜயராகவன்]

கட்சி, பெரிய கட்சி என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாக் கட்சி களுக்கும் . . . (குறுக்கீடு) அதனை அந்தந்தக் கட்சிகள் தீர்மா னித்துக்கொள்ளும். அந்த வகையில் அந்தப் பெருந்தன்மையோடு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கு சொல்லிக்கொண்டு அந்த வகையில் அந்தச் சிறப் பான மாமன்றத்தை மீண்டும் கொண்டுவருவதற்காக இங்கே கொண்டுவரப்படுகிற தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி வணக்கம்.

(முற்பகல் 11-20)

*திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்திருக்கின்ற தங்களுக்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி ஒரு நிலைமை, சட்டப் பேரவையில் வந்திருப்பது ஏற் கெனவே திராவிட முன்னேற்றக் கழகம், அதன் தேர்தல் அறிக்கை யில் குறிப்பிட்டிருப்பதுபோல, "திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்புக்கு வருமானால், மீண்டும் மேலவை கொண்டு வரப்படும்" என்று அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று முதலமைச்சராக அமர்ந்திருக்கின்ற முதல்வர் அவர்களால், இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது— கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் இப்படி ஒரு நிலைமை இல்லாமலேயே தவிர்த்திருக்கலாம் என்ப தையும், ஒரு அரசியல் பாரம்பரியம் மிக்க தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, அற்ப காரணங்களைக் காட்டிக் கலைக்கப்பட்டது, ஒரு வேதனையான, ஒரு வெட்கக்கேடான காரியம் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த, அல்லது கொண்டுவந் திருக்கின்ற முதல்வர் அவர்கள், சென்ற 1986 ஆம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதி என்று எனக்கு ஞாபகம், மேலவையிலே எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்கள்.

[திரு. மு. இராமநாதன்] [1989 பிப்ரவரி 20

அப்போதும் மேலவையிலே அவர்கள் தன்னுடைய வாதத்தை எடுத்து வைக்கும்போது, இந்த மேலவையின் 65 ஆண்டுக்கால பாரம்பரியத்தை, வரலாற்றுப் பெருமைகளை எல்லாம் சுட்டிக் காட்டி, இன்னும் கொஞ்சம் யோசிக்க வேண்டும்—ஒருவேளை அரசியலிலே இருக்கின்ற விருப்பு வெறுப்பு காரணமாக அல்லது மன மாச்சாரியம் காரணமாக, இப்படி ஒரு எண்ணம் அன்றிருந்த அரசுக்கு வந்திருக்குமானால், யாரையேனும் குறிவைத்துதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்றது என்கின்ற நிலை இருக்குமானால், அதற்குக் காரணம் நான்தான், என்றால்—அதாவது அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இன்று முதல்வராக இருக்கின்றவர் சொன்னார், இந்த தீர்மானம் வருவதற்கு நான்தான் காரணம் என்றால், 'நான் வேண்டுமென்றால் மேலவையிலேயிருந்து ராஜிநாமா செய்துவிட்டுப் போகிறேன், ஆனால் மேலவையைக் கலைக்காதீர்கள்' என்று வாதாடிச் சொன்னார். ஆனால் அன்று அதிகச் செலவு ஆகிறது என்று காரணம் காட்டப்பட்டது. இங்கேகூட இந்த மாமன்றத்திலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்வளவு செலவு ஏன் என்று கேட்டார்கள். அன்றைக்கே அதற்கு முதலமைச்சர் அவர்களால் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. மிறிப்போனால், மிஞ்சிப் போனால் ரூ. 25 லட்சம் மேலவைக்குச் செலவாகிறது. இப்போது இருக்கின்ற கணக்குகள்படி எடுத்துக்கொண்டாலும்கூட, ஒரு உத்தேச மதிப்பாக ரூ. 50 லட்சம் என்று கணக்கிடலாம். ஆனால் தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய ரூ. 100 கோடி வருமானத்தை, சாராய சாம்ராஜ்யத்தினுடைய சக்கரவர்த்திகள் கொள்ளையடிப்பதற்கும், பங்கு போடுவதற்கும் வழிவகுத்துக் கொடுத்த பழைய அரசு இந்த 25 லட்சம் ரூபாயை ஒரு அதிகச் செலவு என்று, ஒரு அற்பக் காரணத்தைக் காட்டி 1986 ஆம் ஆண்டு மேலவையைக் கலைத்தார்கள் என்று சொன்னால், உள்ளபடியே எவ்வளவு வேதனை தரக்கூடிய காரியம் என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு ஒரு சரித்திரப் புகழ் உண்டு. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு எப்படி ஒரு வரலாற்றுப் பெருமை உண்டோ, அதுபோன்ற ஒரு பெருமை மிக்கது மேலவை தமிழ்நாடு மேலவை.

இன்னும் இந்த மன்றத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது, பிரிட்டிஷ் ஆட்சி அமைத்த மூன்று மாகாண சர்க்காரிலே ஒன்று சென்னை மாகாண சர்க்கார், இன்னொன்று வங்காள மாகாணம், பிறிதொன்று பம்பாய் மாகாணம். இந்த 3 மாகாண சர்க்கார்களும் கவுன்சில் என்கின்ற, சட்ட மன்ற மேலவை என்கின்ற அமைப்பின் மூலமாக பரிபாலனம் செய்யப்பட்டன. அதுதான் பழைய வரலாறு. அன்றைக்கு இந்த மூன்று மாகாண லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில்களிலும், 500-க்கு மேற்பட்ட சமஸ்தானங்களின் சார்பிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இடம் பெறக்கூடிய ஓர் அமைப்பாக மத்திய அமைப்பு உருவாக்கப்பட்டிருந்த நிலை இருந்தது. அன்று பிரிட்டிஷ் சர்க்காரில் இருந்த மத்திய அமைப்பைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பை நான் படித்துப் பார்த்தேன். அந்த முறையில் இருந்த மத்திய சர்க்கார் இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் பம்பாய் மாகாண அரசாங்கமோ அல்லது வங்காள மாகாண அரசாங்கமோ ஒரு பெருமைமிக்க பாரம்பரியத்தை உருவாக்கவில்லை. அப்படி நான் சொல்வதால் பிற மாகாணங்களில் இருந்தவர்களைக் குறை கூறுவதாக யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. என் நோக்கமும் அதுவல்ல. ஆனால் சென்னை மாநகரத்தினுடைய வரலாற்றைப் பார்த்தால் 1918 அல்லது 1919-லே மான்டேகு செம்ஸ்போர்ட் அறிக்கை இங்கே வந்தது. 1921 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் உருவானது. அதுவரையில் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் என்கிற அமைப்பு 47 பேரைக் கொண்ட கவுன்சிலாக இருந்தது. ஆனால் தேர்தல் வந்தபோது 65 உறுப்பினர்கள் பொதுத் தொகுதியில், தேர்தல் மூலம் 33 உறுப்பினர்கள், தனித் தொகுதி என்கின்ற நிலையில் 34 உறுப்பினர்கள், நியமனம் என்கின்ற நிலையில் 132 பேராக இந்தக் கவுன்சில் அமைந்தது. அப்படிப்பட்ட ஒரு பெருமைமிக்க இந்தக் கவுன்சில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கவுன்சில், அதாவது இந்த மேலவை ஏன் திடீரென்று கலைக்கப்பட்டது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பாரம்பரியம் மிக்க மேலவையை கலைத்திருக்கக் கூடாது என்பதற்கு நான் சொல்லும் காரணம், மாண்புமிகு தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் நன்றாக ஒன்றை அறிவார்கள். கலைக்கப்பட்ட மேலவையிலேதான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இடம் பெற்றிருந்தார். கலைக்கப்பட்ட

TRUTH ALONE TRIUMPHS

மேலவையிலேதான் தியாகி சத்தியமூர்த்தி இடம் பெற்றிருந்தார். கலைக்கப்பட்ட மேலவையிலேதான் சீனிவாச சாஸ்திரி இடம் பெற்றிருந்தார். ஏன், எங்களை எல்லாம் ஆளாக்கிய, எண்ணத்தாலும், செயலாலும், சிந்தனையாலும், சொல்லாலும் சாதனை படைத்த, தமிழ் பெருங் குலத்திற்கு பெருமை தேடித் தந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இடம் பெற்றிருந்ததும் கலைக்கப்பட்ட இந்த மேலவையில்தான். இதே மேலவையில்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் குறிப்பிட்டதுபோல மிகப் பெரிய மேதை டாக்டர் லட்சுமணசாமி முதலியார், பொருளாதார மேதை டாக்டர் பா. நடராஜன் போன்றவர்கள் எல்லாம் இடம் பெற்றிருந்தார்கள். சிறப்பு மிக்க ஒன்றாக இந்த மேலவை அன்றைக்கு இருந்தது. அன்றைக்கு எங்கள் தலைவர் அவர்கள் அங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது குறிப்பிட்டது போல அரசியலில் பல்வேறான எண்ணங்கள், உணர்வுகள் விவாதிக்கின்ற நேரத்தில் மேலோங்கதான் செய்யும். அப்படி நடைபெறுகின்ற நேரத்தில் பேரவையில் சற்று சூடு ஏறும். பேரவையில் விவாதம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேலவைக்கு வரும்போது அது சற்று பொறுமையாக விவாதிக்கப்பட்டு, நல்லது எது, கெட்டது எது என்று ஆய்ந்து, அறிந்து, மீண்டும் இந்த இந்த விஷயங்களில் பேரவை உறுப்பினர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்ற வகையிலே விவாதித்து யோசனைக் கூறுவது சிறப்புடையது என்று, அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட மேலவை குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் Cup and Saucer உதாரணம் அன்றைக்கு சொல்லப்பட்டது. சிறப்பு மிக்க மேலவையை ஆந்திரத்திலே. யாரோ சில பேர் மேலவையில் இடம் பெற வாய்ப்பில்லை என்கிற காரணத்தால், கலைத்துவிட்டார்கள். ஆளுநர் உரையின்மீது விவாதம் நடைபெற்றபோது எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் ஒரு நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு இதுபற்றிப் பேசினார்கள். உடனே இங்கே அமர்ந்திருந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், எழுந்து ஒரு நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு, அவரை ஆளும் கட்சியின் சார்பிலே. அந்த நடிகை இங்கே வராமல் இருந்தால் போதும் என்று சொன்னார்கள்.

1989 பிப்ரவரி 20] [திரு. மு. இராமநாதன்]

இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, யார் மன்றத்திலே இடம் பெறுகிறார்கள் என்பதல்ல இதில் இருக்கிற பிரச்சினை. ஆனால் தகுதியுடையவர்கள் இந்த மன்றத்திலே இடம் பெறலாம். தி.மு.க.வைச் சேர்ந்த எந்த உறுப்பினரும்—ஒரு குறிப்பிட்ட நடிகையினுடைய பெயரைச் சொல்லி, இந்த மன்றத்தில் இடம் பெறக்கூடாது என்று மேலவையில் வாதிடவில்லை, ஆனால் வழக்கு மன்றத்திலே அந்த நடிகையினுடைய பிரச்சினை வந்து, இன்சால்வன்சியில் இருக்கக் கூடிய ஒரு நடிகை, இந்த மன்றத்தில் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்ட அதன் காரணமாக அந்த நிலை ஏற்பட்டது.

(முற்பகல் 11-30)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது 2 கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஒன்று, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவராக அன்றைக்கு இருந்த இன்றைய முதல்வரவர்கள் உள்ளே வந்ததால்தான் கலைத்தார்கள் என்று சொல்கிறார்கள். இன்னொன்று, இன்னொருத்தர் உள்ளே வர முடியாததால் கலைத்தார்கள் என்று மாற்றி மாற்றிச் சொல்கிறார்கள். இதெல்லாம் நீக்கப்பட்ட விஷயங்கள். இதைத் தொடர்ந்து அனுமதித்தால், நாங்களும் அதைப்பற்றிப் பேச வேண்டியிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் குறித்த நோக்கங்களைப் பற்றி அதிகம் பேசாமல், இந்த அவை அமைய வேண்டிய அவசியம் பற்றி அல்லது அவசியமல்ல என்பது பற்றி மாத்திரம் பேசினால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சிறப்புக்கும், பெருமைக்கும் உரிய, வரலாற்றுச் சிறப்புமிக்க மேலவை மீண்டும் வர வேண்டுமென்று, அறிஞர் பெருமக்கள் இடம் பெற வேண்டுமென்ற முறையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதை வரவேற்று, ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கிறேன்.

பாரம்பரியம் மிக்க மேலவை என்று குறிப்பிட்டேன். அந்த மேலவையினுடைய வரலாற்றின் ஒரு கட்டம்தான், ஓர் அங்கம் தான், கடந்த காலத்தில் 1920-லே இருந்து 1937 வரை நீதிக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, கொண்டு வரப்பட்ட பல

சட்டங்களிலே ஒரு சட்டம்தான், பெண் இனத்தை இழிவுபடுத்தும் தேவதாசி ஒழிப்புச் சட்டம். அதைக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த, பெண் குலத்தின் தலைவியாக அன்றைக்கு சட்டமன்ற மேலவையிலே துணைத் தலைவியாக பொறுப் பேற்றிருந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் அந்த மன்றத்திலே இருந்ததை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பஞ்சமர்கள் என்று ஆதிதிராவிட மக்களை அல்லது சமுதாயத் திலே புறக்கணிக்கப்பட்ட மக்களை அரசாங்கத்தினுடைய கெஜட்டிலே மாபாதகம் செய்வதற்கு அஞ்சாத சண்டாளர்கள் என்ற நிலையில் வைத்திருந்தது. அதை மாற்றி ஆதி திராவிடர் கள் என்று கொண்டு வந்த அந்த சரித்திரம் இந்த மேலவைக்குச் சொந்தம். அதைப்போல கம்யூனல் ஜி.ஓ. என்கின்ற சட்டமும் அன்றைக்குக் கொண்டுவரப்பட்ட சட்டம்தான். அதுதான் நமக்கு எல்லாம் அடித்தளம். அதை அமைத்தது மேலவை. அப்படிப்பட்ட பெருமைக்குரிய மேலவை மீண்டும் வருவதற்கு இந்த அவையிலே தீர்மானம் வந்திருக்கிறது. அதே நேரத்தில் பிற மாநிலச் சட்டமன்றங்களிலே, மேலவையினுடைய உறுப் பினர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இப்போது இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 75 ஆக உயர்த்தி, அவர்கள் சட்ட மன்ற மேலவை யிலே இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்தும் சிலரால் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் இந்தத் தீர்மானத் தோடு இணைந்தது, முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை இந்த மன்றத்திலே, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரும் இணைந்து தீர்மானத்தை நிறைவேற்றி, எவ்வளவு வேகத்தோடு இந்த அவை கலைக்கப்பட, டெல்லி பாராளு மன்றத்திலே தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டதோ, அதேபோல், அதே வேகத்தில் இந்த மேலவை கொண்டுவரப்பட வேண்டு மென்ற அளவில், டெல்லியிலே நிறைவேறி மேலவை உடனடியாக வருவதற்கு, தேசிய காங்கிரஸ் ஏகோபித்த ஆதரவைத் தர வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, "தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம்" என்கிற தீர்மானத்தில் எங்க ளுடைய கட்சியின் சார்பில், அதை எதிர்த்து ஒரு சில கருத்துக் களை நான் இங்கே கூற முன்வருகிறேன்.

1989 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

ஏற்கெனவே, நம்முடைய இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இந்த மேலவை அவசியமில்லை என்பதை அனுபவ பூர்வமான பல விவாதங்களுக்குப் பின்னாலே, அறிந்து அது நக்கப்பட்டிருக்கிறது—இன்னும் நீக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நினைக்கிறேன். ஆகவே, இன்றைக்கு அத்தியாவசியமான பல பணிகளுக்கு நமக்கு நிதி அதிகமாகத் தேவைப்படுவது மட்டுமல்லாமல், நாம் செலவழிக்கிற ஒவ்வொரு ரூபாயையும், மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் செலவழிப்பதற்கு நமது அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, மேலவையினுடைய பழைய பாரம்பரியத்தைப்பற்றிப் பல உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். நான் அவைகளை எந்த வகையிலும் குறைத்துப் பேச முன்வரவில்லை. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்று இன்றையதினம் வந்ததற்குப் பின்னால் மீண்டும் மேலவை அவசியமில்லை என்று கருதுவதோடு மட்டுமல்லாமல், இது ஒரு மறைமுகமான பிரதிநிதித்துவ சபையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாளில் வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை இல்லாமல், படித்த சிலருக்கு அல்லது ஆஸ்தியுள்ள சிலருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தபோது, இந்த கவுன்சில்—அந்தக் காலத்திற்குத் தேவை என்ற அடிப்படையில்—அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இன்றைக்கு மேலவை என்பது அவசியமில்லை என்பது மட்டுமல்ல, அவ்வாறு அவசியம் என்று சொல்லுகிறவர்கள் ஒரு கருத்தை முன்வைத்து இங்கே வல்லுநர்களும் அறிஞர்களுமான பெருமக்களின் கருத்தைக் கேட்டு, ஒரு சரியான முடிவை அரசு எடுக்க இது உதவிடும் என்று சொல்லுகிறார்கள். வல்லுநர்கள் மற்றும் அறிஞர்களின் கருத்தைக் கேட்க இந்த அரசுக்கு வேறு பல வகையான ஏற்பாடுகள் இருக்கின்றன. அவற்றைச் செய்து கொள்ளலாம். ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்த ஏற்பாட்டைச் செய்து கொள்வதற்கான அதிகாரம் இருக்கிறது. சிறந்த வல்லுநர்களை அழைத்துப் பேசவோ—எந்த ஒரு பிரச்சினையின் மீதும் அவர்களின் கருத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவோ பல்வேறு விதமான வழிகள் இருக்கின்றன. ஆகவே இன்றைக்கு இந்த மேலவை என்பது ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களில் இல்லாத நிலையில்

இங்கே மேலவையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் வேண்டாம் என்று கூறி அதற்கான எதிர்ப்பைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை நான் முழுமையாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லி அமரலாம் என்று கருதுகிறேன்.

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது நாமறிந்த ஒரு உண்மையாகும். கலைஞர் அவர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்தவரையில், அவர் எடுக்கிற ஒவ்வொரு முடிவும் வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவுக்கு ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கக்கூடியதாகத்தான் அமைந்து வந்திருக்கிறது என்பதை நாடு மிக நன்றாக அறிந்திருக்கிறது. ஒரு மகத்தான அநீதியைப் போக்குகின்ற அளவுக்கு, இன்றைக்கு இந்தத் தீர்மானம் வழிவகை காணுகிறது. ஆக, வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒரு மகத்தான செயலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைந்து நிறைவேற்ற முன் வந்திருக்கிறார்கள் என்ற அளவுக்கு--சரித்திரத்திலே, வரலாற்றிலே இடம் பெறக்கூடிய ஒரு மகத்தான தீர்மானமாக இது அமைய இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்திய நாட்டினுடைய பாராளுமன்ற ஜனநாயக வரலாற்றின் ஈரவைகள்—அப்பர் கேமரா லெஜிஸ்லேச்சர்—என்று சொல்லக் கூடிய இரண்டு அவைகளைக் கொண்ட அவைகள் இருக்கலாம் என்று இந்த நாட்டில் மக்களுடைய பிரதிநிதித்துவ சபை அமைக்கப்பட்டு, அந்தக் காலத்திலேயிருந்து ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவுக்கு இந்த அவை இருந்தது. ஆங்கிலேயன் ஆண்டு கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே தொடங்கப் பெற்று செயல்பட்டு வந்தது இந்த அவை. நம்முடைய சென்னை மாகாணம் மற்றும் பம்பாய் மாகாணம், வங்காள மாகாணம் ஆகிய மூன்று மாநிலங்களிலேயும் இருந்த மிகப் பெரிய ஜனநாயகத்தின் வித்தகர்கள் ஒன்றுகூடி, ஈரவைகள் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்ததன் அடிப்படையில்தான் நம்முடைய 3 மாநிலங்களிலும் அவைகள் ஏற்படுத்தப்பட்டன.

1989 பிப்ரவரி 20] [திரு. எம். அப்துல் லத்தீப்]

(முற்பகல் 11-40)

அவற்றிற்கு மிகச் சிறப்புக்குரிய காரணங்கள் இருந்தன. அந்த அடிப்படையில்தான் அந்த அவைகள் ஏற்படுத்தப்பட்டன. நம்முடைய வரலாற்றில், அது அரசியல் வரலாறாக இருந்தாலும் அல்லது சட்டமன்ற நடைமுறைகளாக இருந்தாலும், நாம் எடுக்கிற ஒவ்வொரு முடிவையும் மக்களுக்கு மிக அதிக அளவிற்குப் பயன்தரக்கூடிய முடிவாக எடுக்க வேண்டும். நம்முடைய பார்லிமெண்ட் ஜனநாயகத்திற்குச் செம்மை சேர்ப்பதற்கு, நம்முடைய ஜனநாயகம் ஆக்கம் பெறுவதற்கு, ஊக்கம் பெறுவதற்கு, மக்களுக்கு அதிலே maximum benefit நிறைவான, அதிகமான பயன்கள் கிடைப்பதற்குச் சிந்திக்க வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் நம்முடைய சட்டமன்ற நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவது கூடாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். நம்முடைய மாநிலத்தில் மேலவை ஒழிக்கப்பட்டதற்கு காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நாம் அனைவரும் அறிந்துகொள்ள விரும்புவது, நம்முடைய மாநிலத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநிலத்தின் பார்லிமெண்ட் ஜனநாயகத்திற்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் இலக்கணம் வகுத்துத் தரக்கூடிய அல்லது மகத்தான பாரம்பரியமுடைய நம்முடைய மேலவை ஒரே சிந்தனையின் அடிப்படையில், ஒரே காரணத்திற்காக அகற்றப்பட்டதே, அது எந்த அளவிற்கு நியாயம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாமெல்லோரும் அரசியல்வாதிகள் தான். அரசியல்வாதிகளாக இருக்கிற காரணத்தினால்தான் இன்றைக்குச் சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கிறோம். இது மறுக்க முடியாத உண்மை. ஆனால் மன்றத்தில் செயல்படும் போது நாம் பொதுமக்களுடைய சேவகர்கள் என்று செயல்படும் போது அரசியல் உணர்வுகள் மட்டும் மேலோங்கி நிற்பது நாட்டிற்கு நல்லதல்ல ; ஜனநாயகத்திற்கு ஏற்புடையதல்ல. என்னைப் பொறுத்தவரையில் மேலவை ரத்து செய்யப்பட்டது, மேலவை இல்லாமல் ஆக்கப்பட்டது, எந்த ஒரு காரண காரியமும் இல்லாமல், முறையாகச் சிந்திக்காமல், மேலவை அகற்றப்பட்டதற்குக் காரணம் அரசியல் காரணம் ஒன்றுதான் என்பதை நான் மிகுந்த மனவேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். ஏதாவது அதிலே காரணம் குறிப்

பிடப்பட்டிருக்குமானால், தேவையில்லாத செலவை அரசு தவிர்ப்பதற்கு மேலவை அகற்றப்படுகிறது என்று சொல்வதை ஜனநாயகத்தில் ஆர்வம் உடையவர்களால் நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் கிடைக்கிற பயன்கள், லாபம் என்ன, நஷ்டம் என்ன, லாபம் அதிகமா, நஷ்டம் குறைவா என்று பார்க்கக் கூடிய கடப்பாடு நமக்கு உண்டு. இதற்குச் செலவாகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்தச் செலவிற்கு ஏற்ப எவ்வளவு பயன் நாட்டுக்குக் கிடைக்கிறது என்பதை, நம்முடைய ஜனநாயகத்திற்கு எவ்வளவு ஆக்கமும், ஊக்கமும் கிடைக்கிறது என்பதை, நல்ல ஆலோசனைகள், அரசுக்கு வழிகாட்டுதல்கள் கிடைக்கின்றன என்பதைக் கவனித்துப் பார்க்கிறபோது, அதனால் நமக்குக் கிடைக்கிற பயனைவிட நாம் செலவழிக்கிற பணம் மிகச் சிறியதே என்பதை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Advantages. Disadvantages—What are the advantages and disadvantages? The advantages accruing to the people are far-exceeding the disadvantages ; and that too, when, admittedly, as has been pointed out by the previous Government, it is only in order to save money, the Upper House was being removed. That is the reason that was adduced by the previous Government. I am sorry to say, Mr. Deputy Speaker, it is not a sufficient ground, a valid ground, because, it is seen from the History of this Legislature that the advantages that have been accruing to the people of this State are far-exceeding the disadvantages because of the financial commitment, viz., the financial expenditure that was made by the Government, by the Public Exchequer.

TRUTH ALONE TRIUMPHS

என்ற அளவிற்குத்தான் அதைக் கணித்திருக்க வேண்டும். ஒரு காருக்கு எப்படி ஷாக் அப்சார்பர் தேவையாக இருக்கிறதோ, அதைப்போல மேலவை தேவைப்படுகிறது. ஷாக் அப்சார்பர் என்ன வேலை செய்கிறதோ, ஒரு காரிலே சைலன்சர் என்ன வேலை செய்கிறதோ அதுபோன்ற வேலையை மேலவை செய்யும். இந்த சைலன்சரையும், ஷாக் அப்சார்பரையும் நான் உதாரணமாகச் சொல்வதற்குக் காரணம், அதனுடைய விளைவுகள், அதனுடைய வேலைகள், இவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால், உங்களுக்குத் தெரியும் என்பதற்காகத்தான். இந்த அவை

1989 பிப்ரவரி 20] [திரு. எம். அப்துல் லத்தீப்]

யிலே ஏற்படுகிற வேகங்களை எல்லாம் குறைத்து வேகங்களை வெளியே காட்டாமல் ஒரு சட்டத்தை நிறைவேற்றி, விவேகத்தோடு, பெரியவர்கள் உட்கார்ந்து சிந்திக்கின்ற காரணத்தால் It is called 'Elders House'. Why should you remove the Elders? பெரியவர்களை எல்லாம் அகற்ற வேண்டும் என்று சொன்னால், அப்போது இளைஞர்கள் எல்லாம் பெரியவர்களாக ஆகமாட்டார்களா? வயதானவர்களாக ஆகமாட்டார்களா?
The 'Elders House' must be thereஎனவே ஒரு ஷாக் அப்சார்பரை போல, சைலன்சரைப்போல, வேலை செய்கிற இந்த அப்பர் ஹவுஸ் என்று சொல்லக்கூடிய, பெயரே "அப்பர் ஹவுஸ்", மேல் அவையை, கொஞ்சம் மேலான சிந்தனை உடையவர்கள் எல்லாம் மேலாக இருக்கிற மேலவையை வெறுக்கமாட்டார்கள்

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருப்பவர்கள் எல்லாம் மேலாக சிந்திப்பார்கள் என்றார்கள், இங்கே இருப்பவர்கள் எல்லாம் மேலாக சிந்திக்கமாட்டார்களா?

திரு. எம். அப்துல் லத்தீப்: அங்கே இருப்பவர்கள் மேலாகவும் சிந்திப்பார்கள், விவேகமாகவும் சிந்திப்பார்கள். இங்கே இருப்பவர்கள் மேலாகவும் சிந்திப்பார்கள், கொஞ்சம் வேகமாகவும் சிந்திப்பார்கள். அது இந்த அவையினுடைய தன்மை. இந்த அவை இப்படித்தான் அமைந்திருக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மேலவையினுடைய அவசியத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இப்படி குறுக்கிடக்கூடாது. உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற கால்கட்டத்தில் பதில் சொன்னால் போதுமானது. சீக்கிரம் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு). உங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிற நேரத்தில் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். தற்போது குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். அப்துல் லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, பேரவையிலே உணர்வுகளும் பிரதிபலிக்க வேண்டும். அதைத் தான் வேகம் என்று சொல்கிறோம். அந்த உணர்வுகள் வேகமாகவும் இருந்திட வேண்டும். அதேநேரத்தில், விவேகமாகவும் நிலவிட வேண்டும். மேலவையிலே விவேகத்தோடு சிந்திக்கின்ற தன்மை அமைந்திருக்கக்கூடியவர்களை, பல்வேறு முறைகளிலே

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 20

அங்கே இடம் பெறச் செய்கின்றோம். எனவேதான் இதை ஷாக் அப்சார்பரைப் போன்று, சைலன்சரைப் போன்று என்று சொன்னேனே தவிர,—ஷாக் அப்சார்பர் மற்றும் சைலன்சரும் தேவை தான். ஆனால் நாம் கார் போன்றவர்கள், காரினுடைய பாடி, காரினுடைய என்ஜின் போன்றவர்கள். இதை நான் மறுக்க வில்லை. ஆனால் அந்தக் காரினுடைய என்ஜினிலே ஏற்படுகிற சத்தத்தை, அதிலே ஏற்படுகிற ஷாக்குகளை, அதிர்ச்சிகளைத் தாங்கிக்கொண்டு, முறைப்படுத்தி, காரை நிதானமாகவும், பத்திர மாகவும், அழைத்துச் செல்லக்கூடிய மகத்தான வேலையைச் செய்யக்கூடியவர்கள்தான் 'எல்டர்ஸ்' என்று சொல்லப்படுகி றார்கள். எனவேதான் இந்த அவை தேவை என்று நான் சொல் கிறேனே தவிர, பேரவை உறுப்பினர்களுடைய முக்கியத்துவத்தை நான் குறைத்துச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் நான் கூட இங்கேதான் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களுக்கு நான் மரியாதையோடு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே தான் ஒரு மகத்தான தீங்கு நடைபெற்றிருக்கிறது, ஒரு மகத்தான கொடுமை நடைபெற்றிருக்கிறது.

I would call it a 'political genocide'. The injustice is being removed by the Hon. the Chief Minister, by introducing this historical resolution in this House and this resolution should go to the Parliament for their consideration. In so far as we are going to decide that this Legislature of Tamil Nadu will continue to be a bi-cameral Legislature, the great injustice that has been done to the Tamil Nadu Legislature is being removed. The 'political genocide' is being exposed to the people — not only the people of this State but the entire country. The Hon. the Chief Minister is not bringing an ordinary resolution. He is going to bring once again the Upper House which is one of the two wings of this Legislature, without which this Legislature is not complete, because we, trace our origin only to the bi-cameral Legislature. It is only out of political vendetta, political consideration that the Upper House was given a go-by. I support this historical decision taken by the Hon. the Chief Minister. I am happy to note that Dr. Kalaignar is going to open one more historical chapter which is going to add life and lustre not only to this Legislature but to the body politic of the entire Tamil Nadu, and I would say, to the entire country. With these words, Mr. Deputy Speaker, I support the resolution whole-heartedly on my behalf and on behalf of the Indian Union Muslim League.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, சபாநாயகருடைய தீர்ப்பே 'எல்' என்று போட வேண்டுமென்பது.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: லத்தீபே பேசிய காரணத்தால் போடத் தேவையில்லை.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஒரே ஒரு முஸ்லீம் லீக்தான் இருக்கிறது. ஆகையால் அந்தத் தேவை ஏற்படவில்லை.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே (குறுக்கீடு) தீர்ப்பு தெளிவாக இருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அதைச் சுவையாக எடுத்துக்கொண்டாலும், மற்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற நேரத்தில், அப்படிச் சொல்லியாக வேண்டுமென்றார்கள். எனவே அப்படிப்பட்ட நிலையில் ஒரு பொதுவான தீர்ப்பாக இங்கே அமைந்திருக்கிறது இங்கே அப்படித்தான் அழைக்க வேண்டுமென்று நமது சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'எல்' என்று போட்டுக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. 'எல்' என்று 'பிராக்கெட்டில்' போட்டால் Learned என்கின்ற பொருளும் வரும். அதற்கு கூச்சப்பட வேண்டிய அவசியமே இல்லை.

திரு. குமரி அனந்தன்: போடுகிற 'எல்' வேறு பொருள்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அவரவருடைய பாரம்பரியம், அவரவருடைய மனோநிலையைப் பொறுத்து, பொருள்கள் மாறுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பொருள்படுவது அவருடைய மனோபாவம், அவருடைய பாரம்பரியத்திற்கு ஏற்ப அமையும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, தயவுசெய்து, பாரம்பரியம் என்ற சொல் எல்லாம் இங்கே பேசப்படுகிறது. 'எல்' என்ற சொல்லுக்கு பொருள் பல உண்டு என்று சொல்லு கின்றபோது, பலர் பார்வையிலே 'பிரேக்கெட்'டிலே போடுகின்ற போது, அந்த 'எல்'தான் வரும் என்று சொன்னேனே தவிர, பொதுவாக நடைமுறையில் காரை ஓட்டுகின்றவர்கள் 'எல்' என்று போட்டால் என்ன என்றுதான் சொன்னேனே தவிர, யாரையும் நான் குறைத்துச் சொல்லவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல், நானும் ஒன்றைச் சொன்னேன். அவ்வளவுதான். இதிலே பாரம்பரிய சிறப்புகள் எதுவும் வர வில்லை என்பதையும், வழக்கத்திலே இருப்பதுதான் சொல்லப் பட்டது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அது மட்டுமல்ல (குறுக்கீடு) மாரியைப் பற்றிச் சொன்னார்கள். அந்த மாரிக்கும் பொருள் உண்டு. மாரி என்பது நாட்டுக்குப் பயன் தருகின்ற ஒன்று. நான் சொன்னது கார்தான். 'பேகார்' அல்ல. 'பேகார்' என்றால் வீணானது. அது அவருக்குத் தெரியும். நான் 'கார்' தானே தவிர 'பேகார்' அல்ல. நான் எல்லா வகையிலும் 'கார்' என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: 'எல்' என்பதற்கு Legal என்றுகூட பொருள் உண்டு. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து உறுப்பினர் அவர்களைப் பேச விடுங்கள்.

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மன்றத்திலே சட்டமன்ற மேலவையைத் திரும்பவும் கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் பாரம்பரியத்தைப்பற்றியெல்லாம் பேசினார்கள். அழிந்துவிட்ட பாரம்பரியத்தை நமக்கு பெற்றுத் தருவதற்காக இந்தப் பெருமை மிக்க தீர்மானத்தை இந்தச் சபை கொண்டு வந்திருக்கிறது. இதை நாம் பெருமையாக ஏற்றுக்கொள்வோம். விரைவிலே நிறை வேற்றுவோம். நிறைவேற்றுகிறபொழுது, அதிலே ஒரு சில கருத் துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 20] [திரு. கோ. பூவராகன்]

இது ஏதோ ஒரு காழ்ப்புணர்ச்சியினாலே ஒருவர் இந்த மன்றத்திலே இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்ட காரணம். செலவினத்தைக் குறைப்பதற்காக இந்த மன்றத்தை நாங்கள் எடுத்து விடுகின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னவர்கள் சமீபத்திலே ஒரு ஆண்டிற்கு முன்னாலே ஒரு இலாக்காவிலே தேவையில்லாத ஒரு அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரிக்காக ரூ. 10 இலட்சத்தைச் செலவு செய்திருக்கிறார்கள். நான் இதை எல்லாம் நிதிநிலை அறிக்கை வரும்போது எடுத்து வைக்கலாம் என்று நினைத்தேன். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக அன்றையதினம் இது கொண்டுவரப்படவில்லை. ஏதோ ஒருவர்மீது இருக்கின்ற காழ்ப்புணர்ச்சியினாலே இதைக் கொண்டுவந்து இந்த மன்றத்தை எடுத்துவிட்டார்கள். ஒருவர் மீது நமக்குக் காழ்ப்புணர்ச்சி இருக்கின்றபோது அந்தப் பெருமை மிக்க மன்றத்தை அதற்காக அழித்துவிடக்கூடாது. எனவே, அந்தப் பெருமையை இங்கே பெற்றுத் தரவேண்டுமென்பதற்காக முதல்வர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சிக்கு என்னுடைய பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த மன்றத்திலே 63 உறுப்பினர்கள் இருப்பார்கள். அதிலே 21 பேர் இந்த மன்றத்தின் வாயிலாகவும், அடுத்த 9 பேர் ஆளுநரின் நியமனத்தின் மூலமாகவும், 6 பேர் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 6 பேர் சட்ட, ஆசிரியர்கள், பட்டதாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற அளவிலே இப்படி 63 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். நாம் நினைத்தால் அதை 78 ஆகக்கூட ஆக்க முடியும், செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். அதை நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் ஏற்கனவே பாராளுமன்றத்திலே இருக்கிற நம்முடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. காரணம் ஜனத்தொகை குறைந்துவிட்டது என்று சொல்லி, குறைத்து விட்டார்கள். அதேபோல இம்மாமன்றத்தில் கூட இருக்கிற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. ஏனென்றால் சில தொகுதிகளைப் பார்க்கிறபோது இன்றையதினம் 3½ லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். குறைந்தபட்சம் எல்லாத் தொகுதிகளிலேயும் 1½ லட்சம், 1¾ லட்சம், 2 லட்சம் என்று வாக்

காளர்கள் அதிகரித்திருக்கின்றனர். நிறைய அளவிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. பல கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றையதினம் நம்முடைய தமிழ்நாட்டிலே பல திட்டங்களின் மூலமாகச் செலவிட இருக்கிறோம் அப்படிப் பார்க்கிறபோது ஒரு சிறிய தொகை மேலவையை அமைப்பதற்காக ஆகும் என்கிறபோது அந்தத் தொகையை நாம் பெருமையாக ஏற்று, செலவிட்டு அந்த நல்ல ஆலோசனைகளைப் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதிலே யாரை நியமிப்பது, யாரை எல்லாம் போடுவது, எப்படி எல்லாம் போடுவார்கள் என்றெல்லாம் முன்கூட்டியே சொன்னார்கள்.

அதை அமைக்கின்றபோது நன்றாக அறிந்த, தெரிந்த, சிறந்த அறிஞர்கள், பேராசிரியர்கள், நல்ல துறைகளிலே நல்ல ஆலோசனைகளைச் சொல்லக்கூடியவர்கள், இந்த அரசாங்கத்திற்கு நல்ல முறையிலே நல்ல கருத்துக்களைச் சொல்லும்படி அவர்களை நியமிப்பார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல அம்மாமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கிறபோது பல நாட்களாக இருக்கிற முறை ஒன்று உண்டு. ஆசிரியர்கள் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு, பட்டதாரிகள் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு, யார் வேண்டுமானாலும் அதற்கு தேர்தலிலே நிற்கக் கூடாது. பட்டதாரிகளாக இருக்கிறவர்களை மட்டும் அந்தத் தொகுதியிலே நிறுத்த வேண்டும். பட்டதாரிகள் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டு வருவது நல்லது என்று கருதுகிறேன். அதேபோல ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் மட்டும், ஓய்வு பெற்றவர்களோ அல்லது ஆசிரியர் பணியிலே இருந்து விடுவிக்கப் பெற்று வருகிறவர்களோ மட்டும் நிற்க வேண்டும் என்பது ஒரு நியதியாக வர வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அதோடு எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் சொன்னார்கள், எப்படி இருந்தாலும் அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள்தான், ஆலோசனையாகச் சொல்லப்பட்டு அவர்கள் வாயிலாக இந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்று. இது ஒரு மரபாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் வருகிற ஆளுநர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர் எப்போதும் அரசாங்கத்தினுடைய ஆலோசனைபடிதான் நடக்க வேண்டும் என்கிற ஒரு வழி முறை, பழக்கம் வாடிக்கையாக இருக்கிறது. இதனால்

1989 பிப்ரவரி 20] [திரு. கோ. பூவராகன்]

ஆளுகிற அரசாங்கம் வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பேனல் ஆப் நேமஸ் கொடுக்கிறார்கள். அதிலிருந்து நீங்கள் எல்லோரும் தேர்ந்தெடுத்து எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அவ்வாறு செய்வதிலே ஒன்றும் தவறு இல்லை. அப்படிச் செய்ய வேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

முன் கூட்டியே இவ்வாறு எல்லாம் செய்வார்கள், செய்யமாட்டார்கள் என்று சொல்லாமல் நல்லதையே செய்வார்கள் என்று நல்ல நிலையில் எடுத்துக்கொண்டு நல்லதையே நினைக்க வேண்டும், நல்லதே நடக்கும் என்று நான் கருதுகிறேன்.

(நண்பகல் 12-00)

இந்த மன்றம் வேண்டாம் என்று நிறைவேற்றிய தீர்மானத்தை, மிக விரைவில் விரைந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, அதை வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்திலே எதிர்க் கட்சியினுடைய வரிசையிலே அமர்ந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் இங்கு வந்திருப்பது வரவேற்கத்தக்கது. ஏனென்றால் இங்கே நாம் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை—விரைவிலே பாராளுமன்றம் நடக்க இருக்கிறது—அந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, விரைவிலே இந்த மன்றம் அமைவதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். அவர்களும் தேர்தல் சமயத்தில் நாங்கள் வந்தால் மேலவை வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில்கூட ஆதரித்துப் பேசுவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், இந்த மன்றத்திலே நிறைய யோசனைகள் சொல்வதற்குப் பல குழுக்களை அமைப்பு நிலையில் ஏற்படுத்திக்கொள்ளலாம், ஆனால் அந்த மேலவை வேண்டாம் என்று. அது அவர்களுடைய கருத்து. நாம் பார்க்கின்றோம். தமிழ் வளர்ச்சிக்குக் கூட நிறைய குழுக்கள். இப்படி குழு, குழு என்று போட்டுக் கொண்டே இருக்கலாம். குழு என்று சொன்னால் நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். அந்தக் குழுவினால் ஏற்படு

கின்ற பலனைவிட இந்த மேலவையினால் ஏற்படுகின்ற பலன் நிறைய உண்டு. குறைந்த செலவிலே நிறைய பெருமைமிக்க காரியங்களை இந்த அரசாங்கம் பெறுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே மேலவையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையைத் தோற்றுவிக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி சொல்கிறேன். அரசியல் சட்டப் பிரிவு 164-ன்கீழ் Clause 2, The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State.

நம்முடைய இந்திய அரசியல் சட்ட அமைப்பின்படி அமைச்சரவை பதில் சொல்ல வேண்டிய இடம் இந்த மன்றம்தான். நீங்கள் ஏன் இன்னொரு மன்றத்தினைத் தோற்றுவித்து அங்கேயும் போய் பதில் சொல்லி கஷ்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். 164—பிரிவு 2-ஐ நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State.

கௌன்சில் என்று போடப்படவில்லை. அடுத்ததும் சொல்கிறேன்.

The Cabinet is responsible to the Legislative Assembly. The Council of Ministers are responsible and accountable to this House.

நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டிய இடம் இங்கேதான். இதுதான் மக்கள் சபை, மக்கள் மன்றம். நீங்கள் வெளியிலே சொல்கிறீர்களே—மக்கள் மன்றம், இதுதான். திரு. லந்தீப் அவர்கள் பேசும்போது லெஜிஸ்லேச்சர் என்றால் கௌன்சில் வந்தால்தான் கம்ப்ளீட் என்று ஒரு வார்த்தை சொன்னார்கள். அரசியல் சட்டம் பிரிவு 168-ன்படி.

There shall be a Legislature

என்று சொல்லி, கௌன்சில் கட்டாயம் இருக்க வேண்டும் என்று அதில் எழுதப்படவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. கீழே இருக்கிறது. நான் படிக்கிறேன்.

1989 பிப்ரவரி 20] [திரு. பி. எச். பாண்டியன்]

For every State there shall be a Legislature which shall consist of the Governor and in the States of
பேர் போட்டிருக்கிறார்கள். இதிலே வேண்டும் என்றால் வைத்துக் கொள்ளலாம், வேண்டாம் என்றால் எடுத்து விடலாம், ஆனால் பாராளுமன்றம் அப்படி அல்ல. அரசியல் சட்டப் பிரிவு 79

There shall be a Parliament for the Union which shall consist of the President and two Houses.

அங்கேதான் கம்ப்ளீட்டாக இரண்டும் வேண்டும். அது இல்லா விட்டால் "கம்ப்ளீட்" என்ற வார்த்தை இங்கே தேவையில்லை.

Vote on Account
அடுத்து அரசியல் சட்டப்பிரிவு 206—

எடுக்கக்கூடிய அளவு இங்கேதான். நீங்கள் ஆண்டிற்கு ஆகக் கூடிய செலவை இங்கேதான் கேட்கின்றீர்கள். அங்கே கேட்பது கிடையாது. இந்த அவைதான் அனுமதி வழங்க வேண்டும். (குறுக்கீடு) வோட் ஆன் அக்கவுண்ட்—
Article 206, Clause 1, Vote on Account—Votes of credit and exceptional grants

எனவே,

Money Bill shall not be introduced in that House—'shall'
என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அவையின் முக்கியத்துவத்தை கருதித்தான் அரசியல் சட்டத்தை எழுதியவர்கள் அதை எழுதியிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில் இந்த அவை கிடையாது. திரு. லத்திப் பேசும்போது, genocide என்று சொன்னார்கள். அப்படியானால், 1969 என்று எண்ணுகின்றேன். பஞ்சாபில் மேலவையை ஒழித்தார்கள். அவர்கள் genocide பண்ணியதாகச் சொல்ல முடியாது. 1970-வது ஆண்டு மேற்கு வங்கத்தில் மேலவையைக் கலைத்தார்கள், அப்படிச் சொல்ல முடியாது; தேவை என்றால் வைத்துக்கொள்ளலாம் தேவையில்லையென்றால் எடுத்துவிடலாம். அதுதான் இந்தத் தீர்மானம்.

இன்றைக்கும் வேண்டுமெனில் நீங்கள் வைத்துக் கொள்ளலாம். பிறகு கொஞ்ச காலம் கழித்து, 'House of Elders' என்று சொல்கிறோமே, நாம் என்ன அறுபது வயதைத் தாண்டியா அங்கே நியமித்தோம்? எனக்குத் தெரிந்த சில நண்பர்கள், இளைஞர்கள்

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 20

அங்கே இருந்தார்கள். ஆகவே, அந்த அவையின் கருத்து அமைச்சரவைக்குத் தேவை என்று கருதுவீர்களேயானால், இந்த அவையிலே இன்னும் கொஞ்சம் அதிகமான உறுப்பினர்கள் வேண்டும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்குக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Thiru M. ABDUL LATHEEF : Mr. Deputy Speaker, Sir. in order to set right the record, I would submit that my observations were only with reference to the bi-cameral legislature and it is for a particular legislature elected by the people to decide whether the other House should be there in existence or not. But, once it is accepted and once it is approved by the representative body of the people, it is a 'must' that the Government is answerable not only to the Lower House but also the Upper House ; that the lower House has certain advantages over the Upper House ; that is there which is incorporated in the Constitution with particular reference to the Finance Bill. The Finance Bill can emanate only from the Lower House and not from the Upper House. But any Bill other than the Finance Bill can emanate from either of the two Houses. Therefore, once we accept that there should be a bi-cameral legislature, the importance of lower House is only in so far as the Finance Bill is concerned. I do not dispute that idea.

திரு. பி. எச். பாண்டியன்: திரு. லத்தீப் அவர்கள் ஆர்ட்டிகிள் 164—கிளாஸ்-2-ஐப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்

"The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State."
ஆகவே, இங்கேதான்

Thiru M. ABDUL LATHEEF : There are some misgivings about the constitutional provisions. I know that my Honourable friend, learned colleague Thiru P. H. Pandian is well trained in the constitutional law. But at the same time, the implications of the various provisions of the Constitution should be brought forth to this House. What I submit is, that the Ministry is collectively responsible to the Legislative Assembly. There is no dispute about that. But at the same time wherever the State Legislature approves the existence of a bi-cameral legislature, so far as the responsibility and accountability are concerned, there is no doubt about the fact that this Government is answerable and accountable to the lower House. But at the same time, I would like to pose one question. Suppose a Bill other than the Finance Bill, is defeated in the Upper House, then what will happen?

1989 பிப்ரவரி 20] [Thiru M. Abdul Latheef]

It should be brought back to the lower House. That is why I submitted that it provides a device in the same way as a shock absorber and the correctives provide. I was very very careful in using that word. Therefore, there should not be any misgiving. I state, I still reiterate that this Government is answerable and accountable only to the lower House but at the same time, the constitutional competency, the constitutional importance of the Upper House in the State where the bi-cameral legislature is the order of the day, cannot be belittled. What I was submitting is that a great custom, a great convention and a great tradition should not have been given good-bye.

திரு. பி. எச். பாண்டியன்: அரசியல் சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—

"The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State." ஆகவே, விளக்கம் அல்ல. இதற்கு விளக்கமே வேண்டாம்.

(பிற்பகல் 12-10)

அதில் அப்படியே எழுதப்பட்டிருக்கிறது. மேலவையைப் பொறுத்தவரையில்

Thiru M. ABDUL LATHEEF : For every law there is what is called the substantive part and the procedural part. Both are important. Indian Penal Code is important. Criminal Procedure Code is also important. I have been submitting about the procedural part of the Legislature. In the procedural law, the Upper House has the same constitutional importance as the Lower House, in matters other than the Financial matters.

திரு. பி. எச். பாண்டியன்: இதற்கு வேறு விதமாகச் சொல்கிறேன்.

Council is a creation of the Assembly. We are the creators. கவுன்சிலை நாம்தான் உருவாக்கலாம், எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'கிரியேட்' செய்வதற்கு அதிகாரம் உண்டா இல்லையா என்பதுதான் பிரச்சினை. மேலவை தேவைப்படுகிறது, தேவைப்பட்டால் வைத்துக்கொள்ளலாம் என்று அரசியல் சட்டம் இடம் கொடுப்பதால் உங்களுடைய விளக்கங்களைச் சுருக்கிக் கொள்ளலாம்.

[1989 பிப்ரவரி 20

திரு. எம். அப்துல் லத்தீப்:

May I submit one thing. The Hon'ble Member submits that the Upper House is a creation of the Lower House. That also is to be disputed.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மேலவையை ஏற்படுத்த அரசியல் சட்டம் இடம் கொடுக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப்:

May I submit one thing? The Council is created only by the Parliament as per the Constitutional provisions. This House has only a recommendatory power. That is all. That is why a Resolution has been introduced, asking the Parliament to re-introduce the Upper House. Parliament is the only body which is constitutionally competent to create the Upper House. We have got only a recommendatory power. Therefore

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

Assembly is the creation of the Constitution.

அரசியல் சட்டம் இந்த அவையை உருவாக்கியிருக்கிறது. நாம் அவர்களை உருவாக்குகிறோம். ரெக்கமன்டேஷன் தேவைப்படுகிறது. ரெக்கமண்டேஷன் இல்லையென்றால், அவர்கள் கொடுக்க முடியாது. அதற்கு ஒப்பாக, திரு. லத்தீப் சொன்னதால் சொல்லுகிறேன். அரசியல் சட்டம் பிரிவு 239 (எ)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் என்ன சொல்ல வருகின்றீர்கள்?

திரு. பி. எச். பாண்டியன்: அதாவது எல்லாவற்றையும் சொல்லிவிட்டு கடைசியில் நான் கோர்ட்டில் இப்படித்தான் பேசுவது வழக்கம்; கடைசியில் இதை ஏற்றுக்கொள்கிறோம் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்று.

Parliament may, by law, create any of the Union Territories — Goa, Diu Daman, Mizoram, Arunacrala Pradesh —

அந்தச் சட்டமன்றங்களைத் தோற்றுவித்ததைப்போல; பாராளுமன்றம் அந்தச் சட்டமன்றங்களைச் சட்டம் போட்டு தோற்றுவித்ததைப்போல நாம் இங்கே தீர்மானம் போட்டு மேலவையைத் தோற்றுவிக்கிறோம். ஆகவே, அது இருந்தால்தான் இந்த அமைச்சரவை நல்ல கருத்துக்களைப் பெறமுடியும், அந்த அவை இல்லாவிட்டால் அமைச்சரவை நல்ல கருத்துக்களைப் பெற முடியாது என்று சொல்லக்கூடிய கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

1989 பிப்ரவரி 20] [திரு. பி. எச். பாண்டியன்]

அரசியல் கட்சிகள் தேர்தல் நேரத்திலேயே வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கொஞ்சம் அனுபவம் உள்ளவர்களை, அறிவாளிகளை எல்லாத் துறையிலிருந்தும் வரக்கூடியவர்களுக்கு இடம் கொடுத்துத் தேர்ந்தெடுத்தால் இந்தப் பிரச்சினையே வராது.

ஆகவே, அதை வைத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளிவிடாதீர்கள். காழ்ப்புணர்ச்சி என்ற பேச்சு எல்லாம் இந்த வாதத்திலிருந்து எப்படி நீக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவை ஆலோசனை சொல்லக்கூடிய அவையாக இருக்குமானால் with great respect யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது அந்த அவையில் இருந்தவர்கள், 17 ஆண்டுகளாக இங்கேயிருந்து நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகள், திருத்தங்கள், மசோதாக்கள் ஏதாவது நிறைவேற்றப்படாமல் அங்கிருந்து திரும்பி வந்திருக்கிறதா? கிடையாது.

நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற குற்றச்சாட்டு. மேலவையில் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பார்க்க முடிந்ததா? ஆகவேதான் சொல்கிறேன். இன்றைக்கு இதுபோன்ற நிறுவனங்களினாலே, புதிய, புதிய நிறுவனங்களினாலே நம்மால் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. இங்கே நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த அவை இருக்கின்றது. இந்த அவையையே நன்றாகப் பயன்படுத்துவோம். ஆண்டிற்கு 100 நாட்கள் கூட்டுகிறோம். இதை 200 நாட்களாகக் கூட்டுங்கள். இன்னொரு 100 நாட்கள் கூட்டுங்கள் அப்படி கூட்டுவீர்களேயானால் நல்ல கருத்துக்களை இன்னும் அதிகமாகச் சொல்லலாம். யூனியன் பிரதேசங்களில்—5 எம்.எல்.ஏ.-க்கள் என்று எண்ணுகிறேன்—மத்திய அரசாங்கமே கோ-ஆப்ட் பண்ணலாம்; நியமிக்கலாம். இது யூனியன் பிரதேசங்களுக்கு. மாநில அதிகாரங்களைக் கேட்கும்போது நாம் ஏன் இங்கேயே ஒரு 10 பர்சென்ட்டை கோ-ஆப்ட் பண்ணக்கூடாது. அப்படி கோ-ஆப்ட் பண்ணுவதற்கு வழிவகைகளைச் செய்து தாருங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் ஜனாதிபதியையும், பிரதம அமைச்சரையும் கேட்டுப் பார்த்துவிட்டு அவர்கள் தரவில்லையென்றால், நீங்கள் யோசித்துப் பாருங்கள். ஆகவே, மேலவைபற்றி பல்வேறு நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அங்கே இருக்கும் சூழ்நிலை வேறு. அமெரிக்க நாட்டிலுள்ள மாநிலங்களில் செனட்டை வைத்தார்கள். அதற்காகத்தான் ஜார்ஜ் வாஷிங்டன் சொன்னார், cup and saucer

என்று. அதாவது அங்கேயுள்ள நிலைமைகள் வேறு. We are not Americans நாம் இந்தியர்கள்; தமிழர்கள். நம்முடைய நாட்டில், இங்கே, இந்த அவையிலே அனுபவம் முதிர்ந்தவர்கள் இருக்கின்றீர்கள். 50 ஆண்டுகளுக்கு மேல் பொது வாழ்வில் இருந்த முதலமைச்சர் இங்கே இருக்கின்றவர்கள். 25, 30 ஆண்டு காலமாக இந்த அவையிலே இருந்தவர் இங்கே இருக்கின்றார். உங்களுக்கு ஆலோசனை சொல்ல இன்னொரு அவை தேவையா? ஆகவே, தேவையில்லை என்ற கருத்தோடு நான் அமைகிறேன், நன்றி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஒரு கருத்திற்காக நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையையே அதிக காலம் நீட்டித்து அதன்படி நம்முடைய நடவடிக்கைகளை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இதற்கு ஒரு முன் உதாரணம் இருக்கிறது. இங்கிலாந்து தேசத்திலே "House of Lords" -ஐ ஒழித்து Long Parliament என்றே கொண்டு வந்தார்கள். அதிக நாட்கள் அமர்ந்து அவையினுடைய நடவடிக்கைகளை நடத்தினார்கள். ஆனால் கிராம்வெல் வந்தபோது, அதன்பிறகு எழுந்த நிகழ்ச்சியின் காரணமாக இது சரியில்லையென்று சொல்லி மீண்டும் மேலவையைக் கொண்டு வந்திருக்கிற ஒரு உதாரணம் இருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசர்களால் ஏற்பட்ட பிரச்சினை. சட்டமன்றத்திற்குள்ளேயே கிராம்வெல் வந்த பிறகுதான், அரசு அந்தப் பாரம்பரையைக் கொண்டு வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி வைத்துவிட்டார்கள். அன்றைக்கு, நீங்கள் அமர்ந்து இருக்கின்றீர்களே இதுபோன்ற நாற்காலியில் லென்தால் என்ற ஒரு சபாநாயகர் இருந்தார். அரசரைக் குறை சொல்லிப் பேசினார்கள் அவையிலே. உடனே அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் வேகமாக குதிரையில் அவைக்கு வந்துவிட்டார். (குறுக்கீடு)—சார்லஸ்—அவைக்குள் வந்தவுடன்—அரசர் கத்தோலிக்கப் பெண்ணை மணந்துவிட்டார், அதுதான் பிரச்சினை—சபாநாயகர் எழுந்து நின்றார். சபாநாயகரைப் பார்த்து அவர் கேட்டார், அந்த 5 பேர்களை என்னிடத்திலே ஒப்படையுங்கள் என்று. லென்தால் சொன்னார்,

'I have neither eyes to see, nor ears to hear, nor tongue to speak'

1989 பிப்ரவரி 20] [திரு. பி. எச். பாண்டியன்]

இதுதான் அவர் சொன்ன வார்த்தை; கொடுக்க முடியாது, ஒப்படைக்க முடியாது என்று சொல்லி விட்டார். மன்னர் கோபமாகப் போய்விட்டார் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 பேர்களை ஒப்படைக்க வேண்டுமென்று (குறுக்கீடு) அவர் கேட்டபோது.

including cromwell

அதற்கு அவர் பதில் சொன்னது:

'I have eyes to see, ears to hear; no tongue to speak'.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறகு அவர் அவைக்குள் நுழைந்த குற்றத்திற்காகத் தான் அவையிலேயே அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு கடைசியில் அவருடைய முடிவு தெரியும்—கழுத்தை வெட்டி கொன்றார்கள்.

(பிற்பகல் 12-20)

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, அரசர்களால் நடைபெற்றது என்று மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நடந்திருப்பது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதும். நிறைய விளக்கம் தந்து விட்டீர்கள்; நிறையப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) அடுத்தவர்களுடைய வாய்ப்புக் குறைந்து போகிறதே என்பதுதான்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அந்த எண்ணம் இல்லை. மற்றவர்களின் வாய்ப்பைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. தலைவர் அவர்களே, அரசர்களால் நடந்தது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் அரசர்களாலும் நடக்கிறது; அரசர்களைப்போன்று இருப்பவர்கள், அவர்களுக்கு வேண்டியவர்களாலும், வேண்டாதவர்களாலும்கூட இது நடக்கிறது என்பதை அவருடைய நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

[1989 பிப்ரவரி 20

திரு. பி. எச். பாண்டியன்: இன்றைக்கும் நாம் அரசருடைய அந்த வரலாற்றைத்தான் இந்த அவையிலும் பின்பற்றி வருகிறோம். அன்றைக்கு அரசவைக் கேட்காமல் வரி விதிக்க முடியாது; இன்றைக்கு ஆளுநரைக் கேட்காமல் வரி விதிக்க முடியாது.

President is King in Parliament.

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை நமக்கு முன்னால் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைத்து, அதன்பேரில் இந்த விவாதம் நடைபெறுகிறது. இதே பிரச்சினையை இதே மன்றத்தில் இதற்கு முன்னால் இருந்த அவையில், நாங்கள் பேசியவர்கள். மேலவை என்பது அவசியமில்லை என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தீர்மானம். அதனுடைய முடிவு. நாட்டு மக்களுக்கு முன்னாலும் நாங்கள் பல ஆண்டுகளாகவே அந்தத் தீர்மானத்தை முன்வைத்து, அந்தக் கருத்துக்களை வளர்த்தும் வருகிறோம். அதற்குத் தகுந்த பலம் ஏற்பட்டு அது நிறைவேற்றப்படக்கூடிய சக்தி ஏற்படுகின்ற வரையில் நாங்களும் தொடர்ந்து, இதற்காக வாதாட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

அரசியல் சட்டத்தினுடைய விளக்கங்களுக்குள்ளே மட்டும் இதற்குத் தீர்வு ஏற்பட்டு விடாது. மன்னர் பரம்பரையினுடைய பண்டைய கால சரித்திரத்தில் இருக்கின்ற அம்சத்தினால் மட்டும், இதற்குத் தீர்வு ஏற்பட்டு விடாது. மக்களுடைய புதிய ஜனநாயக உணர்வும் இன்றைக்கு வளர்கிறது. எந்த வர்க்கங்களுடைய சேர்மானத்தில் ஒரு அரசு உருவாகிறது? அதுதானே அதனுடைய அஸ்திவாரம். அந்தச் சேர்மானத்தினுடைய அடிப்படையிலிருந்துதான் நாங்கள் இந்த விஷயத்தைப் பார்க்கிறோம்.

ஆகவேதான், நாங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் முக்கியமான கருத்துக்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், நமது அரசும் கவனத்திலே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

இன்று இந்த மேலவை தேவையில்லை என்று நாங்கள் சொல்வதற்கான காரணங்களில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இங்கே வந்திருக்கும்படியான வாதங்களிலே முக்கியமான ஒரு அம்சம், நமக்குள்ளே மிகுந்த அறிவும், திறமையும், ஆற்றலும் பெற்றவர்கள் பல நல்ல காரியங்களை இந்தச் சமுதாய மாற்றத்திற்காகச் செய்வதற்கு நமக்கு யோசனை சொல்லக்கூடியவர்கள்,

அப்படிப்பட்ட பெரியவர்கள் இடம் பெற வேண்டும் அங்கே; இந்த அவையிலே அவர்கள் இடம் பெறவில்லை, ஆகவே அங்கே அவர்கள் இடம் பெற வேண்டும், அதன்மூலம் அவர்களுடைய அறிவுரைகளும், அவர்களுடைய ஆலோசனையும் நமக்குக் கிடைக்கப் பெற்று. இந்த அவை அதிலிருந்து பயன் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட அறிவாளிகள், திறமைசாலிகள்—அவர்களை நாம் நினைத்தால் என் மக்களுடைய நேரிடையான வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்க முடியாது? தேர்ந்தெடுக்க முடியும். அந்த முறையிலே இருக்கின்ற ஏற்பாடுகள் நம் ஜனங்கள் மத்தியில் உருவாக்கப்பட்டால்தான் அது வர முடியும். அது செய்ய முடியாத ஒன்று அல்ல. அப்படி நாம் செய்திருக்கிறோம், சில சந்தர்ப்பங்களிலே செய்ய வேண்டிய இடத்தில் செய்திருக்கிறோம். ஆகவே, அது இதற்கு அடிப்படையான ஒரு காரணமாக அமைய முடியாது என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், அறிவாளிகளும், திறமைசாலிகளும். விஞ்ஞானிகளும் வரவேண்டுமென்று. அவர்களுடைய கருத்துக்களை நாம் பெறுவதற்கு அரசு நினைத்தால் பல முறைகளிலே பெற முடியும். அவர்கள் இந்த அவையிலே உறுப்பினராகத்தான் இருக்க வேண்டுமென்பதோ அல்லது மேலவை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, அதிலே இடம் பெற்றுத்தான் இருக்க வேண்டுமென்பதோ அல்ல. இவ்வாறு இல்லாமலே அதைச் செய்ய முடியும். அந்த முறையிலே அவர்களுடைய அறிவுத் திறனும் ஆலோசனைகளும் நமக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அரசு ஏற்பாடு செய்ய முடியும்; செய்யலாம். அதற்குத் தகுந்த முறையில் ஏற்பாடு செய்தால் கிடைக்காமல் போகாது.

நல்ல அறிவாளிகள் எல்லாம் வரவேண்டும் என்று நினைத்தால் மேலவையைத் தோற்றுவித்தால் அவர்கள் எல்லாம் வந்துவிடுவார்களா? ஆலோசனை தரக்கூடிய நல்ல அறிவாளிகள் வந்தாலும் அதோடு பிரச்சனை முடிந்துவிடாது. ஆகவேதான் அது இந்தக் காலகட்டத்திற்கு ஏற்றது அல்ல என்று நாங்கள் சொல்கிறோம். கோடிக்கணக்கான மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கும்படியான ஜனநாயகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்ற எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த எழுச்சிக்கு மாறுபட்ட கருத்து இதனால் ஏற்படக்கூடும் என்று நாங்கள் கருதுகிறோம். அதனால்

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 20

தான் எங்களுடைய மக்கள் ஜனநாயக அமைப்பு மூலமாக நாங்கள் தெளிவாக எடுத்துச் சொல்கிறோம். நாங்கள் எப்படிப் பட்ட அரசை ஏற்படுத்த விரும்புகிறோம் என்றால், எங்கள் மக்கள் ஜனநாயக அமைப்புத் திட்டங்களில் 5-வது சரத்தில் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், மாநில மட்டத்தில் மேல்சபை இருக்காது; மேலே இருந்து நியமிக்கப்படும் ஆளுநரும் மாநிலத்தில் இருக்கமாட்டார்; இது எங்களுடைய மக்கள் ஜன நாயக அரசு அமைப்புத் திட்டம். இதை நாங்கள் பகிரங்கமாக மக்கள் மத்தியிலே சொல்லிக்கொண்டுதான் வருகிறோம். எங்களுடைய அரசு ஏற்பட்டிருக்கக்கூடிய மேற்கு வங்காளத்தில் இந்த அவை யைக் கலைத்தோம். அங்கே இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் அதை வரவேற்றார்கள். அந்த மக்களுடைய சமுதாய மாற்றத்திற்கு, முன்னேற்றத்திற்கு இந்தக் காரியம் சரியானது என்று அந்த மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அதைப்போன்று இன்றைக்குப் பல மாநிலங்களிலே இந்த மேலவை இல்லை. ஆனால் ஒரு காலத்திலே இருந்தது. அது மறுபடியும் கலைக்கப்பட்டது. இன்றைக்கு ஆந்திராவிலே மேலவை இல்லை; அதைப்போன்று கேரளத்தில் இல்லை. அங் கெல்லாம் அரசாங்கம் நடந்துகொண்டுதான் இருக்கிறது; புதிய திருத்தங்கள் வளர்க்கப்படுகின்றன. மக்களுடைய ஜனநாயகம் சுரண்டப்படக் கூடாது. 90 சதவீதம் மக்களுடைய ஜனநாயக எண்ணத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் மேல் ஆதிக்கம் இருக்க வேண்டும். அப்போது தான் சுரண்டல் மாற்றப்படும்; பாதுகாப்பான பாதையிலே முன்னேற முடியும். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்கிறோம்.

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் அதனுடைய தலைவர் இந்த மேலவை வேண்டாம், மேற்குவங்காளத்தில் இது இல்லை; கேரளத்தில் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் இங்கே அந்த அவை அமையக் கூடிய நேரத்தில் அவர்கள் தங்களுடைய உறுப்பினர்களை அனுப்பமாட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. ரமணி: கனம் துணை சபாநாயகர் அவர்களே. இந்த அவை ஏற்பட்டதற்குப் பிறகு நடக்கவேண்டிய ஒரு காரியத்திற்கு இப்போதே 'அட்வான்ஸ்' ஆக என்னைக் கேட்கிறார்கள். அது சரியல்ல. அந்தச் சமயத்தில் நாங்கள் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வோம். 144-வது சட்டத்தை சட்டப் புத்தகத்திலே இயற்றிவிட்டு அதை எதிர்த்த நாம் அத்தனைபேரும் சட்டப் புத்தகத்திலே இருப்பதினால் இனிமேல் நாம் இங்கே எதிர்க்கட்சியிலே இருந்து பிரயோஜனம் இல்லை என்று இந்த நாட்டை விட்டு போய்விடமாட்டோம். அதை எதிர்த்து போராடி முறியடிப்போம்.

ஆகவே, சபாநாயகர் அவர்களே, மக்களால் நேரடியாக வாக்களிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை இருக்கும் போது மேலவை தேவையில்லை என்பது எங்கள் கருத்து ஆகும். இந்த சட்டப்பேரவைக்கு மேற்பட்டது அல்ல சட்ட மேலவை அது பற்றி ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மாஜி சபாநாயகர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றம்தான், இந்தச் சட்டப் பேரவைதான் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. இந்தப் பேரவைதான் மக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதற்கு அஸ்திவாரமாக இருக்கிறது. நம்முடைய சட்டபேரவைக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் போல மேலவைக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே, இந்தப் பேரவை ஒன்றே போதும். எந்தச் சட்டமாக இருந்தாலும் இங்கே நிறைவேற்றப்பட்ட பின்னால்தான் அங்கே செல்கிறது. அல்லது அங்கே தொடங்கி வைத்தாலும் கூட இங்கே வைத்து, இறுதிப் படுத்தக்கூடிய சகல அதிகாரங்களும் படைத்த ஒரு சபை நம்முடைய சட்டப்பேரவை. ஆகவே, இந்த அவையினுடைய நடவடிக்கையைச் செயல்படுத்துவதில் காலங்கடத்துவதற்குத் தான் அந்த அவையின் உரிமைப்பு பயன்படுகிறதே தவிர வேறல்ல; அவர்கள் வேண்டுமென்றே அப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

அவை என்று உருவாகிவிட்டால் அதற்கென்று நடவடிக்கைகள் இருக்கும்; அதற்கென்று அவகாசம் இருக்கும்; அதற்கென்று பணமும் செலவழிக்க வேண்டி வரும். அந்தப் பணம் பெரிய அளவிலோ, சிறிய அளவிலோ என்பதல்ல. அவசியம் இருக்கிறதா என்றால் அது அவசியம் இல்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. இது ஒரு indirect representation. ஜனநாயகத்தினுடைய வளர்ச்சியிலே இது வரக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். மேலும் 'இன்டைரக்ட் ரெப்ரசன்டேஷன்' என்பது போய் டைரக்டாக அதாவது நேரடியாக மக்களுடைய பிரதிநிதிகள் தான் வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

(பிற்பகல் 12-30)

இங்கே நாம் பஞ்சாயத்து பில், மற்ற பில்கள் பற்றி எல்லாம் விவாதிக்கும்போது அந்த அம்சங்கள்தான் எடுத்துக் கூறப்பட்டு முன்னுக்கு வருகின்றன. அப்படிப்பட்ட 'இன்டைரக்ட் ரெப்ரசன்டேஷன்' வரக்கூடிய ஒரு சபையாகிய இம்மேலவை தேவையில்லை என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். மேலவை எந்தச் சட்டத்தையும் இறுதியாகச் செய்துவிட முடியாது. அதைத் திரும்பவும் நாம்தான் செய்ய வேண்டும். அதற்காக அவர்களுடைய விவாதத்தில் எந்தவிதமான கருத்துக்களும் வராது என்பதல்ல. மறுபடியும் இரட்டை வேலையாகத்தான் அது ஆகுமே தவிர அவர்கள் அதைச் செய்து முடிக்க முடியாது.

பணச்செலவு முக்கியமான அம்சம்தான். பணம் இல்லை என்பதைக்கூறி, அந்த வகையில் மேலவை உருவாக்குவதை எதிர்க்கிறோம் என்று மட்டும் சொல்வதில்லை. இருக்கிற அதிகாரம் போதாது. அதிகப்படியான அதிகாரம்—இன்றைக்கு மத்திய அரசு தானே சேர்த்து வைத்திருக்கும்படியான அதிகாரக் குவியலிலிருந்து பெரும்பகுதி அதிகாரம் நமக்கு வரவேண்டும்; இங்கே இருக்கின்ற மக்களிடத்திலிருந்து வசூலிக்கின்ற பணம் முழுவதும், அதாவது ஒரு மாநில அரசினுடைய உதவியோடு வசூலிக்கக்கூடிய பணம் முழுவதும் அந்த மக்களுக்காகச் செலவழிக்கப்படுவதற்கு உரிய வகையில் கிடைக்க வேண்டும்; எனவே அந்த வகையில் முக்கியமான அதிகாரத்தையும், நிதியையும் கேட்டுப் போராடிக்கொண்டிருக்கிறோம். மாநில சுயாட்சிக்கு அஸ்திவாரமான கருத்துக்களாக இவைகளை எல்லாம் நாம் முன் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில்தான் இந்தச் செலவுகள் எல்லாம் தேவையற்றது என்கிறோம். அப்படிப்பட்ட தேவையற்ற செலவுகளுக்கு நாம் வழி வைப்பது சரியல்ல என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

1989 பிப்ரவரி 20] [திரு. கே. ரமணி]

மற்றொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஜனநாயகத்தில் தன்னைத்தானே . . (குறுக்கீடு) செலவு ஊாஸ்திதான். மக்கள் பெரும்பாலும் . . (குறுக்கீடு) ஓட்டுரிமை இருக்கும் . (குறுக்கீடு) அப்படிப்பட்ட குறுக்கு வழியில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது . . (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால் கேளுங்கள். சோவியத் யூனியன் பற்றிக் கேளுங்கள். ஆனால் ரஷ்யாவுக்கும், இங்குள்ள நிலைமைக்கும் சம்பந்தம் இல்லை.

Here, we are sitting in an entirely different set-up. Their society is entirely different. If you want this to be discussed, we can have a discussion.

எனவே அது வேண்டாம். நாம் மேலும் முன்னுக்குச் செல்வோம். இந்தியாவிலே அப்படிப்பட்ட ஒரு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் பேசிக்கொண்டிருக்கிறாரா அல்லது அமைச்சருடன் பேசிக் கொண்டிருக்கிறாரா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: சபாநாயகர் அவர்களே, நீங்களே அதைக் கவனித்தால் நேரடியாகவே உங்களுக்குத் தெரியும். என்ன நடக்கிறது என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவும் என் மூலமாகத் தான் வரவேண்டும்.

திரு. கே. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, உங்க ளுடைய மேலான கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே மேலவையை உருவாக்குகின்ற இந்தத் தீர்மானத்தை நாம் இந்த அவையிலே நிறைவேற்றுவது கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து. இதை நாங்கள் வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. நான் இந்த அரசி னிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தத் தீர் மானத்தை இப்போது நிறைவேற்ற வேண்டாம், இருக்கின்ற நிலைமை அப்படியே தொடரட்டும் என்பதுதான். இதற்கு வேண்டிய சூழ்நிலை பின்னால் வருமானால் மக்களின் கருத்துக் கள் வளரட்டும். அந்த முறையில்தான் இந்தக் காரியம் நடை பெற வேண்டும். எனவே மேலவை தேவையில்லை என்ற எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அவையிலே சிறப்பானவர்கள் இடம் பெறவில்லை ; அதனால்தான் வெளியே ஒரு அவையை உருவாக்குகிறோம் என்று சொன்னார்கள். நோக்கம் அதுவல்ல. இங்கேயும இடம் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும் இங்கே இடம் பெற முடியாமல் வெளியே இருக்கின்ற சிலருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். அதிலே குறிப்பாக functional representation என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். அதாவது தொழில் வாரியான பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்று இரண்டாவது அவைக்கான ஒரு காரணமாகச் சொல்வதுண்டு. அந்த அடிப்படையில்தான் இரண்டாவது அவை முதலில் உருவாக்கப்பட்டு இருந்தபோது உள்ளாட்சி மன்றங்களின் மூலம் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்தார்கள். அதேபோல ஆசிரியர்கள் தொகுதியிலே யிருந்தும் சிலர் வந்தார்கள். பட்டதாரி தொகுதியிலே இருந்தும் சிலர் வந்தார்கள். உள்ளாட்சித் தொகுதியிலிருந்து இங்கே சிலர் வரமுடியாத காரணத்தினால், உள்ளாட்சிகளுடைய அதிகாரங்கள் கூட பறிக்கப்பட்டன. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே. இதிலே மறுப்பதற்கு என்ன இருக்கிறது ?

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்லியிருக்கிறதனுடைய கருத்து, அறிவுத்திறனும் நல்ல ஆலோசனையைத் தரக்கூடியவர்களுமான பெருமக்கள் இந்த அவையிலே இன்னும் இடம் பெறவேண்டுமென்பதற்காக. இடம் பெறமுடியாமல் போகும்போது—என்னவென்று சொன்னால் இதற்கு என்று ஒரு எல்லை இருக்கின்றது, இத்தனை உறுப்பினர்கள்தான் இருக்கலாம் என்று எல்லை இருக்கின்றது, பெருவாரியாக நாட்டிலே இருக்கின்ற மக்கள் சாதாரண மக்கள். ஆகவேதான் இந்த அவை "மக்கள் அவை" என்று சொல்கிறார்கள். காரணம் அதுதான். ஆனால் அதற்கு அங்கே இடம் என்று சொன்னால், இதே போன்றவர்கள் ஏராளமான பேர்கள் ஆயிரக் கணக்கான அறிவாளிகள் மறுபடியும் வெளியிலேயே நிற்கப் போகின்றார்கள். அப்போது இந்த சபையை விஸ்தரிக்கப்

போகிறோமா? இரண்டு சட்டசபைகள் உருவாக்க முடியுமா? அப்படி செய்ய முடியாது. அதனாலேதான் நான் சொன்னேனே தவிர, வேறல்ல. அடிப்படைக் கருத்துக்கு நீங்கள் சொல்லக் கூடிய பதில் அதற்கு ஈடுகொடுக்கவில்லை.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிப்பதோடு எங்கள் கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த அவையை அப்படியே கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மனதிலே வைத்துச் செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறுகிறேன்.

நான் இந்த சபையில், முதல்வர் அவர்கள் எப்படி மூத்த உறுப்பினராக 32 ஆண்டுக்காலமாக இருக்கிறார்களோ, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்களோ, அதைப் போன்று கடந்த 1957 ஆம் ஆண்டிலிருந்து இருக்கிறேன். நான் அப்போது அந்தப் பக்கம் இருந்தேன். முதல்வர் அவர்கள் இந்தப் பக்கம் இருந்தார்கள். அன்றைக்கு இருந்த காரணத்தினாலேயும் இன்றைக்கு இருக்கின்ற காரணத்தினாலேயும் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களைப் பற்றி சொல்லும்போது மிகச் சிறப்பான முறையில் பணியாற்றக் கூடியவர்கள். அவரைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு பில்லுக்கு வருகிறேன்.

அவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது, அவர்களிடத்திலே ஏழைக் குழந்தைகளை, கொஞ்சம் மார்க் குறைவாக எடுத்திருக்கின்ற குழந்தைகளை அனுப்பி வைத்தால், அதற்கு மறுக்காமலேயே இடம் கொடுத்து பல குடும்பங்களை வாழ வைத்தவர் தலைவர் அவர்கள். அவர்கள் இங்கே தலைவராக தலைமை ஏற்றிருக்கின்ற காரணத்தினாலே இந்த அவையினுடைய கண்ணியம் பாதுகாக்கப்படும். அவர் சிறப்பான முறையிலே பணியாற்ற வேண்டும், பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு எனது நல்லாசியைக் கூறிக்கொள்கிறேன். அது போலத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்ற மாண்புமிகு அமைச்சர்களும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் காலத்திலேயிருந்து, இன்றைக்கும் அவர்களுடைய சொல்

லாற்றல், அவர்களுடைய சாதுரியம், அந்த சாதுரியத்தின் காரணமாக மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து அவரை இங்கே அமர்த்தியிருக்கிறார்கள், ஆகவே அமைச்சரவை இந்த 5 ஆண்டுக் காலத்திற்கும் சிறப்பான முறையிலே நடந்து மக்களுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்காகவும் பெண்கள் சார்பிலே நல் ஆசியையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரபை நன்கு பாதுகாக்கக்கூடியவர்கள். இங்கே இந்த சபையை ஆரம்பிக்கிற நேரத்திலே, நான் ஒருத்தி இங்கே இருக்கிறேன் என்பதைக்கூட மறந்துவிட்டிருக்கிறார்கள். 'Senior Member should be honoured' அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படி ஒதுக்கிவிட்டார்கள் என்று என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அது பல பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. பத்திரிகை மாத்திரமல்ல. பம்பாயிலேயிருந்து வருகின்ற Times of India வில் கட்டம் போட்டு எழுதியிருக்கிறார்களாம். அவர்கள் எல்லாம் ஃபோன் போட்டு என்னைக் கேட்டார்கள். உடனே நான் 'எனக்குத் தெரியாதய்யா, முதலமைச்சருக்குத் தான் அது தெரியும்' என்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சீனியர் மெம்பர்' யார் என்று விசாரித்த போது, திரு. ரமணி அவர்களுக்கு 72 வயது என்று சொன்னார்கள். அம்மையார் அவர்களுடைய வயதை நான் அவ்வளவாக அப்போது கணக்கிடவில்லை. தவறுக்கு வருந்துகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வயது குறித்ததல்ல. எனக்கே 56 வயது முடிந்துவிட்டது. ஆனால் 'Senior Member should be honoured' அதுதான். அதுபற்றி பரவாயில்லை. இருந்தாலும் அது உங்களைத்தான் சாரும்.

இப்போது நான் இந்த பில்-வில் பேசுகிறேன். உண்மையிலேயே இது வரவேற்கக்கூடிய ஒன்று. 1920-ம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்ட் பிரபு

1989 பிப்ரவரி 20]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதைப் பற்றி நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தால் நான் தான் மூத்தவன். நீங்கள் வேறு ஏதாவது பார்த்துவேண்டுமானால் கொடுங்கள். (சிரிப்பு) ஆனால் வயது பார்த்துக் கொடுத்திருக்கவேண்டுமென்றால் எனக்குத்தான் கொடுத்திருக்கவேண்டும். வேறு ஏதாவது 'ஆல்டர்னேடிவ்' சொல்லுங்கள்.

(பிற்பகல் 12-40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்குச் சொல்கிறேன். வயது பற்றி இல்லை. 1920 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்ட் பிரபு பம்பாய், கல்கத்தா, சென்னை, இந்த மூன்று இடங்களிலேயும் 'Council of States' என்று ஒரே மாதிரியாக ஆரம்பித்தார்கள். ஒரே மாதிரியாக ஆரம்பித்த பிறகு, வங்காளத்திலும் பம்பாயிலும் சுதந்திர தீர்மானத்திற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்காத காரணத்தால் இரண்டும் கலைக்கப்பட்டு, சென்னை மாகாணத்திலே மட்டும் கலைக்கப்படாமல் இருந்தது. இங்கேயிருந்த மேலவை கலைக்கப்பட்டபோது நடைபெற்ற விவாதத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் பேசியபோது கலைக்க வேண்டாம், நியாயம் அல்ல என்றுதான் பேசினார்கள். அது தான் எங்கள் நிலையுங்கூட. இருந்தாலும் நாங்கள் அன்றைக்கு நடைபெற்ற ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அன்றைக்கு இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தேர்தல் உறவு கொண்டிருந்த காரணத்தால் அன்றைக்கு ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாமல் வெளியே சென்றோம். இந்த சபை நிச்சயமாக இருக்க வேண்டும். காரணம் இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர்களாக வருகிறார்கள். பல கட்சியைச் சார்ந்தவர்கள் வருகிறார்கள். அப்படி இருக்கும்போது தேர்தல் சமயத்தில் யாருக்கும் மெஜாரிட்டி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கும் நிலையில்—1937 ஆம் ஆண்டில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது—அந்தச் சூழ்நிலையில் இந்த மேலவை அவசியம் தேவை. அறிவு உலக மேதை ராஜாஜி அவர்கள் அன்றைக்கு மேலவையிலே உறுப்பினராக வந்து தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஆட்சியை நடத்திய சரித்திரத்தை நாமெல்லாம் அறிவோம். அதுமட்டுமல்லாமல், எங்களுடைய மக்கள் தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு சமயத்தில் சபையிலே ஒரு நல்ல நபர் தேவை என்று கருதிய நோக்கில்

இன்றைக்கு ஜனாதிபதியாக இருக்கின்ற திரு. வெங்கடராமன் அவர்களை மேலவையிலே உறுப்பினராக நியமித்து, அதன்மூலம் அவரைத் தொழில் அமைச்சராக ஆக்கி, அநேகமாக நாள்தோறும் ஒரு தொழிற்சாலை என்கிற வகையில் தொழிற்சாலைகளை அவர் தமிழ்நாட்டில் ஆரம்பித்து இந்தியாவிலே தொழிலில் தமிழ்நாடு 3-ஆவது இடம் என்கிற ஓர் நிலையை அவர்களும் அன்றையதினம் ஏற்படுத்தினார்கள். எனவே, இன்றையதினம் இங்கே மேலவையை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நாங்கள் எல்லாம் நிச்சயமாக வரவேற்கிறோம். பல தலைவர்கள், சமூக சேவகிகள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, சிவப்வாலா ஜாதவ் மற்றும் கல்வியாளர்கள், அறிவாளர்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல டாக்டர் லட்சுமணசாமி முதலியார், டாக்டர் இராமசாமி முதலியார், டாக்டர் நாராயணசாமி பிள்ளை, ஓ. பி. ராமசாமி ரெட்டியார், போன்றவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்.

அப்படி என்றால் இங்கே இடம் பெற்றிருக்கின்ற நமக்கு அறிவு இல்லையா, பெரியவர்கள் இங்கே இல்லையா, மேலவை மூலம் மட்டும்தான் அவர்கள் வர வேண்டுமா என்று இங்கே ஒரு சிலர் கேட்பது நியாயம் அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வங்காளத்தில் ஏன் கலைக்கப்பட்டது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் 1982 அல்லது 1983 என்று கருதுகிறேன், நாங்கள் எஸ்டிமேட் கமிட்டியில் கல்கத்தா போயிருந்தோம். அங்கேயுள்ள மெம்பர்களிடம் இதுகுறித்துப் பேசியபோது, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களைக் கேட்டபோது, அங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கே மெஜாரிட்டி இல்லாத காரணத்தால் மேலவை கலைக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆகவே, இங்கே இந்த மேலவை தொடர்ந்து இருக்க வேண்டிய ஒன்று, கலைக்க வேண்டிய ஒன்று அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அன்றைக்கு நாங்கள் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலின்போது எங்கள் கட்சியின் கொள்கையாக மேலவையைக் கலைப்போம் என்று சொன்னோம், அதன்படி

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அதனைச் செயல்படுத்தி மேலவையைக் கலைத்தோமே தவிர உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது மாதிரி மெஜாரிட்டி இல்லை என்கிற காரணத்தால் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைச் சொல்லவில்லை. 32 ஆண்டுகளாக நான் தவறான எந்தத் தகவலையும் அவையில் சொன்னதில்லை. நாங்கள் கல்கத்தா போயிருந்தபோது அங்கே யுள்ளவர்கள் காரணம் இது என்று சொன்னார்கள், அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டேன். எங்கள் இளைய பாரதத்தின் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும், எங்கள் ஒப்பற்ற தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் தேர்தலின்போது எங்களுக்கு தமிழக மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பை அளித்தால் நாங்கள் மீண்டும் மேலவையை அமைப்போம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். அதைத்தான் இங்கே ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக் கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இதனை முழுமையாக ஆதரிக்கிறோம். எனவே, இந்த சபை இங்கே இருப்பது எவ்வளவு நல்லது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே செலவு பற்றி சிலர் சொன்னார்கள். ஆனால் 50 லட்சம் ரூபாய் என்பது ஒரு பெரிய செலவு அல்ல. பல கோடிக்கணக்கில் செலவு செய்யும் இடத்தில் இருக்கின்ற ஓர் அரசுக்கு இது ஒரு பெரிய செலவு அல்ல. கல்வி ஸ்தாபன பிரதிநிதிகள், ஸ்தல ஸ்தாபன பிரதிநிதிகள், பட்டதாரிகள் பிரதிநிதிகள், பெண்கள் பிரதிநிதிகள், சமூக சேவகர் பிரதிநிதிகள் மற்றும் அறிவுலக மேதைகள் எல்லாம் மேலவையில் இடம் பெறுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஓர் அமைப்புக்கு எல்லோரும் கண்டிப்பாக ஆதரவாக இருக்க வேண்டும், வரவேற்க வேண்டும். காரணம் இதிலே இடம்பெறுகிறவர்களுடைய அறிவு எல்லோருக்கும் பயன் படும். இதனை வேறுவிதமாகப் பேசுவதோ, கொண்டு போவதோ இந்த நாட்டுக்கும், சமூகத்திற்கும் நல்லதல்ல என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பில்லை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். இங்கே ஆளும் கட்சி மெஜாரிட்டியாக இருக்கிற காரணத்தால் இங்கேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்ற 21 பேரில் மெஜாரிட்டி பேர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள். மற்ற கட்சிகளைப் பொறுத்த வரையிலும் அவரவர்கள் கட்சிக்கு இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மேலவையில் இடம் பெறுவார்கள். ஆகவே, மற்ற கட்சிக்காரர்கள், ஆளும்கட்சி சார்பில் அதிக உறுப்பினர்கள் மேலவையிலே இடம் பெற்றுவிடுவார்களே என்கிற எண்ணத்தில் இதனை எதிர்க்கவும், கவலைப்படவும் வேண்டாம் என்று சொல்லி, இத்தீர்மானத்தை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவசரம் அவசரமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாட்டிலே எத்தனையோ வேலைகள் பாக்கி இருக்க, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்காக பல வாக்குறுதிகளை அள்ளித் தெளித்த நேரத்திலே, அதிலேயுள்ள வாக்குறுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், இன்றைக்குத் தன்னுடைய கட்சியைக் காப்பாற்றுவதற்கும், தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் பதவி கொடுப்பதற்கும் இவ்வளவு அவசரமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் பகிரங்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மேலவை இல்லை என்று சொன்னால் இந்த அரசாங்கமே நடக்காமல் நின்று போகும், இங்கே போடும் தீர்மானங்கள் அங்கே போய் நிறைவேறவில்லை என்றால் நாட்டிலே எந்தவிதச் செயல்பாடும் இல்லாமல் போய்விடும் என்று அச்சப்படும் அளவுக்கு மிக வேகமாக இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆளும் பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள், உங்கள் கட்சியில் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டிகள் காரணமாகத் தான் மேலவையைக் கொண்டு வருகிறீர்கள். எப்படியாவது அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு,

1989 பிப்ரவரி 20 திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

இன்றைக்கு வேண்டாத காரியத்தில் இறங்கியிருக்கிறீர்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால், ஏதோ உங்களுக்காக புரட்சித் தலைவர் இந்த மேலவையைக் கலைத்துவிட்டார் என்ற தவறான எண்ணத்தையும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

அதே பாணியில் நான் சொல்ல வேண்டுமானால், புரட்சித் தலைவர் அவர்கள் எந்தெந்தக் காரியங்களைச் செய்துவிட்டுப் போனார்களோ அதை மாற்றுவதுதான் எங்களுடைய வேலை என்ற உணர்வோடு நீங்கள் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். முக்கியமாக இது வேண்டாத காரியம். இந்த மேலவையிலே போய்த்தான் அறிவாளிகள் உட்கார்ந்து ஆலோசனை சொல்ல வேண்டிய அவசியமில்லை. இங்கே பட்டதாரிகள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். இங்கே 1967-லிருந்து 1980 வரை 64 பட்டதாரிகள் வந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே 1980 முதல் 1984 வரை 83 பட்டதாரிகள் வந்திருக்கிறார்கள். 1984-லே இருந்த அரசாங்கம் முடியும்வரையில் பட்டதாரிகள் 91 பேர் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே படித்தவர்கள் வர வேண்டும் அல்லது வயதானவர்கள் தான் வர வேண்டுமென்று சொன்னால், தேர்தலிலே நின்று இங்கே வரமுடியும். இன்றைக்கு நாட்டு மக்களுடைய உணர்வுகள், ஏழை எளியவர்களைப் பற்றி சிந்திப்பவர்கள்தான் அரசாங்கத்திற்கு வர வேண்டுமென்று இருக்கிறது. அந்த உணர்வோடுதான் உங்களையும் எங்களையும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே ஏழைகளைப்பற்றிச் சிந்திப்பவர்கள்தான் வர வேண்டுமேயொழிய வேறல்ல. வயதானவர்கள்தான் வேண்டுமென்றால், அவர்களிடம் தனியாக நீங்கள் ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும். எனவே அரசாங்கத்திற்கு அவசியமில்லாத ஒரு செலவை நீங்கள் உண்டாக்கப் போகிறீர்கள்.

அடுத்து மேலவைக்கு ஆசிரியர்கள் சார்பாகவும், ஊராட்சி மன்றங்கள் சார்பாகவும் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் சொல்லிக்கொள்வதெல்லாம், நாட்டிலே ஆசிரியர்களுக்கும், இன்னும் சொல்ல வேண்டுமானால் ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் குறைகள் இருக்கிறதா? இங்கே சட்டமன்றத்திலே இருந்த 21 பேரைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். நமக்கு மட்டும்தான் குறை இருக்கிறதா? அதை மட்டும்தான் மேலவையில் விவாதிக்கப் போகிறார்களா? நாட்

டிலே இன்றைக்கு வாய் பேசாமல் இருக்கிற விவசாயிகளுக்கு அங்கே பிரதிநிதித்துவம் இல்லை. அங்கே வியாபாரிகளுக்கு இல்லை. இன்னும் என்.ஜி.ஓ.-வினருக்கு இல்லை. இந்த நிலையில், ஒரு சிலருக்கு மட்டும் பதவி கொடுத்து, அலங்காரம் செய்யும் மேலவை அவசியமில்லை என்பதை இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியல் அமைப்பிலே இதைக் கொண்டுவரும் நோக்கிலே— இந்தியா விடுதலை பெற்ற பிறகு, அரசியல் அமைப்புச் சட்டம் அமைக்க வேண்டுமென்று சொல்லி, மரியாதைக்குரிய டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தலைமையில் குழு உண்டாக்கப் பட்டபோது, மாறுபட்ட கருத்துக்கள் வந்திருக்கின்றன. ஒரு சில அங்கத்தினர்கள் இது வேண்டாமென்று சொல்லியிருக்கிறார் கள். ஒருசிலர் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலேயே பார்ப்போமென்றால் எங்களோடு கூட்டாக இருந்த திரு. விஜயராகவன் அவர்கள் வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். உங்கள் கூட்டணியில் இருந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வேண்டாமென்று சொல்லியிருக் கிறார்கள். போன தடவை ஆதரித்துப் பேசிய காங்கிரஸ் இயக் கத்தைச் சேர்ந்தவர்கள் 2 வருட காலத்திலே தங்களுடைய

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : On a point of order. சென்ற முறை நிச்சயமாக காங்கிரஸ் கட்சி மேலவை ஒழிப்பை ஆதரிக்கவில்லை என்று அன்று பேசிய திரு. சித்தன் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டு, இந்தத் தீர்மானத்திலே எங்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை என்பதைச் சொல்லியிருக் கிறார்கள். நாங்கள் அன்று ஆதரிக்கவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர் களே இங்கே பேசிய திருமதி பொன்னம்மாள் அவர்களே சொன் னார்கள். நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமையாக இருந்தோம், ஆகவேதான் நாங்கள் அதை ஆதரித் தோம் என்று சொன்னார்கள்.

1989 பிப்ரவரி 20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்கள் இந்த மேலவையைக் கலைக்கக் கூடாது என்று கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் நாங்கள் ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளவில்லையென்பதற்காகச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

(பிற்பகல் 12-50)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் பேசிவிட்டு வெளிநடப்புச் செய்தார்களேயொழிய— இங்கே புத்தகமே இருக்கிறது—பேசியிருக்கிறார்கள். நான் அதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு இங்கே இருக்கிறவர்கள் மத்தியிலேயே எந்தெந்தக் கட்சிகளோ கூட்டாக இருந்தாலும்கூட அந்த அவை வேண்டுமா, வேண்டாமா என்ற உணர்வுகள்கூட இருவாறாக இருக்கின்றன. ஆகவே இதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல்—இங்கே மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்லியதுபோல—இது இப்போதைக்கு அவசியமில்லை. இது வேண்டிய ஒரு காலம் வரும் என்று சொன்னார்கள்; அன்றைக்கு அதைச் சீர்தூக்கிப் பார்க்கலாமேயொழிய, இன்றைக்கு அதிலே நாம் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவிற்கும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் டில்லியிலே, மேற்கு வங்காள அரசினுடைய மேலவைக் கலைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி 1969-ஆம் ஆண்டிலே வாதித்திருக்கிறார்கள். வாதிட்டதோடு மட்டுமல்லாமல், அது எங்கள் இயக்கத்தினுடைய கொள்கை என்பதையும் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அன்றைக்கு மேலவை வேண்டாமென்று—ஆந்திராவாக இருந்தாலும் சரி; மேற்கு வங்காள அரசினுடைய மேலவையாக இருந்தாலும் சரி—மேலவைக் கலைப்பை ஏற்க வேண்டுமென்று டில்லியிலே வாதாடியவர்கள் இன்றைக்கு ஏன் தமிழகத்திலே மேலவை வேண்டுமென்று கேட்கிறார்கள் ? எம் ஜி. ஆர். அவர்கள் மூடியிருப்பதால் அதைத் திறக்க வேண்டுமென்ற முயற்சியை நீங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம், நீங்கள் எம்.ஜி.ஆர். செய்யாத நல்ல

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்][1989 பிப்ரவரி 20

நான், மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், நீங்கள் எம்.ஜி.ஆர். செயயாத நல்ல காரியங்களைச் செய்வீர்கள் என்று சொன்னால், நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்த மேலவை அவசியம் இருக்க வேண்டுமென்று சொல்லி, வேறு எங்குமே சொல்லவில்லை. இந்தியாவிலே இருக்கிற 22 மாநிலங்களில் நான்கு மாநிலங்களில்தான் மேலவை இருக்கின்றதேயொழிய, வேறு எந்த இடத்திலும் மேலவை இல்லையென்பதை நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போன தடவை இங்கே இந்தத் தீர்மானம் வந்த நேரத்தில் மேலவை வேண்டுமென்று பேராசிரியர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள். இங்கே சூடான விவாதங்கள் வரும்போது அங்கே போய் சூட்டைக் குறைக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், ஒரு காலத்தில் அறிஞர்கள் என்று சொல்லி, பெரியவர்கள் என்று சொல்லி, வயதானவர்கள் எல்லாம் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். இன்றைக்கு நமக்குத் தெரிந்தவரையில் மேலவையில் உறுப்பினர்களாக வருகிறவர்கள் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் இயக்கமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியங்களின் பிரதிநிதிகளாக இருந்தாலும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாகத்தான் வருகிறார்கள். அரசியலுக்கு அப்பாற்பட்ட பெரிய மனிதர்கள் அங்கே வருவதில்லை. ஆகவே, இங்கே எந்த உணர்வு இருக்கிறதோ அந்த உணர்வுதான் அங்கேயும் இருக்கிறது. கடந்த 10 ஆண்டுக் காலத்தில் அங்கே பார்த்த நேரத்தில், இங்கே எதிர்க் கட்சியாக இருக்கின்றவர்கள் எந்த உணர்வோடு பேசியிருக்கிறார்களோ, அதே உணர்வைத்தான் அங்கேயும் பிரதிபலித்திருக்கிறார்கள். அங்கே ஆலோசனைகள் சொல்லக்கூடிய அளவுக்கு வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. அரசியல் கட்சிகளின் மறுபிம்பமாகத்தான் அந்த மேலவை இருக்கப் போகிறது. ஒரு அறிஞராக அல்லது அனுபவப்பட்டவராக இருந்து சொல்லக்கூடிய அந்த உணர்வு நமக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆகவே, நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வதெல்லாம், நிச்சயமாக நமக்கு மேலவை தேவையில்லை என்பதுதான்.

1989 பிப்ரவரி 20] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ ஒரு உள் காரணத்திற்காக, மாண்புமிகு இன்றைய முதல் அமைச்சரவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக வந்து விடுவார்களோ என்ற அச்சத்தினால் எம்.ஜி.ஆர். அவர்கள் கலைத்தார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1977-லே நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 15 பேர் வந்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 5 பேர்தான் வந்திருக்கிறார்கள். அப்போது கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கிறார்கள். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையில் இது வேண்டாமென்று முடிவு செய்த காலத்தில், அந்த முடிவை அரசாங்கத்தினுடைய மசோதாவாகக் கொண்டுவந்து, சட்டமன்றத்திலே நிறைவேற்றி இருக்கிறார்களே தவிர, இதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது. எனவே, வீண் செலவு ஏற்படும் மேலவை வேண்டாமென்று சொல்லி, அரசாங்கத்திலே உள்ள கட்சியிடமிருந்து நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது எல்லாம்—உங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியுள்ள வேறு காரியங்களில் நீங்கள் எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை மட்டும் ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்யுங்கள். இந்த வீண் செலவு வேண்டாமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையை உருவாக்க வேண்டும்: அதற்கேற்ப நாடாளுமன்றத்திலே திருத்தம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிந்ததன் அடிப்படையில், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாகத் திட்டவட்டமாக இங்கே தெரிவித்தார்கள். அப்போது, எனக்கு மேலவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள், முன்பு இதை குறித்துப் பேசிய பேச்சும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 20

மேலவையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் சுப்பராயன் அவர்கள் பேசிய பேச்சும், நினைவிலே நிழலாடின. அதை மாத்திரம் இங்கே, குறிப்புக்காகப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

மேலவையைக் கலைக்க வேண்டும் என்கிற ஒரு கருத்துரு தோன்றியபோது, மேலவையிலே அன்றைக்கு உறுப்பினராக இருந்த அருமை நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் இத்தகைய வாசகங்களை அங்கே மொழிந்தார்கள்.

"படித்த பட்டதாரிகள், அறிவாளிகள் ஆகியோருடைய அறிவு, இந்த அவைக்குத் தேவை. அவர்களின் அறிவு, தமிழ் நாட்டினுடைய நிர்வாகத்திற்குத் தேவை. இங்கே அரசை நடத்துவதற்குத் தேவை என்பதால்தான், அறிவுத்துறையில் உள்ளவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இங்கே பிரதிநிதித்துவம் தரப்பட்டிருக்கின்றது. அதைப்போலவே, உள்ளாட்சித் துறையில் உள்ளவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறிவிட்டு, அவர்கள் மேலும் பேசும்போது சொன்னார்கள். "இன்றைக்கு இந்த மேலவை கலைக்கப்பட்டால், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக இங்கே வரக்கூடியவர்களுக்கு இனி அந்த வாய்ப்பே இல்லாமல் போய்விடும். பஞ்சாயத்துக்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற அமைப்புகளின் ஒட்டுமொத்தமான நலன்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த முறையே இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால். இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இது ஜன நாயகத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்படுகிறது. ஆகவே அறிவுத் துறையில் உள்ளவர்கள், கிராமப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நலன்களைக் காக்க விரும்புகிறவர்கள் இங்கே அங்கம் பெற வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் தான் நாமினேஷன்கூட நடந்தது. தமிழ்நாட்டிலுள்ள முக்கிய மான சமூக நல ஊழியர்கள், கலைத் துறையைச் சார்ந்தவர்கள், மற்ற அறிவுத் துறையைச் சார்ந்தவர்கள், நிபுணர்கள் போன்ற வர்களை நியமிக்கலாம் என்று ஆளுநருக்கு அதிகாரம் இருக் கிறது. இவ்வாறு சமுதாயத்தின் முக்கியமான துறைகளைப்

1989 பிப்ரவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

பிரதிபலிக்கும் வகையிலே இந்த அமைப்பு முறை ஏற்பட்டிருக்கிறது" என்று கூறி, அன்றைக்கு மேலவைக் கலைப்புக்குத் தன எதிர்ப்புக் கருத்தை மேலவையிலே, நண்பர் திரு. மாணிக்கம் தெரிவித்தார்.

தீர்மானம் இங்கே அன்றைய முதலமைச்சரால் முன்மொழியப்பட்டு அன்றைய அவையின் முன்னவர் நாவலர் அவர்களால் கருத்துக்கள் கூறப்பட்டபோது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இங்கே உரையாற்றிய திரு. சுப்பராயன் அவர்கள், மிக வேகமாகப் பேசி, "ஆதனால்தான், நிச்சயமாக இந்தத் தீர்மானத்தை வரவேற்க முடியாது என்பதை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நிலை.

ஒவ்வொரு கட்சிக்கும் மேலவை குறித்த கொள்கைகள் உண்டு. இப்போது நாம் விவாதித்துக்கொண்டிருப்பது, தமிழ்நாட்டிலே மேலவை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றித்தான்.

எதிர்க் கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் இங்கே உரையாற்றியபோது, முதலமைச்சர் அவசர அவசரமாக அள்ளித் தெளித்த அலங்கோலமாக மேலவையை உருவாக்குகிற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டார். நான் அவசரமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேனா அல்லது முன்னாள் முதலமைச்சர், என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மேலவையைக் கலைப்பதற்கான தீர்மானத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்தாரா என்பதை, ஆதாரங்கள் மெய்ப்பிக்கக் காத்திருக்கின்றன. நான் அவைகளை இங்கே எடுத்துக் காட்டுவது கடமை என்று கருதுகிறேன்.

மேலவையினுடைய சிறப்பியல்புகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசிய திருமதி பொன்னம்மாள் அவர்களும் மற்றும் நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், நண்பர் விஜயராகவன் அவர்களும், திரு. இராமநாதன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும், திரு. வல்லரசு அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 20

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த அவையிலே ஆர். கே. சண்முகம் செட்டியார், சத்தியமூர்த்தி, முத்துலட்சுமி ரெட்டி, சர். சி. ஆர். ரெட்டி, டாக்டர் ஏ. எல். முதலியார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, இன்றைய குடியரசுத் தலைவர் ஆர். வி., பாலசுப்பிரமணிய அய்யர், வி. திருவேணமூர்த்தி, ராஜா அய்யர், ஏ. ஆர். தாமோதரன், ஜி. ஆர். தாமோதரன் போன்றவர்கள் எல்லாம் இருந்து சிறப்பித்து இருக்கிறார்கள். அந்த அவையைக் கலைப்பது என்ற தீர்மானத்தை 14—5—1986-ம் நாளன்று இந்தப் பேரவையில் அன்றைய ஆளும் கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க. சார்பில் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். எப்படி இது அவசரமாக நடைபெற்றது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கலைக்கும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுதான் நான் சொல்ல வந்த கருத்தாகும்.

எந்தெந்தப் பொருள்கள் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டும் என்பதற்கு தமிழ்நாடு அரசின்

'Business Rules and Secretariat Instructions'

என்கிற நூலில் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த நூலின் இரண்டாவது அட்டவணையில்,

'Cases to be brought before the Council'

என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பட்டியலைப் பார்த்தால், அதிலே இரண்டாவதாக இடம் பெற்றிருக்கிற கருத்து

'Proposals to dissolve the Legislature of the State'

என்று மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு மாநில சட்டமன்ற அவையைக் கலைப்பது என்ற கருத்து கவுன்சில் முன்னால் விவாதிக்கப்பட வேண்டுமென்று அந்த விதி கூறுகிறது. கவுன்சில்

1989 பிப்ரவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

என்றால் வேறு பொருள் கொள்ளக்கூடாது. கவுன்சில் என்பதற்கும் அதே புத்தகத்தில் முதல் பக்கத்தில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. என்ன விளக்கம் என்றால்,

'Council means the Council of Ministers constituted under Article 163'

அதாவது கவுன்சில் என்றால், 163-வது உறுப்பின்படி அமைக்கப்பட்ட அமைச்சரவை என்று பொருள்படும் என்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதிலேயிருந்து என்ன தெளிவாகத் தெரிகிறது என்றால், ஒரு அவையைக் கலைப்பது என்றால் அது அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, அதே இரண்டாவது அட்டவணையில், அதாவது அமைசசரவைக் கூட்டத்தில் எந்தெந்தப் பொருள் குறித்து விவாதிக்கபட வேண்டும் என்ற பட்டியலில் 16-வது பிரிவாக குறிப்பிடப்பட்டிருப்பது என்னவென்றால்,

'Proposals involving any important change of policy or practice'

என்று உளளது. எந்தப் பொருளைப் பற்றியும் ஒரு கொள்கை மாற்றம் இருக்குமானால், அதைப்பற்றி அமைச்சரவையில் விவாதிக்க வேண்டும்.

அதிலே 15 (1) பிரிவு என்ன சொல்கிறது என்றால்,

'The Chief Minister may direct any case referred to in the second schedule may instead of being brought up for discussion at a meeting of the Council be circulated to the Ministers for opinion'.

அதாவது, இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கோப்பு எதனையும் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிப்பதற்குப் பதிலாக, முதலமைச்சர், அமைச்சர்களின் கருத்தை அறிவதற்காக அந்தக் கோப்பை சுற்றோட்டத்திற்கு அனுப்பக் கட்டளையிடலாம். அது மாத்திரமல்ல. ஏற்கெனவே இருந்த கொள்கைகளுக்கோ அல்லது நடைமுறைகளிலிருந்து மாறுபடுவதான கருத்துக்கோ சம்பந்தப்பட்ட ஒரு கருத்து என்றால், அது அமைச்சரவையில் விவாதிக்கப்பட வேண்டுமென்று மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே மேலவைத் தலைப்புபற்றி முக்கியமாக அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை நாம் கோடிட்டு வைத்துக் கொண்டால், அமைச்சரவை கூடி

விவாதிக்கவில்லையென்றாலும் கூட என்ன செய்திருக்க வேண்டும் என்பதற்கு அதிலேயே வழி சொல்லப்பட்டிருக்கிறது. விதி 15-ன் 1-வது பிரிவும் 2-வது பிரிவும் என்ன சொல்கிறது என்றால்,—

'If it is decided to circulate any such case to the Ministers, copies of papers relating to the case which are circulated among the Ministers shall simultaneously be sent to the Governor. Where such a case is circulated in original to the Ministers, it should be circulated to the Governor also after all the Ministers have seen it.'

அதாவது, அத்தகைய பொருளுக்குரிய கோப்பு எதனையும் அமைச்சர்களுக்கு அனுப்ப முடிவு செய்தால், அவ்வாறு சுற்றனுப்பு செய்கிற அதே நேரத்தில் அந்தக் கோப்பிற்குரிய நகல்கள் ஆளுநருக்கும் அனுப்பப்பட வேண்டுமென்று இருக்கிறது. அமைச்சர்களுக்கு சுற்றோட்டமாக கோப்பு அனுப்பப்படுகிற நேரத்தில் அமைச்சர்கள் அனைவரும் பார்வையிட்ட பிறகு, அது ஆளுநருக்கு அனுப்பப்பட்டாக வேண்டும். இவ்வாறு தெளிவாக விதியிலே இருக்கிறது. ஆனால் என்ன நடந்திருக்கிறது தெரியுமா? முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலே மேலவைக் கலைப்பு என்பது விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி விவாதிக்கப்படவேயில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதிக்கப்படாவிட்டாலும் கூட அமைச்சர்கள் மத்தியிலே சர்குலேஷனுக்கு, சுற்றோட்டத்திற்கு கோப்பு அனுப்பப்பட்டு இருக்கவேண்டும். அதுவும் நடக்கவில்லை. மூன்றாவதாக, கோப்புகள் கவர்னருக்கு அனுப்பப்பட்டு இருக்கவேண்டும். அதுவும் நடக்கவில்லை. இப்படி எல்லாம் செய்யப்படாமல் மேலவை அவசர அவசரமாகக் கலைக்கப்பட்டது. இப்படி கோப்பு அனுப்பப்படாததற்கு என்ன காரணம் தெரியுமா? அந்தக் காரணத்தைப் புரிந்து கொள்ள, மேலவைக் கலைப்பு குறித்த ஒரு கோப்பே இப்போது கிடையாது. அப்படி ஒரு கோப்பே உருவாக்கப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு ஃபைலே உருவாக்கப்படவில்லை. அதுதான் வேடிக்கை. மேலவை குறித்து அரசாங்கத்திடத்திலே என்ன விவரம் என்ன ஃபைல் என்று தேடிப் பார்த்தால், 9—5—1986 அன்று நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு கடிதம் எழுதுகிறார். 9—5—1986—அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன்.

1989 பிப்ரவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

"Dear Thiru Rajiv Gandhi,

When I met you last in Delhi I mentioned about our ideas of abolishing the Second Chamber of the Tamil Nadu Legislature and you expressed your agreement. On that basis, we are taking follow-up action. I discussed this with Thiru O. Subramaniam, Leader of the Tamil Nadu Congress Legislature Party also. He indicated that the Congress Party would support the move provided suitable advice is received from you. May I, therefore, request you kindly to give suitable instructions immediately to him to the effect that the Members of the Tamil Nadu Congress Legislature Party should support the move. With kind regards.

Yours sincerely,
M. G. RAMACHANDRAN."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

என்று கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார். ஒரு கட்சித் தலைவர் இன்னொரு கட்சித் தலைவருக்கு எழுதவேண்டிய கடிதத்தை முதலமைச்சர் பிரதமருக்கு எழுதுகிறார். உங்களுடைய கட்சி ஆதரவைத் தர வேண்டும் என்று. நான் நம்முடைய மூப்பனாரைக் கேட்டுக் கொள்வதாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்கிற முறையில், காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனாருக்குக் கடிதம் எழுதியிருந்தால் அது பொருத்தம். அப்படிச் செய்யாமல், முதலமைச்சர், அரசாங்கச் சார்பில், பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார். உங்களுடைய கட்சித் தலைவர் சுப்பிரமணியம் அவர்களிடத்திலே சொல்லி, ஆதரவைத் தரச்சொல்லுங்கள், என்னிடத்திலே வாக்களித்தபடி, உங்களிடத்திலே பேசியபடி என்று ஒரு கடிதம் எழுதப்படுகிறது இதுதான் ஃபைலே, இதுதான் ஆரம்பம். இந்த ஃபைலை இங்கிருந்து சீப் மினிஸ்டர் அலுவலகத்திலேயிருந்து கையெழுத்திட்டு,

'approved by C.M.'

என்று கையெழுத்திடப்பட்டு இந்தக் கடிதம் டெல்லியிலே உள்ள Tamil Nadu House மூலமாக டெல்லிக்கு, பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி முதலமைச்சர் அவர்கள் 9—5—1986-லே கடிதம் எழுதிய அந்தநாளில், இந்த அவையில் அன்றைக்கும், இன்றைக்கும் சட்டமன்ற உறுப்பினராக இருந்த, இருக்கிற, ரகுமான்கான் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்புகிறார். என்ன கேள்வி என்றால்—அப்போதே ஒரு வதந்தி உலவ ஆரம்பித்திருக்கிறது, மேலவை கலைக்கப்படும் என்பது போன்ற வதந்தி—அதை வைத்து ரகுமான்கான் அவர்கள் ஒரு கேள்வி கேட்கிறார். சட்டமன்ற மேலவையைக் கலைக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு உண்டா என்று கேட்கிறார். அவை முன்னவர் நாவலர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கிறார். "இரு அவைகளும் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கருத்து, அவ்வப்போது ஏற்பட்டு, அவ்வப்போது போய்விடும் ஒன்றாக இதுவரை இருந்தது. இந்தியாவிலே உள்ள மாநிலங்களில் 6 மாநிலங்களைத் தவிர எந்த மாநிலத்திலும் சட்டமன்ற மேலவை இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் சட்டமன்ற மேலவையைக் கலைப்பதற்கான செயற் குறிப்பு எதுவும் திட்டவட்டமாக இல்லை. செயற்குறிப்பே இல்லை" என்று பதில் கூறினார். செயற்குறிப்பு இல்லாத நிலையில், பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதி ஆதரவு கேட்கிறார், அதே நாளில்தான் என்றைக்குக் கடிதம் எழுதப் படுகிறதோ, அதேநாளில் நாவலர் இந்தப் பதிலை அளிக்கிறார். அப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்படுமானால், இந்த அவைக்குத் தெரியாமல் எடுக்க முடியாது. ஆனால் இப்போது, இந்த நேரம் வரையில் சட்டமன்ற மேலவையைக் கலைக்க எந்தச் செயற் குறிப்பும் அரசிடம் இல்லை, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் கிடையாது என்று 9-ஆம் தேதி சொல்லப்படுகிறது. 14 ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இடைக்காலத்திலே 5 நாட்கள்தான். இப்படித்தான் கடைப்பிடிக்கப்படவேண்டிய விதிமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படாமல், கவர்னருடைய கையெழுத்துக்குக்கூடச் செல்லவில்லை; தீர்மானம் நிறைவேறிய பிறகும்கூட விசித்திரமான வேடிக்கையான வேதனையான நிலை என்னவென்றால், தீர்மானம் நிறைவேறிய பிறகு, அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

பாராளுமன்றத்திலே சட்டமாக ஆகவேண்டும் என்பதற்காக அனுப்பி வைக்கிறார்கள். அப்படி அனுப்பிவைக்கப்படுகிற நேரத்தில், இதை அனுப்பி வைப்பதைப் பற்றி குறிப்பு எழுதும் போது, ஆளுநருக்கு கோப்பை பணிந்து அனுப்புவது என்பதைக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 20

குறித்து, ஒரு சுற்றோட்ட முடிவு, இது கவர்னருக்கு அனுப்பப் படவேண்டுமா, வேண்டாமா என்ற முடிவு. இதில் எல்லா அதிகாரிகளும் கையெழுத்து இடுகிறார்கள், அடுத்து அவை முன்னவர் நாவலர் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களுடைய பார்வைக்கும் இந்தக் கோப்பை அனுப்பி வைக்கலாம், 'நெடுஞ்செழியன்' என்று கையெழுத்து இடுகிறார்கள். அதை ஆதரித்து சட்ட அமைச்சர் பொன்னையன் அவர்களும், 20—5—1986-ல் கையெழுத்து இடுகிறார், ஆளுநருக்கு அனுப்பி வைக்கலாம் என்று. அதற்குக் கீழே முதலமைச்சர் என்றும், ஆளுநர் என்றும் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆளுநர் என்பதை நாவலர் அவர்களே அவருடைய கைப்பட சிகப்பு இங்கால் எழுதியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் மாத்திரம் கையெழுத்து போட்டுவிட்டு, ஆளுநர் என்று எழுதப் பட்ட இடத்தை அடித்து விடுகிறார். கவர்னரை ஒழிப்பதிலே அவருக்கு இருந்த ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் கவர்னர் இருக்கிற வரையிலும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் எப்படி ஒழிக்கப்பட்டுவிட்டன என்பதைச் சுட்டிக்காட்டத்தான் சொல்கிறேன். அது மாத்திரம் அல்ல. அதே 'ஃபைலில்' அவர் எழுதியிலே ஆளுநருக்கு அனுப்பப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் எழுதவில்லை. பின்னர் அவ்வாறு யார் எழுதுகிறார்கள்? முதல மைச்சர் கையெழுத்துப் போடுகிறார் ஆளுநர் என்று எழுதப் பட்ட அந்தச் சொல்லை அடித்து விடுகிறார். அதற்கு பிறகு "The intention of Chief Minister is that this need not be circultaed to the Governor" என்று Deputy Secretary to the Chief Minister

இந்த ''ஃபைலிலே' குறிப்பு எழுதுகிறார். எனவே அவசரப்பட்ட வர்கள் அவர்களா? அல்லது இவ்வளவு ஆற அமர கவர்னருக்கு ஃபைலை அனுப்பி, மந்திரிசபைக் கூட்டத்தில் சொல்லி, இதை பொல்லாம்லிட தேர்தல் அறிக்கையிலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மேலவையை மீண்டும் கொண்டுவருவோம் என்று வெளி யிட்டு, காங்கிரஸ் கட்சியும், அதே அறிக்கையை வெளியிட்டதால், நிச்சயமாக இந்தத் தீர்மானம் நிறைவேறும் எனும் நம்பிக்கை யோடு நாங்கள் மந்திரிசபைக் கூட்டத்தில் '(Cabinet Meeting)'

1989 பிப்ரவரி 20] [திரு. மு. கருணாநிதி]

ஒரு முடிவை எடுத்து, அந்த முடிவு 'ஃபைலாக' மாறி, அந்த 'ஃபைலிலே' நான் கையெழுத்து இட்டு, கவர்னரும் கையெழுத்து இட்டு, பிறகு தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. ஆனால் அன்றைக்கு ஒரு கடிதத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவந்து அவசர அவசரமாக நிறைவேற்றப் பட்டது என்பதற்காகத்தான் இத்தனை ஆதாரங்களையும் நான் சொன்னேன். இதிலே உள்நோக்கம் இருந்ததா, இல்லையா என்ற ஆராய்ச்சிக்கு எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. அந்த அவையிலே நான் பேசியதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இராமநாதன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். நான் அந்த அவையிலே பேசினேன். நான் இருப்பதால்தான் இப்படி ஒரு முடிவு எடுக்கப்படுகிறது என்றால், நான் ராஜிநாமா செய்வதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன்; சீர்த்தி வாய்ந்த, தொன்மை வாய்ந்த, ஏறத்தாழ 65 ஆண்டுக்கு மேற்பட்ட இந்த புராதனமான அவையை எனக்காக கலைக்க வேண்டாம் என்று கூட நான் அன்றைக்குச் சொன்னேன். இந்தக் கருத்தை நான் வெளியிட்டது மாத்திரமல்ல. நாட்டிலே உள்ள எல்லா ஏடுகளும் அன்றைக்கு இந்தக் கருத்தை வெளியிட்டன. எனவே நான் அதை விவாதப் பொருளாக ஆக்க விரும்பவில்லை.

இன்றைக்கு இன்னொரு கருத்தை நம்முடைய அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். நம்முடைய கே. கே. எஸ். எஸ். ஆர் அவர்களும் சொன்னார்கள். வீண் செலவு என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அழகர்சாமி அவர்கள் கே. கே. எஸ். எஸ். ஆர். அளவிற்குச் செல்லவில்லை. அவர் செலவோடு நிறுத்திவிட்டார். ஆனால் கே. கே. எஸ். எஸ். ஆர். பதவி இல்லாதவர்களுக்கு எல்லாம் பதவி கொடுக்க என்று சொன்னார். இரண்டிற்கும் நான் பதில் அளிக்க விரும்புகிறேன். வீண் செலவு ஒன்றும் அதிகமில்லை. மேலவையை மீண்டும் கொண்டு வருவதால் மேலவைக்கு ஆகக்கூடிய செலவு ஏற்கெனவே ஆன செலவைப் பார்த்தால், 1985-86-ல் ரூ. 13.67.000. மேலவைச் செயலகத்தினுடைய செலவு ரூ. 18.80.000. இவ்வளவு தான். மேலவை கலைக்கப்பட்டாலும் கூட செயலகம் அப்படியேதான் இருக்கும். மேலவை போய் விட்டது என்று செயலகத்தில் உள்ளவர்களை எல்லாம் அனுப்பி விட முடியாது. மேலவை உறுப்பினர்கள்தான் வெளிச்செல்வார்கள். அவர்களை அனுப்பிவிடலாம். ஆனால் செயலகத்தில் உள்ளவர்களை நிச்சயமாக அனுப்ப இயலாது. அவர்கள் அப்படியேதான் இருப்பார்கள். ஆக ரூ. 18 இலட்சம் என்றைக்கும் சர்க்கார்

தர வேண்டிய செலவு தான். 1986-87-ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தாலும்கூட, மேலவைத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஆகும் செலவு ரூ. 15,23,000. நம்முடைய விஜயராகவன் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல 63 பேர் உறுப்பினர்களாக வந்தால், இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செலவு ஆகலாம். அப்படியே ஆனாலும்கூட, ரூ 30 லட்சம், ரூ. 40 இலட்சத்தை அது தாண்டாது. செயலகத்தினுடைய செலவு ரூ. 18, ரூ. 20 இலட்சமாகத்தான் இருக்கும். இந்தச் செலவோடு பதவி இல்லாதவர்களுக்கு எல்லாம் பதவி கொடுக்க தி.மு.க. விரும்புகிறது என்று சொன்னாரே நண்பர் கே. கே. எஸ். எஸ். ஆர். அவருக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அறிவித்திருக்கிறோம். வாரியங்களில் ஒன்றிரண்டைத் தவிர, மிக மிக அதிகமாக மக்களோடு தொடர்பு உடைய ஒன்றிரண்டு வாரியங்களைத் தவிர, வேறு எந்த வாரியத்திற்கும் நாங்கள் அதிகாரப்பூர்வமற்ற கட்சிக்காரர்களைத் தலைவர்களாகப் போட மாட்டோம் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தது என்ன? 'அக்ரோ எஞ்சினீயரிங் சர்வீஸ்' அர். முக்கையன் அவர்களுக்கு, —ஆண்டுச் செலவைச் சொல்கிறேன்—ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1,04,565 செலவு. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் தலைவர் கே.எஸ். ராஜேந்திரன்—ஒரு ஆண்டுச் செலவு 1 லட்சத்து 35 ஆயிரத்து 025 ரூபாய். விவசாய உயர்மட்டக் குழுத் தலைவர் முனுஆதி—ஒரு ஆண்டுச் செலவு—ரொம்பக் குறைச்சல்—5,52 243 ரூபாய். ஷுகர்கேன் பார்ம்ஸ் கார்ப்பரேஷன் தலைவர்—தென் ரோவன்—27,035 ரூபாய் ஒரு ஆண்டுச் செலவு. வீட்டு வசதி வாரியம்—திருப்பூர் மணிமாறன், 3,05 955 ரூபாய் ஒரு ஆண்டுச் செலவு—குடிசை மாற்று வாரியத் தலைவர்—அங்கமுத்து—ஒரு ஆண்டுச் செலவு 1,35,385 ரூபாய், டிட்கோ—தலைவர் சுலோசனா சம்பத் ரூ. 2,06,812. தமிழ்நாடு சிமெண்ட் கழகத்திற்கும் அவர்தான் தலைவர். அதற்குச் செலவு 47.344 ரூபாய். அடுத்து ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியம் அவர்களுக்கு வீடு கட்டிக்கப்படவில்லை. ஆனால் ஒரு வாரியம் உண்டு. அதற்கு மாசிலாமணி என்பவர் தலைவர்—செலவு 1,6,385 ரூபாய். சென்னை மெட்ரோ வாட்டர்—ஜேப்பியார் தலைவர்—செலவு 1 00.098 ரூபாய் வருடத்திற்கு. கோழி வளர்ச்சிக் கழகம், அதற்குத் தலைவர் வெள்ளைச்சாமி, அதற்குச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 1.75.112 ரூபாய் குடிநீர் வாரியம், தலைவர் உகம்சந்த், அதற்குச் செலவு 35.674 ரூபாய். திட்டக் குழு, துணைத் தலைவர் எம். முத்துசாமி செலவு 2,31,076

ரூபாய். கோவாப்டெக்ஸ், தலைவர் அனகாபுத்தூர் ராமலிங்கம். அதற்கு ஆண்டுச் செலவு 2 லட்சம் ரூபாய். மாநில வேளாண்மை விற்பனை வாரியம். அதற்குத் தலைவர் தேவகி பாண்டியன், அதற்கு ஆண்டுச் செலவு 1,21,000 ரூபாய். மாநில குழாய் வாரியம், அதற்குத் தலைவர் கொளத்தூர் கோதண்டம் 1,10,063 ரூபாய். டெல்லி தனிப் பிரதிநிதி பட்டுராஜன் செலவு 1,82,185 ரூபாய். திருக்குறள் மையம், தலைவர் திருக்குறள் முனுசாமி, செலவு 48 ஆயிரம் ரூபாய்.

அடுத்து, அரசுக் கலைஞர்கள். அரசுக் கலைஞர்களில் அரசுக் கவிஞருக்குச் செலவு 1,49,000 ரூபாய். கலைஞர்கள் 32 பேரோ என்னவோ, ஒரு பெரிய ஆஸ்தானமே உண்டு. அந்த அரசுக் கலைஞர்களுக்கு செலவு 5,21,900 ரூபாய். தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழு தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. செலவு 2,40,000 ரூபாய். கோழி வாரியம், தலைவர் கல்யாணி ராமசாமி, 1,26,845 ரூபாய். மீன் வளர்ச்சிக் கழகம், தலைவர் முத்துராமலிங்கம் 3,91,998 ரூபாய். பால் வளர்ச்சிக் கழகம் தலைவர் செங்கம் ஜபார் 24,000 ரூபாய். தொழில் முதலீட்டுக் கழகம், தலைவர் எஸ். ஆர். இராதா (குறுக்கீடு) அதற்கு போட்டதே கிடையாது. காங்கிரஸ் கவர்ன்மெண்டிலேயும் கிடையாது, தி.மு.க. ஆட்சியிலேயும் போட்டது கிடையாது—தொழில் முதலீட்டுக் கழகம், எஸ். ஆர். இராதா 2,52,564 ரூபாய். பாடநூல் கழகம், தலைவர் மார்க்கபந்து 1,11,300 ரூபாய். ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம், தலைவர் கண்ணன் 58,560 ரூபாய். ஆக 45,77,576 ரூபாய் இவைகள் எல்லாம் கட்சிக்காரர்கள் என்று

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய பேச்சில் குறுக்கிட வேண்டும் என்பது அல்ல. அவர் சொல்வதெல்லாம் எங்களுடைய கணக்கைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடனேயே 2, 3 வாரியங்களில்தான் வாரியத் தலைவர்களைப் போடுவோம், மீதி போடவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போதுதான் பார்லியமெண்டரி செக்ரட்டரீஸ் எல்லாம் போட ஆரம்பித்திருக்கிறார்கள். இனி மேல்தான் அவர்களுடைய கதை தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் என்னமோ பெரிய விஷயம் சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்தேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சும்மா குறுக்கிட முடியாது நான் பேசி முடிக்கிறேன்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே ஏதாவது கருத்து வேறுபாடு இருந்தால்தான் நீங்கள் சொல்லலாமே தவிர, நோக்கம் கற்பிக்கக் கூடாது.

திரு. ஆர். அண்ணாநம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடந்த சில அலங்கோலங்களாக இங்கே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் முதல்வர் அவர்கள் பயன்படுத்தாத சொற்களை நீங்களே பயன்படுத்தி கொச்சைப் படுத்திக் கொள்ள வேண்டாம்.

திரு. ஆர். அண்ணாநம்பி: ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞருடைய தலைமையில் 7½ ஆண்டுக்காலம் இந்தத் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேசப் பட்ட செய்திக்கு உங்களுடைய மறுப்பு என்ன?

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் பேசியதில் ஏதாவது தவறு இருந்தால் அதைச் சொல்ல வேண்டும். வேறு விவாதம் என்றால் அதற்கு நீங்களும் தயாராக இருக்கலாம். மற்ற உறுப்பினர்களும் தயாராக இருக்கச் சொல்லி நானும் சொல்லிவிடுவேன். அது தேவையில்லை. நான் இப்போது சொன்னதில் என்ன தவறு என்று சொல்லுங்கள். அவ்வளவுதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சில அலுவல் சார்பற்றவர்கள்—ஆபீசர்ஸ் தவிர மற்றவர் களையும் போட்டிருக்கிறார்கள். நாங்கள் அப்படிப் போடப் போவதில்லை, ஒன்றிரண்டு தவிர மற்றவர்களெல்லாம் அதிகாரி களாகத்தான் போடப் போகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஒரு கொள்கை

முடிவு. ஆனால் அந்தச் செலவினங்களைப் பற்றி குறிப்பிட்ட போது ஒவ்வொரு கார்ப்பரேஷனிலேயும் அலுவல் சார்பற்றவர்கள் இல்லாமல் இருந்திருந்தால், அந்த இடத்திலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்திருப்பார். ஆக அந்தச் செலவு அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கும் ஆகத்தான் இருக்கும். டி ஐ ஐ சியிலே ஒரு சேர்மன், எம்.டி. அல்லது சேர்மன்-கம்-எம்.டி. என்று ஒரே ஆளாகக் கூட இருந்திருக்கிறார்கள். அதே மாதிரி நீங்கள் போடு கிறபோது அரசு அலுவலர்கள் யார் இருந்தாலும், இந்தச் செலவு, அவர்களுடைய சம்பளம், பயணப்படி இவையெல்லாம் உள்ளடக்கியது. ஆகவே அது வீண் செலவு அல்ல. அரசு அதிகாரிகளாக இருந்திருந்தாலும் ஆகின்ற செலவு தான். கொள்கை ரீதியாக நாங்கள் போடப்போவதில்லை என்று சொன்னால் அது வேறு பிரச்சினை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சி உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன். கட்சிக்காரர் களுக்குப் பதவி கொடுப்பதற்காக என்று சொன்னார். நான் படித்த பட்டியலிலே உள்ளவர்கள் எல்லாம் எந்தக் கட்சிக் காரர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் சொன்னேன். வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய முன்னாள் பேரவையினுடைய தலைவர் அவர்கள் ஏதாவது ஒரு பில் மேலவையிலிருந்து திரும்பி வந்திருக்கிறதா என்று கேட்டார்கள். விவாதிக்கப்பட்டு திரும்பி வந்திருக்கிறது. ஒன்றும் தவறு இல்லை. எப்போதுமே இரண்டு டாக்டர் களிடத்திலே கன்சல்டேஷனை வேண்டும் என்பார்களே, அதைப் போலத்தான் பேரவை, மேலவை என்பது. இரண்டு ஒப்பீனியன் பெறவேண்டும் என்பதற்காக. சட்டையைப் போட்டுக் கொண்டாலே போதும், பேனாவைக் கூட இங்கே சொருகிக் கொள்ளலாம். ஆனால் ஒரு பை பேனாவைச் சொருகிக்கொள்ள வைத்துக்கொள்கிறோம் அல்லவா, சில பொருள்களை வைத்துக் கொள்ள? நம்முடைய அப்பனார் அவர்கள் கூட இரண்டு பைகள் வைத்திருக்கிறார் (சிரிப்பு) ஒரு பையிலே பேனா, இன்னொரு பையிலே அவருக்குத் தெரியும் (சிரிப்பு). அது போலத்தான் பேரவை என்பது சட்டையைப்போல, மேலவை என்பது பையைப் போல கருதிக்கொள்ள வேண்டும்.

1989 பிப்ரவரி 20] [டாக்டர் மு. கருணாநிதி]

அவர்கள் சொன்னார்கள், எந்த மசோதா இங்கே திரும்பி வந்தது, எந்த பில் இங்கே திரும்பி வந்தது என்றெல்லாம் கேட்டார்கள். 1954 ஆம் ஆண்டு

The Madras Hindu Religious and Charitable Endowments Bill

இங்கே திருப்பி அனுப்பப்பட்டது. (குறுக்கீடு) சொல்கிறேன். 20 வருடங்களுக்கு வருகிறேன். 1956-ல்

The Madras Estate Land Reduction Rent Bill

இங்கே திரும்ப அனுப்பப்பட்டது. 1967-ல்
The Madras District Municipalities Amendment Bill

மேலவையிலே விவாதிக்கப்பட்டு, பேரவைக்குத் திரும்ப அனுப்பப் பட்டது 1967-ல்
The Indian Stamp Madras Amendment Bill
மேலவையிலே விவாதிக்கப்பட்டு பேரவைக்கு திரும்ப அனுப்பப் பட்டது. 1969-ல்
The Tamil Nadu Agricultural Land Record Ryotwari Rights Bill
திருப்பி அனுப்பப்பட்டது. 1971-ல்
The Motor Vehicles Tamil Nadu Amendment

திரும்ப அனுப்பப்பட்டது. எனவே—அதற்குப் பிறகு இல்லை என்கிறார்கள். அவர் முதலிலே 20 வருஷம் என்று கேட்டார். கணக்கு கொடுத்த பிறகு, அதற்குப் பிறகு என்ன என்று கேட்கிறார். ஆக திரும்ப அனுப்பப்பட்டதற்கான வரலாறு இருக்கிறது.

மேலவை என்பது நம்மைவிட மேதைகள் என்று அவர்களை நாம் ஏற்றுக்கொள்வதா என்கிற விவாதம் எல்லாம் இங்கே எழுந்தது. 'யாரொருவன் தன்னைவிட ஒரு அறிவாளி நாட்டிலே இருக்கிறான் என்று எண்ணுகின்றானோ, அவன் தான் அறிவாளி'. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே அப்படிப்பட்ட ஒரு மேலவை உருவாவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும்.

கொள்கை ரீதியான கருத்துக்களை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெற்றிருந்தாலும் கூட, நம்முடைய கட்சித் தலைவர்க ளெல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல, இதிலே தோழமைக் கட்சி, எதிர்க் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள்

எங்களுக்கு எதிர்காலத்திலும், நிகழ்காலத்திலும் மெத்தவும் பயன்படும் என்கின்ற அளவோடு அவர்களுக்கெல்லாம் நன்றி கூறி இதனை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நடந்த சிலவற்றை என்னென்ன செலவு, வாரியத் தலைவருக்கு, மற்றவர்களுக்கு என்ற புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னார்கள்.

அதேபோல், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையிலே ஏழரை ஆண்டுக் காலம் முதலமைச்சராக இதற்கு முன்பு இருந்திருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்சினை யின் பால் வராது. அருள்கூர்ந்து உட்காரவும். சொன்னதில் உங்களுக்கு என்ன மாறுபாடு? (குறுக்கீடு) புதிய கருத்தைச் சொல்லக்கூடாது என்பது விதி. அருள்கூர்ந்து உட்கார வேண்டும். அப்படி உட்காரவில்லையெனில், பிறகு கடுமையாக விமர்சிக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அது வேறு. வேறு சமயம் வரும்போது அதுபற்றி முழுக்க விமர்சிக்கலாம். உங்களுக்கு அதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே அது வரவே வராது. உட்காருங்கள்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில் இந்த மேலவையை உருவாக்கக்கூடிய தீர்மானத்தை நாங்கள் ஏற்கவில்லை என்பதை அரசியல் பூர்வமாகவும், கொள்கை பூர்வமாகவும் நாங்கள் தெளிவாக எடுத்து வைத்தோம். இறுதியாக அரசிற்கு ஒரு வேண்டுகோள் நாங்கள் வைத்தோம். இப்போதைக்கு இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றாதீர்கள் என்று. ஆனால் நிறைவேற்றவேண்டும் என்ற நிலையிலே அரசு இருக்கிறது என்று இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து தெளிவாகிவிட்டது. ஆகவே, தேவையில்லாத ஒரு மேலவையை உருவாக்குவதும், அதிகப்படியான பணச் செலவை ஏற்படுத்துவதும் வேறு விதத்தில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் இது எப்படி. . .

1989 பிப்ரவரி 20]

திரு. கே. ரமணி: சில விஷயங்களை உங்களுக்கு முன்னால் சமர்ப்பித்துவிட்டு, நான் என்ன செய்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்கிறேன். தலைவர் அவர்களே, ஆகவே, அப்படிப்பட்ட முறையில் நேரடியாக மக்களுடைய வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுத்து வருவதற்கு எல்லா வசதிகளும் இருக்கிறபோது, 'இன்டைரக்ட் ரெப்ரசன்டேஷன்' என்ற முறையில் மிக அடிப்படையான ஒரு கொள்கையின் மீதுதான் எங்களுடைய கட்சி இந்த விஷயத்தை முன் வைக்கிறது என்று சொல்லி, அதையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனால் இந்த நேரத்தில் தமிழ் நாட்டு மக்கள் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் அமோகமான ஓட்டளித்துத் தேர்ந்தெடுத்துள்ள இந்த அரசு தங்களுக்கு நன்மைகள் பல செய்யும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இன்றைய சூழ்நிலைமையில் இந்த அரசிற்கு ஒரு இடையூறோ, தோல்வியோ ஏற்படுத்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி விரும்பவில்லை. ஆகவே இதை ஆட்சேபித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று தங்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்]

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மேலவையிலிருந்து ஒரு சில பில்கள் இங்கே திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அது பாராட்டத் தக்கது. இந்த அவையானது அதை ஏற்றுக்கொண்டதா, இல்லையா என்ற தகவலைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. தீர்மானம் அவையின் முடிவுக்கு வைக்கப் பெற வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 169 (1)-ன்படி இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்று அறிய வாக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். பேரவையின் முடிவை அறிய எண்ணிக் கணிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். எனவே, பேரவைச் செயலாளர் அழைப்பு மணியை அடிப்பார்.

(பிற்பகல் 1-30)

(அழைப்பு மணி இரண்டு நிமிடங்கள் அடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன்.

(நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் முன்மொழிந்த கீழ்க்கண்ட தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்:

பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகைமுறைகளையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாகும் நிறைவுறு, இடைவுறு மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில், இந்திய அரசமைப்பின் 169 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் கீழ் நிறைவேற்றலாம் என்றும் இந்தப் பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப் பெற்றன:—

ஆதரித்தோர் ... 169

எதிர்த்தோர் ... 22

நடுநிலை வகித்தோர்—எவருமில்லை.

ஆதரித்தோர்.

1. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்.
2. திரு. பி. துரைசாமி.
3. திரு. அ. இரகுமான்கான்.
4. திரு. மு. இராமநாதன்.
5. திரு. பெ. சீனிவாசன்.
6. திரு. என். கணபதி.

1989 பிப்ரவரி 20]

7. திரு. வி. பி. இராசன்.
8. திரு. அன்பில் பொய்யாமொழி.
9. திரு. இளம்வழுதி.
10. திரு. மு. க. ஸ்டாலின்.
11. திரு. கே. அங்கமுத்து.
12. டாக்டர் கே. அண்ணாதுரை.
13. திரு. கே. அண்ணாதுரை.
14. திரு. ஆ. அதியமான்.
15. திரு. ச. அழகுவேலு.
16. திரு. வ. அன்பழகன்.
17. திரு. பெ. ஆசையன்.
18. திரு. டி. இராதாகிருஷ்ணன்.
19. திரு. நா. இராமகிருஷ்ணன்.
20. திரு. எ. எம். இராமசாமி.
21. திரு. எம். இராமச்சந்திரன்.
22. திரு. கே. வி. இராமசாமி.
23. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.
24. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்.
25. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.
26. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.
27. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்.
28. மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி.
29. மாண்புமிகு திரு. கோ. சி. மணி.
30. திரு. எல். கணேசன்.
31. மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்.
32. மாண்புமிகு திரு. ச. தங்கவேலு.
33. திரு. த. ஆறுமுகம்.
34. திரு. ஆ. நடராசன்.
35. திரு. அ. மலர்மன்னன்.
36. திரு. மா. மணிமாறன்
37. திரு. ரா. சின்னசாமி
38. திரு. இரெ. இராசமாணிக்கம்.
39. திரு. வி. கே. இராசு.
40. திரு. செ. இராமலிங்கம்.
41. திரு. ந. இராமச்சந்திரன்.
42. திரு. அ. இராசேந்திரன்.
43. திரு. தா. உதயசூரியன்.

44. திரு. எஸ். என். எம். உபயதுல்லா.
45. திரு. ஆர். எட்டியப்பன்.
46. திரு. க. சொ. கணேசன்.
47. திரு. சா. கணேசன்.
48. திரு. வே. கணேசன்.
49. திரு. என். கணேசமூர்த்தி.
50. திரு. ஏ. கணேசமூர்த்தி.
51. திரு. எஸ். பி. கண்ணன்.
52. திரு. கே. கந்தசாமி.
53. திரு. எஸ். எஸ். கருப்பசாமி.
54. திரு. க. கன்னையன்.
55. திரு. டி. ஆர். கஜபதி.
56. திரு. பி. காளியப்பன்.
57. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி.
58. திரு. எஸ். குணசேகரன்.
59. திரு. சு. குருநாதன்.
60. திரு. ஏ. கோதண்டம்.
61. திரு. வெ. கோவிந்தன்.
62. திரு. வி. சி. கோவிந்தசாமி.
63. திரு. சி. சண்முகம்.
64. திரு. ஏ. ஜி. சம்பத்.
65. திரு. ஆர். சாமிநாதன்.
66. திரு. சா. சிவசுப்பிரமணியன்.
67. திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.
68. திரு. எஸ். சிவலோகம்.
69. திரு. க. சுந்தரம்.
70. மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி.
71. மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்.
72. மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்.
73. மாண்புமிகு திரு. துரைமுருகன்.
74. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி.
75. மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்.
76. மாண்புமிகு திரு. கே. என். நேரு.
77. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.
78. திரு. வி. எம். தேவராஜ.
79. திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 20]

80. டாக்டர் க. காஞ்சனா.
81. திருமதி எஸ். பி. சற்குணம்.
82. டாக்டர் த. சாந்தகுமாரி.
83. திருமதி யசோதா செல்லப்பா
84. திரு. ப. சுந்தரம்.
85. திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
86. திரு. பெ. சு. திருவேங்கடம்.
87. திரு. கே. சுந்தர்.
88. திரு. ஏ. சுப்பு.
89. திரு. வ. சுப்பையா.
90. திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.
91. திரு. அ. க. சுப்பிரமணியம்.
92. திரு. ஏ. செங்குட்டுவன்.
93. திரு. செங்கை சிவம்.
94. திரு. ந. சௌந்திரபாண்டியன்.
95. திரு. அ. தங்கம்.
96. திரு. வே. தங்கபாண்டியன்.
97. திரு. என். தங்கவேல்.
98. திரு. வி. தமிழ்மணி.
99. திரு. ஏ. சி. தயாளன்.
100. திரு. கே. ஆர். ஜி. தனபாலன்.
101. திரு. வி. தனராஜ்.
102. டாக்டர் து. திருமூர்த்தி.
103. திரு. துரை சந்திரசேகரன்.
104. திரு. பெ. துரைபாண்டி.
105. டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன்.
106. திரு. பொ. நடராசன்.
107. திரு. எகால் மு. நடேச உடையார்.
108. திரு. ஆர். பஞ்சாட்சரம்.
109. திரு. டி. கே. பழனிச்சாமி.
110. திரு. மா. பன்னீர்செல்வம்.
111. திரு. ராம. நாராயணன்.
112. திரு. அ. வே. பாலசுப்பிரமணியன்.
113. திரு. எஸ். பால்ராஜ்.
114. திரு. கே. பிச்சாண்டி.
115. திரு. இ. புகழேந்தி.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

116. திரு. என். பெரியசாமி.
117. திரு. ஐ. பெரியசாமி.
118. திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்.
119. திரு. எம். அப்துல் லத்தீப்.
120. திரு. பொன். விஜயராகவன்.
121. திரு. பி. என். வல்லரசு.
122. திரு. ஆஸ்கார் சி. நிக்லி.
123. திரு பா. அப்துல் சமத்.
124. திரு. ஜி. ஜி. குருமூர்த்தி.
125. திரு. அ. பெரியண்ணன்.
126. திரு. டி. பொன்முடி.
127. திரு. ஜி. பொன்னுபிள்ளை.
128. திரு. எம். சேட்டு.
129. திரு. எம். முகமது சித்திக்.
130. திரு. ஆர். மகேந்திரன்.
131. திரு. ஆச்சியூர் எம். மணி.
132. திரு. இரா. மதிவாணன்.
133. திரு. பா. மனோகரன்.
134. திரு. கோ. பூவராகன்.
135. திரு. அ. மு. ஹமீது இப்ராகிம்.
136. டாக்டர் சி. ரா. மாசிலாமணி
137 திரு. தி. ரா. மாசிலாமணி.
138. திரு. அ. மாரிமுத்து.
139. திரு. ப. முத்துசாமி.
140. திரு. எம். முத்தையா.
141. திரு. எம். முத்தையன்.
142. திரு. பொ. முருகேசன்.
143. திரு. வ. முல்லைவேந்தன்.
144. திரு. எஸ். ஆர். முனிரத்தினம்.
145. திரு. எல். மூக்கையா.
146. திரு. இரா. மோகன்.
147. திரு. சி. ராமச்சந்திரன்.
148. திரு. கே. ராமச்சந்திரன்.
149. திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி.
150. திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்.

1989 பிப்ரவரி 20]

151. திரு. ஆர். வரதராசன்.
152 திரு. பெ. வெங்கடாசலம்.
153. திரு. கி. வேணு.
154. திரு. மீ. அ. வைத்தியலிங்கம்.
155. திரு. ஏ. தங்கராஜு.
156. திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.
157. திரு. ஜி. கருப்பையா மூப்பனார்.
158. திரு. குமரி அனந்தன்.
159. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
160. திரு. எஸ். டேனியல் ராஜ்.
161. திரு. எம். மோசஸ்.
162. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.
163. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
164. திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி.
165. திரு. பி. வி. இராஜேந்திரன்.
166. திரு. வெ. கோபாலகிருஷ்ணன்.
167. திரு. ஆர். சிங்காரம்.
168. திரு. ரா. சொக்கர்.
169. திரு. ஆர். நடேசன்.

எதிர்த்தோர்.

1. திரு. சோ. அழகர்சாமி.
2. திரு. ரெ. பிச்சைமுத்து.
3. திரு. ந. நஞ்சப்பன்.
4. திரு. எஸ். திருநாவுக்கரசு.
5. திரு. பி. எச். பாண்டியன்.
6. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.
7. திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
8. திரு. கே. அர்ஜுனன்.
9. திரு. ஆர். அண்ணாநம்பி.
10. திருமதி பி. லட்சுமி.
11. திரு. வி. கே. சின்னசாமி.
12. திரு. எஸ். டி. உகம்சந்த்.
13. திரு. ஆ. அறிவழகன்.
14. திரு. வெ. இராசு.
15. திரு. சி. கிருஷ்ணன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

16. திரு. கே. சின்னசாமி.
17. திரு. வே. நா. சுப்பிரமணியன்.
18. திரு. எம். தங்கவேல்.
19. திரு. அ. பாப்பா சுந்தரம்.
20. திரு. கொ. மாதப்பன்.
21. திரு. பி. மாரப்பன்.
22. திரு. ஆர். மூக்கன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்கு மேலும், இன்று அவையில் வாக்கெடுப்பின் போது வாக்களித்தவர்களில் மூன்றில் இரண்டு பாகத்திற்கு மேலும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளபடியால், தனித்தீர்மானம் அவையால் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று; நாளை (21—2—1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்குள் ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS